ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை
அருளிச்செய்த

திருவாசிரிய வ்யாக்யானம்

மூன்றாம் பதிப்பு

(ஸுதர்சனம் ஆசிரியரின் எளியநடை
விவரணத்துடன் கூடியது)

(பதவுரையுடனும் அரும்பதவுரையுடனும் கூடியது.)

பதிப்பாசிரியர் :-

S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,

(ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர்)

3-B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

விலை ரூ. 25.00 2007 (தபாற்கூலி தனி)

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

2594

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

இணையப் பல்கலைக்கழக
வ.எண்: 25944
நாள்: 27.10.09
நூலகம்

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

திருவாசிரிய வ்யாக்யானம்

மூன்றாம் பதிப்பு

(ஸுதர்சனம் ஆசிரியரின் எளியநடை விவரணத்துடன் கூடியது)

(பதவுரையுடனும் அரும்பதவுரையுடனும் கூடியது.)

பதிப்பாசிரியர் : –

S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட் ,

(ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர்)

3-B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி–620 017.

விலை ரூ. 25.00 2007 (தபாற்கூலி தனி)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸூரயே நம:

முதற்பதிப்பின் முகவுரை

"நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்—அன்புடையோர்
சாற்று திருநாமங்கள்" என்ருர் மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில். பெரிய பெருமாள் பொங்கும் பரிவாலே பராங்குசனை நம்மாழ்வார் என்றே எப்போதும் அழைப்பர். திருவத்யயனோத்ஸவத்துக்கு வரும்படி ஆழ்வாருக்குத் திருமுகம் அனுப்பும் போதும் 'நம்மாழ்வார்' என்ற திரு நாமமிட்டே அனுப்புவர். ஒரு ஸமயம் அர்ச்சையிலெழுந் தருளியிருக்கும் பெருமாளும் ஆழ்வாரும் யாத்ருச்சிகமாக ஓரிடத்தில் சந்தித்தபோது "நம்முடைய ஆழ்வார்! நம் மருகே வாரும்" என்று தம்முடைய ஸிம்ஹாஸனத்திலே வைத்துக்கொண்டு முத்தின் சட்டையும் வட்டமணை முத லான வரிசைகளையும் ப்ரஸாதித்துத்*தம்மையே ஒக்க அருள் செய்தார் என்கிற ஐதிஹ்யமும்உண்டு. "நஞ்சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப" என்று கம்பநாட்டாழ்வார் பாடியிருக்கிருர். நாத முனிகளும், அவரை யோகத்தினுல் ஸாக்ஷாத்கரித்து, த்வ யம் முதலாகத் திருவாய்மொழியீருகவுள்ளவற்றை உப தேசம் பெற்றதினுல் 'நம் ஆழ்வார்' என்று அபிமானித்தார். ஆளவந்தாரும் "ந: குலபதே:". [நம்முடைய குலபதியி னுடைய] என்று அருளிச்செய்தார். இவைகளினுல் இவருக்கு ப்ரபந்நஜநகூடஸ்தர் என்னும் திருநாமமும் வழங்கிவரு கிறது. கொள்வாருமுண்டோ என்று படுகாடுகிடக்கும் க்ருபாதிசய்த்தை உடையவன் கோயிலரங்கன். "பாடினுன் அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்கிறபடி அருள் மாரியாக அருளிச்செயலமுதத்தைப் பொழிந்தவன் அருள்

மாறன். ''படைத்தான் கவி'' என்று தம்மைத்தாமே பேசிக் கொண்டார் திருவாய்மொழியில். திருவிருத்தத்தில் ''திரு மாலவன்கவி'' என்று தம் பிரபந்தத்தின் பெருமையையும பாடினார்.

''நமோ வாசே யா சோதி₃தா யாச அநுதி₃தா (अनुदिता) தஸ்யை வாசே'' என்று வேதபுருஷன், உதித்த வேதத்துக் கும், உதக்கப் போகிற வேதத்துக்கும் நமஸ்காரம் செய்தார். தமிழ் மறை உதிக்கப்போவதைப் பண்டைமறை இப்படிப் பேசிற்று. ஸம்ஸ்க்ருதவேதமோ தான்தோன்றி, அடியற்றி ருக்குமதே அதன் ஏற்றம். தான்தோன்றியாக இராமல் நம்மாழ்வாரால் நான்கு பிரபந்தங்களாக அருளிச்செய்யப் பட்ட ஏற்றம் தமிழ்மறைக்குண்டு. ''வேதம் தமிழ் செய்த மாறன்'' என்றும், ''ஶட₂ாரே: உபநிஷத₃ாமுபகா₃நமாத்ர போ₄க₃:''என்றும் நாதமுனிகளும் 'யம் ஸம்ஸ்க்ருதத்₃ராவிட₃ வேத₃ஸூக்தை:'' என்று பட்டரும் இவை தமிழ் மறைகள் என்பதை அருளிச்செய்திருக்கிறார்கள். ஆசார்யர்கள் இதற்கு அபௌருஷேயத்வமும் உண்டென்று அபிப்ராயப்பட்டிருக் கிறார்கள். ஆழ்வார் மூலமாக இந்நான்கு பிரபந்தங்களும் உலகிற்கு வெளியிடப்பட்டபடியால் ''குருகூர்ச் சடகோபன் பண்ணிய'' என்று சொல்லத் தட்டில்லை. பண்டை வேதத் தைச் சிலரே அதி₄கரிக்கலாம். ஆழ்வார் அருளிச் செயல் களுக்கு ஆகாதாரில்லை. ஸம்ஸ்க்ருத வேதம் கல்லும் மண் ணும் கலந்த கட்டிப்பொன் போன்றது. இத்தமிழ்வேதம் பணிப்பொன்போன்றது. பண்டை மறையில் அந்தந்த அதி₄காரிகளுக்குத் தகுந்தபடி ஶ்யேநயாக₃ாதி₃கள், தேவ தாந்தர ஸ்தோத்ரங்கள் முதலானவையும் இங்கும் அங்கும் காணப்படும். இப்பிரபந்தங்களிலோ பரப்₃ரஹ்மஶப்₃த₃வாச்ய னை ஶ்ரிய: பதியின் ஸ்வரூபரூபகு₃ணங்களைப்பேசும் பேரின் பம் விளைக்கும்பாசுரங்களே நிறைந்திருக்கும். மறந்தும் புறந் தொழாமாந்தர்கள் மனத்திற்குகந்ததான பரதத்வ நிர்ண யத்தைப் பராங்குசன் ''ஓ ஓ உலகினதியல்வே''முதலானபல பாசுரங்களில் பண்ணியிருக்கிறார். இக்காரணங்களால் இவ ருடைய பிரபந்தங்களே சுடர்மிகு சுருதி என்று ஆசார்யர் கள் அறுதியிட்டிருக்கிறார்கள்.

திருவாசிரியம் யஜுர்வேதஸாரம்என்றும், பெரியதிருவந்தாதி அதர்வணவேதஸாரம் என்றும் பெரியோர்களால் பேசப்படுகிறது. இவ்விரு பிரபந்தங்களுக்கும் பெரியவாச்சான் பிள்ளையொருவரே வ்யாக்யானம் செய்திருக்கிறார். அவருடைய வாசாமகோசரமான பெருமைகளில் சிறிது நம்மால் பலவிடங்களில் உணர்த்தப்பட்டது. "உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்" எனப்பட்ட ஆழ்வார் திருநக்ஷத்ரதினத்தன்று இவ்விரு பிரபந்தங்களும் வெளியானது ஆழ்வாருடைய க்ருபாபலமேயாகும்,

பராங்குச திருவவதாரஸூ 5053
கர வருஷம்
வைகாசி விசாகம்.

இங்ஙனம்,
தொண்டரடிப்பொடி
கி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்

ஸ்ரீ:

இரண்டாவது பதிப்பின் முகவுரை

[ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம், திருச்சி-17.]

ப்ரபந்த ஜனகூடஸ்தரான நம்மாழ்வார் ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் நாலு வேதங்களின் ஸாரமாக முறையே திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி ஆகிய நாலு திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்தார். இவற்றில் ரிக்வேத விஷ்ணு ஸூக்தங்களை விளக்குவதாய் அமைந்தது நூறு பாட்டுக்கள் கொண்ட திருவிருத்தம்; ஏழு காண்டங்கொண்ட யஜுர்வேதத்தின் ஸாரமான நாராயணநுவாகத்தை விளக்குவதாய் அமைந்தது ஏழு பாடல்கள் கொண்ட இத்திருவாசிரியம். அதர்வண வேதத்தைச் சேர்ந்த முண்டகம் முதலான உபநிஷத்துக்களை விளக்குவதாய் அமைந்தது மூன்றாவது பிரபந்தமான பெரிய திருவந்தாதி. ஆயிரம் ஶாகைகள் கொண்ட ஸாமவேதத்தின் ஸாரமான

சாந்தோக்ய உபநிஷத்தை விளக்குவதாய் அமைந்தது ஆயிரம் பாடல்கள் கொண்ட திருவாய்மொழி. ரஹஸ்ய த்ரய விவரணமாகவும் இந்த நாலு திவ்யப்ரபந்தங்களும் அமைந்தன, அஷ்டாக்ஷரத்தில் ப்ரணவத்தையும் நமஶ்ஶப்₃ தத்தையும் விளக்குவது திருவிருத்தம்; 'நாராயணாய' என்னும் மூன்றாவது பதத்தை விளக்குவது இத்திருவாசிரியம், சரமஶ்லோகத்தை விளக்குவதாய் அமைந்தது பெரிய திருவந்தாதி; த்வயத்தை விளக்குவதாக அமைந்தது தீர்க்க சரணாகதியான திருவாய்மொழி.

இவற்றில் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி ஆகிய இரண்டு கிரந்தங்களும் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்துடன் எந்தையாரால் கரவருடம் வைகாசி விசாகத்தில் (நாற்பது வருடங்களுக்கு முன்பு) வெளியிடப் பெற்றது. கடந்த ஒரு வருடகாலமாக நம்முடைய விவரணத்தோடு கூடிய இந்தத் திருவாசிரிய வ்யாக்யானம் ஸு₂தர்சனத்தில் வெளியிடப்பெற்று ஸ்ரீமுக வருடம் பங்குனி உத்தரத்தில் [27—3—94] புத்தகமாக வெளியாகிறது.

இதே முறையில் பெரிய திருவந்தாதி வ்யாக்₂யானமும் நம்முடைய விவரணத்துடன் தொடர்ந்து வெளியிடப் பெற்று இரண்டு வருடங்களுக்குள் புத்தகமாக வெளியிடப் படும். திருவிருத்த வ்யாக்₂யானங்களும் தனிப்புத்தகமாக வெளிவர ஏற்பாடுகள் நடக்கின்றன திருவாய்மொழியின் வியாக்கியானங்கள் அடங்கிய பகவத்விஷயம் ஐந்து பத்துக் கள் வெளியாகி விட்டன. மற்ற பத்துக்களும் பிரமாணத் திரட்டு முதலானவையும் இன்னும் இரண்டு வருடங்களுக் குள் வெளிவரவேண்டும் என்று எம்பெருமானையும் ஆழ்வாரையும் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீமுக
பங்குனி உத்தரம்,
27—3—1994.

தாஸன்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

திருவாசிரிய வ்யாக்யான ப்ரமாண அநுக்ரமணிகை

1.	ஆதி3த்ய வர்ணம்	25—5
2.	ஆநந்த3மய:	30—11
3.	ஆயுராஶாஸ்தே	46—14
4.	ஆஶயா யதி3	71—18
5.	ஏகஸ்மிந்நப்யதி	68—17
6.	ஏகோ ஹ வை	49—15
7.	கத2ம் ந்வயம்	86—22
8.	கதா3 புந:	28—7
9.	கலௌ புந:	2—1
10.	கலேஶோ ऽதி4க	31—12
11.	க3திமிச்சே2த்	74—19
12.	தி3விஸூர்ய	13—2
13.	த்4ருவா ஸ்ம்ருதி:	29—9
14.	நிதி2த்4யாஸி	76—20
15.	நூபுராத்3யபரிமித	16—3
16.	பாவநார்த்த2ம்	60—16
17.	ப3ஹுஸ்யாம்	26—6
18.	ப்3ரஹ்மாணம்	89—23
19.	யஶோதா3ஸ்தந	85—21
20.	ருத்3ரம் ஸமா	22—4
21.	ஸங்கா3த்ஸஞ்ஜா	29—8
22.	ஸாராஸாரவிவே	34—13
23.	ஸுஸுக2ம்	29—10
24.	ஸ்கந்த3ருத்3ர	90—24

நம்மாழ்வார் திருநக்ஷத்திரத் தனியன்

वृषभे तु विशाखायां कुरुकापुरिकारिजम् ।
पाण्ड्यदेशे कलेरादौ शठारिं सैन्यपं भजे ॥

வ்ருஷபே4 து விஶாகா2யாம் குருகாபுரிகாரிஜம் ।
பாண்ட்3யதே3ஶே கலேராதௌ3 ஶடா2ரிம் ஸைந்யபம் ப4ஜே ।

நம்மாழ்வார் வாழித்திருநாமம்

ஆனதிருவிருத்தநூறநளிறன் வாழியே
ஆசிரியமேழுபாட்டளித்தபிரான் வாழியே
ஈனமிலந்தாதியெண்பதேழீந்தான் வாழியே
இசைகொள் மறையாயிரநூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் புகழ்மிக்க நாவீறன் வாழியே
வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர்கோன் அவதாரம் செய்தவள்ளல் வாழியே
திருக்குருகைச்சடகோபன் திருவடிகள் வாழியே,

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தோன் வாழியே
ஆதிகுருவாய்ப் புவியிலவதரித்தோன் வாழியே
அனவரதஞ்சேனையர்கோன் அடிபணிவோன் வாழியே
நாதனுக்கு நாலாயிரமளித்தான் வாழியே
நர்மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில்வாழியே.

பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்திரத் தனியன்

सकलद्राविडाम्नायसारव्याख्यानकारिणम् ।
श्रावणे रोहिणीजातं कृष्णसंज्ञमह भजे ॥

ஸகலத்3ராவிடா3ம் நாயஸாரவ்யாக்2யாநகாரிணம் ।
ஶ்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ணஸம்ஜ்ஞமஹம் ப4ஜே ॥

வாழித்திருநாமம்

தண்மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்கவந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே
மறைநாலின்பொருள்தன்னைப்பகுத்துரைத்தான்வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரதராசர் தாள் அனவரதம் வாழியே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

திருவாசிரியத்தனியன் வ்யாக்யாநம்

அருளாளப்பெருமாளெம்பெருமானாரருளிச்செய்த

தனியன்

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசிரியப் பாவதனா லருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

பதவுரை:— காசினியோர் தாம் — இப்பூமியிலுள்ள மனுஷ்யர்கள், வாழ — உய்யும்பொருட்டு, கலியுகத்தே — கலியுகத்தில், வந்து —(பரமபதத்திலிருந்து)வந்து, உதித்து — அவதரித்து, ஆசிரியப்பா அதனால் — ஆசிரியப்பா என்னும் பாட்டுக்களாலே, அருமறை நூல் — சிறந்தவேதமாகிற சாஸ்திரத்தை, விரித்தானை — பரப்பியவரும், தேசிகனை — (எல்லாருக்கும்) ஆசார்யரும், திகழ் வகுளத்

அவதாரிகை:— (காசினியோர் தாம் வாழ) "திருவாசிரியமாகிற திவ்யப்ரபந்ததர்ஶியாய், தேசிகராயிருக்கிறவரை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவாசிரியத் தனியன் வ்யாக்யாந விவரணம்

[ஸுதர்சனர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்]

அவதாரிகை:— இத்தனியனை அருளிச்செய்தவர் எம்பெருமானாருடைய அந்தரங்கசிஷ்யர்களில் ஒருவரான அருளாளப்பெருமாள் எம்பெருமானார். இவர் எம்பெருமானாரால் ஆட்கொள்ளப்படுவதற்கு முன் "யஜ்ஞமூர்த்தி" என்னும் அத்வைதியாய் இருந்தவர். "யஜுர்வேத ஸாரமான திருவாசிரியமாகிற திவ்யப்ரபந்தத்தைக் கண்டவராய், ஆசார்யரா

தாரானே — விளங்கா நின்றுள்ள மகிழம்பூமாலையை அணிந்தவருமான, பராங்குசனே — நம்மாழ்வாரை, மாசு அடையா-அழுக்கற்ற, மனத்து வைத்து — மனஸ்ஸிலே வீற்றிருக்கச் செய்து, மறவாமல் — மறவாதபடி, வாழ்த்துதுமே — மங்களாசாஸனம் பண்ணக்கடவோம்.

நிர்மலமான ஹ்ருதயத்திலே வைத்து விஸ்ம்ருதியின்றிக்கே நிரந்தர மங்களாஶாஸனம் பண்ணுங்கோள்'' என்கிறது.

வ்யாக்யானம்:— (காசினியோர் தாம்வாழ) கண்டதுக்கு மேல் ஒன்றறியாத பூமியிலுண்டான மனுஷ்யர் ஜீவிக்க. (கலியுகத்தே வந்துதித்து)1. ' कलौ पुनः पापरताभिभूते-भक्तात्मना स उद्बभूव'' (கலௌ புந: பாபரதாபிபூதே பக்தாத்மநா ஸ உத்பபூவ) என்கிறபடியே ஜ்ஞாநத்துக்கு அடைவில்

யிருக்கிற நம்மாழ்வாரை, குற்றமற்ற நெஞ்சிலே வைத்து மறவாமல் எப்போதும் பல்லாண்டு பாடுங்கள்'' என்று அனைவரையும் அழைக்கிறார் இதில்.

வ்யா:—(காசினியோர் தாம் வாழ) நேரே கண்டதற்கு மேலே ஒன்றை அறியாத இந்த பூமியிலுள்ள மனிதர் உய்வதற்காக; ''காஶதே இதி காஶிநீ'' [வெளிப்படையாகப் பிரகாசிக்கிறதாகையாலே 'காசினீ' என்று சொல்லப்படுகிறது பூமி] என்னும் வ்யுத்பத்தியாலே ''காஶிநீ'' என்னும் வடசொல் 'காசினி' என்னும் தமிழ்ச் சொல்லாகி வெளிப்படையாகத் தோன்றும் பூமியைக் குறிக்கிறது. காசினியோர் என்றதால் 'கண்டதே காட்சி' என்கிறபடியே ''நேரே கண்டதற்குமேலே ஒன்றில்லை'' என்னும் லோகாயதமதத்தைப் பின்பற்றியவர்களைக் குறிக்கிறது. (கலியுகத்தே வந்துதித்து).

1. கலௌ புந: பாபரதாபிபூதே........
பக்தாத்மநா......ஸ உத்பபூவ

[பாபத்திலேயே ஈடுபட்ட மனிதர்கள் நிறைந்த கலிகாலத்தில் அந்த பகவான் பக்தரூபியாகத் தோன்றினார்.] என்கிறபடியே அறிவு நலிவுற்றிருக்கும் கலிகாலத்திலே, — ''க்ருத

லாத கலிகாலத்திலே யுகவர்ணக்ரமாவதாரமென்னலாம்படி ஆழ்வாரவதரித்தருளினராயிற்று. (வந்துதித்து)லோகாந்தரத்தில் நின்றும் இங்கே வந்துதித்தாரென்னுமது தோற்றுகிறது. * 'முன்னே வந்துதித்து'' என்னுமாபோலே, ‡வகுளபூஷண பாஸ்கரோதயமிறே. மேலே ''வகுளத்தாரானை'' என்றிறே இருக்கிறது.

அவதரித்துச்செய்த கார்யமின்னதென்கிறது மேல்— (ஆசிரியப்பாவதனாலருமறைநூல் விரித்தானை) என்று. தமிழுக்கு அநேகம் பாக்கள் உண்டாயிருக்கவும் ஆசிரியப்பா

யுகத்திலே தத்தாத்ரேயனாகவும் பரசுராமனாகவும் பிராம்மண வர்ணத்திலும், திரேதாயுகத்திலே சக்ரவர்த்தித்திருக்குமாரனாக க்ஷத்ரியவர்ணத்திலும், துவாபரயுகத்திலே முடியுரிமை இல்லாமையாலே வைசியப் பிராயரான வஸுதேவருக்கும், வைசியரான நந்த கோபருக்கும் பிள்ளையான கண்ணனாகவும் அவதரித்த எம்பெருமானே, நாலாவது யுகமான கலியுகத்திலே நான்காவது வர்ணத்தில் பிறந்தவரான காரியாருக்கும் உடையநங்கையாருக்கும் குமாரரான சடகோபராக அவதரித்தானோ''என்று அறிவாளிகள் நினைக்கும்படி ஆழ்வார் அவதரித்தருளினாராயிற்று. (வந்துதித்து) நித்யவிபூதியிலிருந்து இங்கே வந்து அவதரித்தார் என்னும் அர்த்தம் தோற்றுகிறது. ''மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து'' [உபதேசரத்தின-7] என்று மாமுனிகளும் முதலாழ்வார்களைப் பற்றி அருளிச்செய்தாரன்றோ; ''வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே'' [ஆசார்யஹ்ருதயம் 83] என்று சடகோபாஷ்டகத்தை அடியொற்றி ஆசார்ய ஹ்ருதயகாரரும் நம்மாழ்வாராகிற சூரியன் உதித்ததாகக் கூறினாரன்றோ. இத்தனியனிலும் ''வகுளத்தாரானை'' என்றல்லவோ நம்மாழ்வார் குறிப்பிட்டார்.

அவதரித்துச் செய்த காரியம் என்ன என்பதைக் காட்டுகிறார் மேல்—(ஆசிரியப்பாவதனால் அருமறைநூல் விரித்தானை) தமிழில் வெண்பா முதலான பலவகையான பாக்கள் இருந்தபோதிலும் ஆசிரியப்பாவாலேயாயிற்று திருவாசிரியமாகிற

* உபதேசரத் 7. ‡ சடகோபாஷ்டகம் 4.

வாலேயாயிற்று திருவாசிரியம்செய்தருளினது. அருமறை நூல் விரிக்கையாவது—அரிய வேத₃மாகிற ஶாஸ்த்ரத்தை விஸ்த்ருதமாக்கி அதுவே நிரூபகமாம்படியானவரை; அருமறை நூலை ‡ வண்டமிழ் நூலாக்கினவரை. (தேசிகனைப் பராங்குசனை) வேத₃ார்த்த₂ த₃ர்ஶியான பராங்குஶ தே₃ஶிகரை. (திகழ்வகுளத்தாரானை) விளங்காநின்ற திருமகிழ் மாலையைத் திருமார்பிலேயுடையவரை. "தண்டுளவத் தாரானை" என்னுமாபோலே. "தாமம்துளவோ வகுளமோ" என்னக்கடவதிறே. (மாசடையா மனத்துவைத்து) § "மாசற்ருர் மனத்துளானை" என்றும், ‖ "தெளிந்தவென் சிந்தையகங்கழியாமே" என்றும், நிர்மலமான மனஸ்ஸிலேவைத்து; "வண்குருகைக் கோனுரும் நம்முடைக் குடி வீற்றிருந்தார்" என்னும்படி ஸஹ்ருத₃யமாக வைத்து; பரமஹம்ஸராகை

இந்த திவ்யப்ரபந்தத்தைச் செய்தது. அருமறைநூல் விரிக்கையாவது:— அரிய வேத₃மாகிற சாஸ்திரத்தை விவரிக்கை. 'அருமறைநூல் விரித்தான்' என்று அதுவே பேராம்படி ஆனுர். என்கிறது. அருமறை நூலை "வண்டமிழ் நூற்க" [திருவாய் 4-5-10] என்கிறபடியே தமிழ் நூலாக ஆக்கினவரை. (தேசிகனைப் பராங்குசனை) வேதப்பொருளை ஸாக்ஷாத்கரித்தவரான பராங்குசன் என்னும் ஆசாரியரை. (திகழ் வகுளத்தாரானை) பிரகாசிக்கின்ற திருமகிழ்மாலையைத் திருமார்பிலே உடையவரை; "தண்டுளபத்தாரானை [ ] என்று எம்பெருமானைச்சொன்னதுபோலே. "தாமம் துளவோ வகுளமோ" என்று நம்மாழ்வாரை எம்பெருமானுகவே தமிழ்க் கவிகள் பாடிய பாட்டிலே சொல்லப்பட்டதன்ருே. (மாசடையா மனத்து வைத்து) "மாசற்ருர் மனத்துளானை" [திருமாலை 22] என்றும், "தெளிந்த என் சிந்தை அகம் கழியாமே" [திருவாய் 9-2-4] என்றும் சொல்லுகிறபடியே குற்றமற்றுத் தெளிந்திருக்கும் மனத்திலே வைத்து. "வண்குருகைக் கோனுரும் நம்முடைக் குடிவீற்றிருந்தார்" என்னும்படி நம்முடைய நெஞ்சிலே பொருந்தவைத்து. விஷயவைராக்₃யமுடைய பரமஹம்ஸராகையாலே அடியார்களுடைய நெஞ்சத்தாமரையாகிற

---

‡ திருவாய் 4-5-10 § திருமாலை 22. ‖ திருவாய் 9-2-4.

யாலே மாநஸபத்மாஸநத்திலேயிறே இருப்பது. (வகுளத் தாரானை மாசடையா மனத்துவைத்து)] "நாட்கமழ் மகிழ் மாலை மார்வினன் மாறன் சடகோபன்" என்னும்படியான ஆழ்வாரை, / "சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் சீர்" என்னும்படி ஶுபாஶ்ரயமாக பாவித்து பக்திபண்ணி வைத்து.

(மறவாமல் வாழ்த்துதுமே) விஸ்ம்ருதியின்றிக்கே இவ்விருப்புக்கு மங்களாஶாஸநம் பண்ணுவோம். அவரும் * "ஊழிதோறூழியோவாது வாழியவென்றுயாம் தொழவிசையுங்கொல்" என்றாரிறே.

இத்தால் — ஆழ்வார் திவ்யமங்களவிக்ரஹமே ஶுபாஶ்ரயமென்னுமத்தையும், மங்களாஶாஸந விஷயமென்னுமத்தையும் சொல்லிற்றாயிற்று.

திருவாசிரியத் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே ஶரணம்

பத்மாஸனத்திலேயன்றோ இவர் வீற்றிருப்பது. (வகுளத் தாரானை மாசடையா மனத்து வைத்து) "நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன் மாறன் சடகோபன்" [திருவாய் 4-10-11] என்று தன்னைத் தானே பாடிய நம்மாழ்வாரை "சடகோபனை, சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் சீர்" [இராமாநுச 18] என்று அமுதனார் பாடியபடியே தியானத்துக்கு மங்களமான விஷயமாக நினைத்து பக்தி செய்து.

(மறவாமல் வாழ்த்துதுமே) மறதியில்லாமல் இருக்கும் இந்த நிலைக்குப் பல்லாண்டு பாடக்கடவோம். நம்மாழ்வாரும் "ஊழி தோறூழியோவாது வாழியவென்று யாம் தொழவிசையுங்கொல்" [திருவாசிரியம் 4] என்று இப்படி என்றும் பல்லாண்டு பாடவே ஆசைப்பட்டாரன்றோ.

ஆக, இப்பாட்டால் ஆழ்வாருடைய திவ்யமான திருமேனியே தியானிக்கத்தகுந்த மங்களமான விஷயம் என்றும், பல்லாண்டு பாடுவதற்கும் அதுவே விஷயம் என்றும் சொல்லப்பட்டதாயிற்று.

தனியன் வ்யாக்யான விவரணம் முற்றிற்று.

] திருவாய் 4-10-11 / இராமாநுசநூ 18. * திருவாசிரி 4.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்தது

திருவாசிரிய வ்யாக்யாநம்

அவதாரிகை

திருவிருத்தத்தில், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளைக் காட்டிக்கொடுக்கக் கண்டு, அவனுடைய நித்யவிபூதியோகத்தையும் லீலாவிபூதியோகத்தையும் அநுஸந்தித்து, நித்ய விபூதியிலுள்ளார் நிரதிசயாநுபவமே யாத்ரையாயிருக்கிறபடியையும், அதுண்டறுக்கைக் கீடான ஆரோக்யத்தையுடையராயிருக்கிறபடியையும், இவ்வருகுள்ளார் கர்மபரதந்த்ரராய், இதர விஷயங்களிலே ப்ரவணராய், தண்ணிதான தேஹயாத்ரையே போகமாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, ப்ராதாக்களிலே சிலர்

திருவாசிரிய வ்யாக்யான விவரணம்

அவதாரிகை

திருவிருத்தத்தில் ஸர்வேச்வரன் தன்னுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள் உபயவிபூதிகளாகிற செல்வங்கள் ஆகிய அனைத்தையும் இவ்வாழ்வாருக்கு "மயர்வற மதிநலம் அருளினன்" [திருவாய் 1-1-1] என்கிறபடியே காட்டிக்கொடுக்க அவற்றைக்கண்டு, அவன் நித்யவிபூதியோடும் லீலாவிபூதியோடும் கூடியிருப்பதையும் நெஞ்சிற்கொண்டு, நித்யவிபூதியாகிற பரமபதத்தில் இருப்பவர்கள் எப்போதும் எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவிப்பதே போதுபோக்காயிருக்கிறபடியையும், அப்படி அநுபவிப்பதற்குத் தக்கபடி ரோகம் முதலான தாழ்வுகளற்றவர்களாய் இருக்கிறபடியையும், இந்தலீலாவிபூதியிலிருப்பவர்கள் கர்மத்துக்குவசப்பட்டவர்களாய் ப்ராக்ருதமான விஷயங்களிலே ஈடுபட்டவர்களாய், மிகத்தாழ்ந்த உடலுக்கான வாழ்க்கையையே போகமாகக் கொண்டிருப்பவர்களாய் இருக்கிறபடியையும்நெஞ்சிற்கொண்டு, கூடப்பிறந்த சகோதரர்களில்

ஜீவிக்க ஒருவன் குறைய ஜீவிக்கப்புக்கால் தன் குறையை அநுஸந்தித்து வெறுக்குமாபோலே, ஸர்வேஶ்வரனோடே நித்யாநுபவம்பண்ணுகிறவர்களோடொக்கத் தமக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் தாம் அத்தை இழந்திருக்கிறபடியை அநுஸந்தித்து, "இதுக்கடி தேஹஸம்பந்தம்" என்று பார்த்து, இத்தைக் கழித்துக்கொள்ளலாம் வழி தன் பக்கலிலொன்றுங் காணாமையாலே "இந்த ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினோட்டை ஸம்பந்தத்தை அறுத்துத்தரவேணும்" என்று அவன் திருவடிகளிலே தம்முடைய தசையை விண்ணப்பஞ்செய்தார். இதுபின்னை முதற்பாட்டுக்குக் கருத்தன்றோ வென்னில்: முதலிலேயும் இப்பாசுரத்தை அருளிச்செய்து முடிவிலேயும் "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை" என்றுஉபக்ரமோபஸம்ஹாரங்கள் ஏகரூபமாயிருக்கையாலே

சிலர் நிறைவாழ்ச்சி பெற்றிருக்கும்போது ஒருவன் குறைந்த வாழ்வையுடையவனாய் இருந்தால், அவன் தன் குறையை நினைத்து வெறுத்துப் பேசுவது போலே, ஸர்வேஶ்வரனை என்றும் அநுபவிக்கும் நித்யமுக்தர்களைப்போலே தமக்கும் அநுபவிக்க உரிமை உண்டாயிருந்த போதிலும் தாம் அவ்வநுபவத்தை இழந்திருப்பதைநினைத்து, 'இதற்குக் காரணம் நமக்குள்ள இந்தப்ராக்ருததேஹத்தின் தொடர்பே' என்று ஆராய்ந்து அறிந்து, இந்தத் தொடர்பைக் கழித்துக்கொள்வதற்கு வழிதம்மிடம் ஒன்றும் காணாமையாலே "இந்த ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுடைய தொடர்பை நீயே அறுத்துத்தரவேண்டும்" என்று அவன் திருவடிகளிலே தம்முடைய நிலையை விண்ணப்பம் செய்தார். "பொய்ந் நின்ற ஞானமும்......விண்ணப்பமே" [திருவிருத்தம் 1] என்று இது திருவிருத்தத்தின் முதல் பாட்டின் கருத்தன்றோ. திருவிருத்தம் முழுவதற்கும் இது கருத்தாகுமோ? எனில்: முடிவில் பலனைச் சொல்லும் போதும் 'அழுந்தார் பிறப்பாம் பொல்லா அருவினை" [திருவிருத்தம் 100] என்று அருளிச்செய்கையாலே இப்படி முதலும் முடிவும் இதுவேயாய் இருப்பதையிட்டு, திருவிருத்தம் முழுவதற்கும் இதுவேதாத்பர்யம் என்றுநிர்ணயிக்கலாம். நடுவி

இப்ரப₃ந்த₄த்திற்குத் தாத்பர்யமுமதுவே. தாம் நினைத்த போதே தம்முடைய அபேக்ஷிதம் கிடையாமையாலே பிறந்த ஆற்றாமையை ஆவிஷ்கரித்தபடி நடுவில் பாட்டுக்களடைய.

ஸர்வேஶ்வரனுக்கு இவரபேக்ஷிதம் சடக்கெனச் செய்யப் போகாது. அதுக்கடி:- ஶரதல்பத்திலே கிடந்த ஸ்ரீபீ₄ஷ்மரைக்கொண்டு நாட்டுக்குச்சிறிது வெளிச்சிறப்பைப்பண்ணிக் கொடுத்தாற்போலே, இவரையிடுவித்துச் சில ப்ரப₃ந்த₄ங்களை ப்ரவர்த்திப்பித்து ஸம்ஸாரத்தைத் திருத்த நினைத்தவனாகையாலே. இங்கே வைக்கலாம்படியல்ல இவருடைய த்வரை. "இவர் தாம் நிர்ப₃ந்த₄ம் பண்ணுகிறதும் அவ்வருகே போய் நம்முடைய கு₃ணாநுப₄வம் பண்ணுகைக்காகவிறே; இவைதன்னை அநுப₄விப்பிப்போம்" என்று பார்த்துத் தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூ₄திகளைக்காட்டிக்கொடுக்க

லுள்ள பாட்டுக்கள் எதற்காக? எனில்: தாம் முதல் பாட்டில் பிரார்த்தித்தவுடன் தம்முடைய விருப்பம் நிறைவேறாமையாலே பிறந்த ஆற்றாமையை நடுவிலுள்ள பாட்டுக்களிலே வெளிப்படுத்துகிறாராகையாலே குறையில்லை.

ஸர்வேஶ்வரன் இவர் விரும்பியபடி இந்த தே₃ஹஸம்ப₃ந்த₄த்தை உடனே கழித்துத்தர இசையவில்லை. அதற்குக் காரணம் அம்புப்படுக்கையிலே கிடந்த ஸ்ரீபீ₄ஷ்மரைக்கொண்டு சில உபதேசங்களைச் செய்வித்து உலகிற்கு அறிவூட்டியது போலே, இவரைக்கொண்டு சில தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களை வெளியிடுவித்து ஸம்ஸாரத்தைத் திருத்த நினைத்திருந்ததேயாகும். ஆனால், இவ்வுலகில் இருப்பது பொறுக்கவொண்ணாதபடி இவரது த்வரை (எம்பெருமானை அடைய வேண்டும் என்னும் வேக₃ம்) இருந்தது. அந்த வேக₃த்தைக் கட்டுப்படுத்துவதற்காக "இவ்வாழ்வார் நிர்ப்பந்தம் செய்வதும் நம்முடைய கு₃ணங்களை அநுப₄விப்பதற்காகவன்றோ. அந்த கு₃ணங்களை இங்கேயே அநுப₄விக்கச்செய்வோம்" என்று ஆலோசித்து, தன்னுடைய ஸ்வரூபம், ரூபம், கு₃ணங்கள், விபூ₄திகள் (செல்வங்கள்) ஆகிய அனைத்தையும் இவருக்குக் காட்டிக் கொடுத்தான்;

தே₃ஹத்தினுடைய தண்மையை அநுஸந்தி₄ப்பதற்குமுன்பு காட்டிக்கொடுத்தது இவையேயாகிலும் ''அவ்வருகே போய் அநுப₄விப்பதுமோரநுப₄வமுண்டு'' என்று தோற்ருதபடி ஒரு வைஶத்₃யத்தைப் பிறப்பிக்க, அவற்றிலே அந்யபரராய் அநுப₄விக்கிருர்.

1. அவ:- ஸ்வரூப ரூப கு₃ணங்களென்றிறே அடைவு; ஸ்வரூபத்தை விட்டு ரூபத்திலே இழிந்து அநுப₄விக்கவேணுமென்கிருராயிற்று. தான் துவக்குண்டிருப்பதும் இதிலேயாகையாலே. இனி இவ்வஸ்துதான் நேர்கொடுநேரே அநுப₄விக்கவொண்ணுதபடி முகத்திலே அலையெறிகையாலே ''கிண்ணகத்தலிழிவார் மிதப்

இவர் தே₃ஹத்தினுடைய தாழ்வை அநுஸந்தி₄ப்பதற்கு முன்பே இந்த ஸ்வரூபம் முதலானவற்றை இவருக்குக் காட்டிக் கொடுத்திருந்தபோதிலும், இப்போது அதற்கும் மேலே ஒரு தெளிவை உண்டாக்கி ஸ்வரூபம் முதலானவற்றை அநுப₄விக்கச் செய்தான். அந்தத் தெளிவினுலே ''பரமபத₃த்தில் சென்று அநுப₄விக்கும் ஓர் அனுப₄வம் உண்டு'' என்று தோற்ருதபடி ஓர் சிறந்த அநுப₄வம் ஏற்படுகையாலே, இது தவிர அங்கு சென்று அநுப₄விக்க வேண்டிய அநுப₄வமும் தேவையில்லை என்று இதிலே ஈடுபட்டு அநுப₄விக்கிருர் இத்திருவாசிரியத்திலே.

1. அவ:— எம்பெருமானை அநுப₄விக்கும்போது ஸ்வரூபம் ரூபம், கு₃ணங்கள் என்னும் வரிசையிலே அநுப₄விப்பது வழக்கம். இவர் இப்பாட்டில் ஸ்வரூபத்தை விட்டு ரூபத்தில் இறங்கி அநுப₄விக்கத் தொடங்குகிருர், தான் ஈடுபட்டிருப்பது இந்த ரூபத்திலேயே ஆசையாலே. அப்படி ரூபத்தை அநுப₄விக்கத் தொடங்கிய போதும் அந்த ரூபமானது நேரே அநுப₄விக்க முடியாதபடி அநுப₄விப்பவர்களுடைய முகத்திலே அலையெறிகையாலே ''வெள்ளத்தில் இறங்குபவர்

புக் கொண்டிழியுமாபோலே உபமாந முகத்தாலேயிழிந்து அநுபவிக்கவேணும்'' என்று பார்த்தார். ஸர்வதாஸாம்யமில்லாததொரு வஸ்துவாகையாலே புகவத்விஷயத்துக்குபமாநமாகச் சொல்லலாவதுதானில்லை; ஆனாலும் அல்பஸாத்ருஶ்யம் உள்ளதொன்றைப்பற்றி இழியவேணுமிறே; ஒருமரகதகிரியையாயிற்று உபமாநமாகச் சொல்லுகிறது. அதின் பக்கல் நேர்கொடு நேர் கொள்ளலாவதொன்றில்லாமையாலே அதுதன்னை ஶிக்ஷித்துக் கொண்டு இழிகிறார். ஸ்வரூபத்தை விட்டு ரூபத்தைப்பற்றினவோபாதி ரூபந்தன்னையும் விட்டு உபமாநத்திலே இழிந்து அது தனக்கு ஒப்பனை தேடியெடுத்துப் பேசுகிறார்.

கள் ஒரு ஓடத்தைக் கொண்டு இறங்குவது போலே இந்த ரூபத்தையும் உபமானத்தைத் துணையாகக் கொண்டு அநுபவிக்க வேண்டும்'' என்று நினைத்தார். ஆனாலும் இந்த ரூபத்திற்கு எல்லா விதத்திலும் ஒத்திருக்கும் எப்பொருளும் இல்லாமையாலே இதற்கு எதையும் உபமானமாகச் சொல்ல முடியவில்லை. ஆனாலும் ஒரு சிறிது ஒற்றுமையுடைய ஒன்றை உபமானமாகச் சொல்லி அநுபவிக்க இறங்கினார். ஒரு மரகதமலையையே இந்த ரூபத்திற்கு உபமானமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. நேரே மரகத மலையை மாத்திரம் உபமானமாகச் சொன்னால் இந்த ரூபத்திற்கு எவ்விதத்திலும் உபமானமாகமாட்டாமையாலே, அந்த மரகதமலைக்குப் பல பரிஷ்காரங்களைச் செய்து கொண்டு உபமானமாகச் சொல்லுகிறார். ஸ்வரூபத்தைவிட்டு ரூபத்தைப் பற்றினது போலே ரூபத்தையும் விட்டு உபமானத்தைச் சொல்லத் தொடங்கி, அதுவும் நேராக ஒப்பாக மாட்டாமையாலே, அதற்குப் பல அலங்காரங்களைத் தேடியெடுத்து அலங்கரித்துப் பேசுகிறார்.

நம்மாழ்வார் அருளிச்செய்த
திருவாசிரியம்

1\. செக்கர்மா முகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதிசூடி, அஞ்சுடர் மதியம் பூண்டு,
பலசுடர் புனைந்த பவளச் செவ்வாய்,
திகழ்பசுஞ் சோதி மரதகக் குன்றம்,
கடலோன் கைமிசைக் கண்வளர் வதுபோல்
பீதக வாடை முடிபூண் முதலா,
மேதகு பல்கல னணிந்து, சோதி
வாயவுங் கண்ணவுஞ் சிவப்ப, மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப,
நச்சுவினைக் கவர்தலை யரவினமளி யேறி,
எறிகடல் நடுவு ளறிதுயி லமர்ந்து,
சிவனய னிந்திர னிவர்முத லனைத்தோர்
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த,
தாமரை யுந்தித் தனிப்பெரு நாயக,
மூவுல களந்த சேவடி யோயே.

பதவுரை;— செக்கர் மா முகில் உடுத்து—சிவந்த பெரிய மேகத்தை அரையிலே கட்டி, மிக்க செம் சுடர் — மிகவும் சிவந்த கிரணங்களையுடைய, பரிதி சூடி — ஸூர்யனைத் தலையிலே தரித்து, அம் சுடர் — அழகிய (குளிர்ந்த) கிரணங்களையுடைய, மதியம் பூண்டு — சந்திரனை அணிந்து, பல சுடர்— (நக்ஷத்திரங்களாகிற) அநேக தேஜஸ்ஸுக்களை, புனைந்த— தரித்துள்ளதாய், பவளம் செம் வாய் — பவளம் போன்ற சிவந்த இடங்களை உடையதாய், திகழ் பசும் சோதி — விளங்கும்படியான பச்சை நிறத்தையுடைத்தான, மரகத குன்றம்— மரகதமலையானது, கடலோன் கை மிசை— கடலுக்கதிபனான வருணனுடைய (திரைகளாகிற) கையின் மேலே, கண் வளர்வது போல் — நித்திரை செய்வதுபோல், பீதகவாடை— பீதாம்பரம், முடி — கிரீடம், பூண்—கண்டி, முதலா—முதலான, மே தகு பல்கலன் அணிந்து— பொருந்தி, தகுதியாயிருக்கிற பல ஆபரணங்களையும் அணிந்து, சோதி வாய்வும்— ஒளிவிடாநின்றுள்ள திருப்பவளமும், கண்ணவும்-

திருக்கண்களும், சிவப்ப — சிவந்திருக்கும்படியாகவும், மீதிட்டு — (போட்டியில்) வெற்றிகொண்டு, பச்சை மேனி மிக பகைப்ப — பச்சைநிறமானது மிகவும் விளங்கும்படியாகவும், நச்சுவினை — (எதிரிகளை அழிக்கையில்) விஷத்தைப்போன்ற செயல்களை யுடையவனாய், கவர் தலை — கவிழ்ந்திருந்துள்ள தலைகளையுடையவனான, அரவு அமளி — ஆதிசேஷனாகிற படுக்கையில், ஏறி — ஏறி, எறி, கடல் நடுவுள் — அலையெறியும்படியான கடலின் நடுவே, அறி துயில் அமர்ந்து — ஜக₃த்₃ ரக்ஷண சிந்தையாகிற யோக₃நித்₃ரையை அடைந்து, சிவன் அயன் இந்திரன் இவர் முதல் — சிவன், பிரமன், இந்திரன் இவர்கள் முதலான, அனைத்தோர் தெய்வ குழாங்கள் — எல்லா தேவர்களுடைய கூட்டங்களும், கை தொழ — கை கூப்பி வணங்கும்படி. கிடந்த — பள்ளிகொண்டிருப்பவனும். தாமரை உந்தி — (எல்லா உலகத்தின் உத்பத்திக்கும் காரணமான) நாபீ₄கமலத்தையுடையவனும், தனி பெரு நாயக — ஒப்பற்ற ஸர்வாதி₄கனாயிருப்பவனுமான எம்பெருமானே! மூ உலகு அளந்த — மூன்று உலகங்களையும் அளந்த, சேவடியோயே — திருவடிகளை உடையவனே!

வ்யா: — முதற்பாட்டு — (செக்கர்மாமுகிலுடுத்து) ஆனையைக்கண்டார் "ஆனை, ஆனை" என்னுமாபோலே, அநுப₄வஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே ஏத்துகிறார். ஶ்யாமமான நிறத்துக்குப் பரபா₄க₃மான சிவப்பை யுடைத்தாய்,

---

வ்யா:— செக்கர்மாமுகிலுடுத்து) யானையைக் கண்டவர்கள் 'யானை, யானை' என்று வாய் வெருவுவது போலே எம்பெருமானுடைய உருவத்தை அநுப₄வித்ததாலுண்டான உகப்பு உள்ளடங்காமையாலே அதை வர்ணித்து "தாமரையுந்தித் தனிப் பெரு நாயக" "சேவடியோயே" என்று துதிக்கிறார். இந்த எம்பெருமானுடைய ரூபத்திற்கு உபமானமான மரகதமலை சிவந்ததொரு பெரிய மேகத்தை உடையாக உடுத்திருக்கிறது என்கிறார். (செக்கர்) மரகத மலையின் பச்சை நிறத்திற்கு வர்ணச் சேர்த்தியழகை

கொடுக்குப்கொய்சகமும் வைத்துடுக்கலாம்படியான அளவை யுடைத்தாய், ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்து குளிர்ந்திருக் கிற முகிலை அரையிலே பூத்தாற்போலே உடுத்து. (மிக்க செஞ்சுடர்ப்பரிதிசூடி) 2. ''दिवि सूर्यसहस्रस्य भवेत् युगपदुत्थिता'' (தி₃வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப₄வேத்₃யுக₃பது₃த்தி₂தா) என்று சொல்லுகிறபடியே, ஸஹஸ்ரகிரணங்களென்றாற்போலே ஒரு ஸங்க்₂யையுண்டிறே ஆதித்யனுக்கு; அப்படி பரிச் சி₂ந்நகிரணனன்றிக்கே அநேகமாயிரம் கிரணங்களையுடை யானொரு ஆதித்யன் வந்துதித்தாற்போலேயாயிற்று திரு வபி₄ஷேகமிருப்பது; மிக்க சிவந்திருந்துள்ள கிரணங்களை யுடைய பரிதியைச்சூடி, (அஞ்சுடர் மதியம் பூண்டு) தன்னு

அளிப்பதாயிருக்கிறது சிவந்த இந்த மேகம்: (மா) தலைப்பும் கச்சமும் வைத்து உடுக்கலாம் படியாக. பெரிய அளவை உடைத்தாயிருக்கிறது இந்த உடை. (முகில்) எம்பெருமா னுடைய திருமேனி மென்மைக்குப் பொருத்தமாகக் குளிர்ந் திருக்கும் மேகம் உடையாய் அமைந்திருக்கிறது. (உடுத்து) ''படிச்சோதி ஆடையொடும்.........கடிச்சோதி கலந்ததுவோ'' [திருவாய் 3-1-1] என்கிறபடியே, திருவரை பூத்தாற்போலே இந்தத் திருமேனியாகிற மரகதக்குன்றம் செக்கர் மாமுகி லாகிற பீதாம்பரத்தை உடுத்திருக்கிறது என்று கருத்து. (மிக்கசெஞ்சுடர்ப்பரிதிசூடி)

2. தி₃வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப₄வேத்₃ யுக₃பது₃த்தி₂தா ।
யதி₃ பா₄: ஸத்₃ருஶீ ஸா ஸ்யாத் பா₄ஸஸ் தஸ்ய
மஹாத்மந: ॥ [கீ₃தை 11-12]

[ஆயிரம் ஸூர்யர்களுடைய ஒளியானது ஒரே காலத்தில் ஆகாயத்தில் தோன்றிற்றாகில் அந்தப் புருஷனுடைய ஒளிக்கு அது ஸமானமாகலாம்.] என்கிறபடியே சூரியனைப் போலே ஆயிரம் கிரணங்கள் என்பது போல் ஓர் அளவில்லாமல் பல்லாயிரம் கிரணங்க ளையுடைய சூரியன் வந்து தோன்றியது போலே ஆயிற்று இந்த மலையினுடைய முடி இருப்பது. மிகவும் சிவந்திருந் துள்ள கிரணங்களையுடைய சூரியன் போன்ற கிரீடத்தை, பச்சைமாமலைபோல் மேனியையுடைய எம்பெருமான் சூடி இருக்கிறான் என்று கருத்து. (அஞ்சுடர் மதியம் பூண்டு)

டைய ஸ்வாபாவிகமாயிருந்துள்ள ப்ரதாபத்தாலே ஒரு வருக்குங் கிட்டவொண்ணாதபடியிருக்கிற ஆதித்யனைப் போலன்றிக்கே ஶீதளமான கிரணங்களையுடையனாய், குறைதல் நிறைதல் மறுவுண்டாதலின்றிக்கே வைத்தகண் வாங்காதே கண்டிருக்கவேண்டும்படியான அழகையுடைய சந்த்ரனைப்பூண்டு. (பலசுடர் புனைந்த) மற்றும் பல நக்ஷத்ராத்களையும் பூண்டு. (பவளச் செவ்வாய்) பவளமாகிற சிவந்த வாயையுடைத்தாய்; உபமேயத்தில் வந்தால், பவளம் போலே சிவந்த அதரத்தையுடையனாய் என்கிறது; இங்கு பவளம்போலே சிவந்த இடங்களையுடைத்தாய் என்கிறது. (திகழ் பசுஞ்சோதி மரதகக்குன்றம் கடலோன் கைமிசைக் கண்வளர்வது போல்) தனக்கிவ்வருகுள்ளவையெல்லாம்

தன்னுடைய இயல்வான தபிக்கும் [கொளுத்தும்] தன்மையாலே எவராலும் அணுக முடியாதபடியிருக்கும் ஸூர்யனைப் போலல்லாமல், குளிர்ந்த கிரணங்களை உடையவனாய், உலகிலுள்ள சந்திரனைப் போலே மாறிமாறிக் குறைத்து நிறைதல், மறு (களங்கம்) உண்டாதல் முதலான தோஷங்கள் இல்லாமல் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் படியான அழகைஉடைய சந்திரனை [கழுத்துக்கு] ஆபரணமாகக் கொண்டிருக்கிறது இந்த மரகதமலை; பச்சை மாமலை போன்ற திருமேனிக்குக் கண்டிகாபரணம் குறைவற்ற சந்திரன் போல் உள்ளது என்று கருத்து. (பலசுடர்புனைந்த) மற்றும் பல நக்ஷத்திரங்கள் கிரஹங்கள் போன்ற சோதிகளையும் ஆபரணமாகக் கொண்டிருக்கிறது இந்த மரகதமலை. திருமேனி பொருத்தயான பலதிருவாபரணங்களை அணிந்திருக்கிறது என்று கருத்து. (பவளச் செவ்வாய்) உபமானமாகிற மரகத மலையில் பவளம் போலே சிவந்த இடங்கள் உள்ளன என்று பொருளாகிறது. உபமேயமான திருமேனியில் பவளம் போன்று சிவந்த வாய் உள்ளது என்று பொருளாகிறது. (திகழ் பசுஞ்சோதி மரகதக்குன்றம் கடலோன்கைமிசைக் கண்வளர்வதுபோல்) தன்னையொழிந்த மலைகளெல்லாம் தாழ்ந்ததாம்படி மிகவும்

கீழாம்படி மிகைத்து உஜ்ஜ்வலமாகா நின்றுள்ள ஶ்யாமமான தேஜஸ்ஸையுடைத்தான மரதககிரியானது கடலுக்கதிபதியான வருணனுடைய திரைக்கையிலே கண்வளர்வது போல்; சாய்வதுபோலென்ன அமைந்திருக்க உபமாநத்திலும் கூசி (கண்வளர்வதுபோல்) என்கிறார். திருமலைநம்பி எம்பெருமானாருக்கு ஒருவரை அடையாளஞ் சொல்லுகிற விடத்திலே ''பொன்னாலே தோடுபண்ணினாலிடவொண்ணாதபடியான காதையுடையராயிருக்குமவரை அறிந்திருக்கையுண்டோ'' என்றாராம். (பீதகவாடை) ''செக்கர்மா முகிலுடுத்து'' என்கிறது. (முடி) ''செஞ்சுடர்-பரிதிசூடி'' என்கிறது. (பூண்) ''அஞ்சுடர் மதியம்பூண்டு'' என்கிறது.

சுடர்விட்டுத்திகழும் பச்சை நிறத்தையுடைய ஒருமரகத மலையானது கடலுக்கு அரசனான வருணனுடைய அலைகளாகிற கையிலே கண்வளர்வது போல் உள்ளது இம்மலை. உபமானமாகிற மலையைச் சொல்லும் போது சாய்வது போல் என்று சொல்ல வேண்டியிருக்க, திருமேனிக்கு உபமானமாகையாலே அப்படிச் சொல்லக் கூசி, உபமேயமான திருமேனிக்குச் சொல்லுவதுபோலே 'கண்வளர்வது' என்கிறார். இவ்விடத்தில் பின்வரும் ஐதிஹ்யத்தை அருளிச் செய்வர். திருமலைநம்பி எம்பெருமானாருக்கு ஒருவரை அடையாளம் சொல்லும்போது, 'மென்மையான காதை உடையவர்' என்று சொல்லுவதற்குப் பதிலாக, 'பொன்னாலே தோடுபண்ணினால் இடவொண்ணாதபடியான காதை உடையவரை அறிவீரோ?' என்று அடையாளம் சொன்னார். இங்கு உபமானத்தைச் சொல்லுமிடத்தில் உபமேயத்தைப்போல் சொன்னது போலே, இந்த ஐதிஹ்யத்தில் உபமேயத்தைச் சொல்லும் போது உபமானத்தையிட்டுச் சொன்னார் என்று கருத்து. (பீதகவாடை) இது முதல் உபமேயமான எம்பெருமானுடைய திருமேனியை நேரே வர்ணிக்கிறது. (பீதகவாடை) என்றது ''செக்கர்மா முகிலுடுத்து'' என்றதற்கு உபமேயம். (முடி) கிரீடம். 'செஞ்சுடர்பரிதி சூடி' என்றதற்கு உபமேயம். (பூண்) கண்டிகை எனப்படும் கழுத்தாபரணம். ''அஞ்சுடர் மதியம் பூண்டு''என்பதற்குஉபமேயம் .(முதலாமேதகுபல்கலனணிந்து)

இவை தொடக்கமாக (மேதகுபல்கலனணிந்து) "பலசுடர் புனைந்த" என்கிறத்தை. (மேதகு) ஸ்வரூபாநுரூபமென்னும்படியாயிருக்கை; மேனித் தகுதியாக என்றுமாம். கீழ்ச் சொன்னவை முதலாகத் தகுதியாயிருந்துள்ள பல ஆபரணங்களையுமணிந்து. அவன் விபூ₄தியைப் பரிச்சே₂தி₃க்கிலும் பரிசே₂தி₃க்கப் போகாததாயிருக்கை. ப₄ாஷ்யகாரர் அநேக § பூ₄ஷணங்களை அருளிச்செய்து பின்னையும் ஆதி₃ ஶப்₃த₃த்தாலே தலைக்கட்டுமாபோலே "பல் கலன்" என்று தலைக்கட்டுகிறார். 3. "नूपुराद्यपरिमितदिव्यभूषण" (நூபுராத்₃யபரிமித தி₃வ்யபூ₄ஷண) என்பரிறே.

கண்டிகை முதலான பல பொருத்தமான ஆபரணங்களை அணிந்து. "பலசுடர்புனைந்த" என்பதற்கு உபமேயம். (மேதகு) திருமேனியின் மேன்மைக்கு மிகத்தகுந்ததாயிருக்கை. அல்லது திருமேனியோடு மேவி—பொருந்தி, தகுந்ததாயிருக்கை என்றும் கொள்ளலாம். முன் சொன்ன கண்டிகை முதலாக, தகுதிபெற்ற பலதிருவாபரணங்களை அணிந்து என்று கருத்து. 'பலபலவே ஆபரணம்" [திருவாய் 2-5-6] என்று இவர் திருவாய்மொழியில் அருளியபடியே, அவனுடைய விபூ₄தியை அளவிட்டாலும் ஆப₄ரணங்களை அளவிட முடியாதிருக்கை. ப₄ாஷ்யகாரர் சரணாக₃தி க₃த்₃யத்திலே கிரீடம், மகுடம், சூடாவதம்ஸம், மகரகுண்ட₃லம், கழுத்தாபரணம், ஹாரம், தோள்வளை, முன்கைவளை ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், முத்துமாலை, உதரபந்தனம், பீதாம்பரம், அரைநாண், திருவடிச்சிலம்பு என்று பல திருவாபரணங்களை அருளிச்செய்து இவற்றுக்குத் தொகையில்லை என்று காட்டும்படி

3. நூபுராத்₃யபரிமித தி₃வ்யபூ₄ஷண [ஶரணாக₃திக₃த்₃யம்]

[நூபுரம் முதலிய கணக்கற்ற திவ்யாபரணங்களை உடையவனே!] என்று ஆதி சப்தத்தையிட்டு முடித்தது போலே இவரும் பல்கலன் என்று தலைக்கட்டுகிறார்.

---

§ குணங்களை என்று பாட₂ாந்தரம்.

(சோதிவாயவுங் கண்ணவுஞ்சிவப்ப) த்ருஷ்டாந்தத்திலே ஒன்றைச்சொல்லி இங்கே இரண்டைச் சொல்லுவானென்னென்னில், அதுக்காகவிறே சிவந்த இடங்களென்றது. (மீதிட்டு) கீழ்ச்சொன்னவற்றாலும் அவற்றை நெருக்குகிற தன்னாலும் ஒன்றையொன்று ஸ்பர்த்தித்து ஶ்யாமமான நிறம் மிகவுமுஜ்ஜ்வலமாக; அவற்றையடைய நெருக்கி உள்ளேயிட்டுக்கொள்ளப் பார்த்த தான் அத்தையுமழித்து ப்ரஸரிக்க. (நச்சுவினை) "வாய்ந்த மதுகைடபரும் வயி றுருகி மாண்டார்" என்கிறபடியே தனியிடத்திலும் எதிரி களாய் வருவாரும் முடியும்படியான நச்சுத்தொழிலை

(சோதிவாயவும் கண்ணவும் சிவப்ப) "உபமானம் காட்டும் போது 'பவளச் செவ்வாய்' என்று ஒன்றைச் சொல்லி, இங்கு உபமேயத்தைக் காட்டும்போது வாயும் கண்ணு மாகிற இரண்டைச்சொல்லலாமோ?" எனில்: உபமானத்திலே 'செவ்வாய்' என்றது சிவந்த இடங்கள் என்றே பொருளா கையாலே உபமேயத்தில் இரண்டையும் காட்டலாம். (மீதிட்டுப் பச்சை மேனி மிகப்பகைப்ப) 'பீதகவாடை' என்று தொடங்கிச் சொன்ன அலங்காரங்களும், அவற்றை உள்ளடக்கிய திருமேனியும் ஒன்றோடொன்று போட்டியிடு கையில், பச்சை மேனியானது போட்டியில் வென்று மிக வும் பிரகாசித்தது என்கிறது. (பச்சை மேனி மீதிட்டு மிகப் பகைப்ப) "முன் சொன்ன அலங்காரங்களையெல்லாம் ஒன்றாக ஒருசேர உள்ளடக்கிக்கொள்ளப்பார்த்த திருமேனி அவற்றையெல்லாம் வென்று மிகவும் ஒளிவிட" என்று கருத்து. இனி "கடலோன் கைமிசைக் கண் வளர்வது போல்" என்று சொன்ன உபமானத்திற்கு உபமேயத்தைக் காட்டு கிறார். (நச்சுவினை) "வாய்ந்த மதுகைடபரும் வயிறுருகி மாண்டார்" [மூன்றாம் திருவ—66] என்கிறபடியே தனியே சயனித்திருக்கும்போது எதிரிகளாய் வரும் மதுகைடபர் போன்ற அசுரர்கள் அழிந்து போம்படியான விஷம் கக்கும் தொழிலை உடையவனாய் இருப்பவன் என்று திரு

யுடைத்தாயிருக்கை. (கவர்தலை) பலதலைகளையுடைத்தாய்; ஸ்வஸ்பர்ஶத்தாலே பணைத்ததென்றுமாம். ப்ரஜையை மடியில் வைத்திருக்குந் தாயைப்போலே பெரியபெருமாளை மடியிலே வைத்திருக்குந் தாய் தானும். அநந்தாழ்வான் திருக்கோட்டியூருக்கு நடந்தவிடத்திலே பட்டரைக்கண்டு அவர் திருமேனியிலே இப்படி செய்தானும்; ஆண்டாளுக்கு முந்துற ஒரு பிள்ளையுண்டாய் அவனையிழக்க, "அங்ஙனே செய்ய வொண்ணாது: இவன் ஜீவிக்கவேணும்" என்று எம்பெருமானார் பெரியபிராட்டியாருக்கு நீராட்டி "மஞ்சநீர் குடித்த பிள்ளையாக வளர்க்கவேணும்" என்று காட்டிக் கொடுத்தருளினாராயிற்று. அந்த வாஸனையாலே "பெரிய

வனந்தாழ்வானைச் சொல்லுகிறார். (கவர்தலை) பல தலைகளை உடையதாய்; எம்பெருமானுடைய ஸ்பர்சத்தாலே நூறாயிரமாகப் பூரித்த தலை என்றும் கொள்ளலாம். குழந்தையை மடியில் வைத்திருக்கும் தாயைப் போலே, பெரியபெருமாளை மடியிலே வைத்துக் கொண்டு கவிழ்ந்த தலைகளாலே கட்டிக்காக்கும் தாய்போல் இருப்பவன். பட்டர் அகளங்கனோடு உண்டான மனஸ்தாபத்தாலே திருக்கோட்டியூருக்குச் சென்றிருந்தபோது எம்பெருமானாருடைய சிஷ்யரான அனந்தாழ்வான் திருக்கோட்டியூருக்குச் சென்று பட்டரைக் கண்டு அவரை மடியிலே இட்டுக் கொண்டு பெரிய பெருமாளிடம் திருவனந்தாழ்வான் காட்டும் தாயன்பைப் பெரிய பெருமாளுடைய மகனான பட்டர் விஷயத்தில் காட்டினாராம். கூரத்தாழ்வான் தேவிகளான ஆண்டாளுக்கு முதலில் ஒரு பிள்ளை பிறந்து சிறு வயதிலேயே அவனை இழக்க நேர்ந்தது. பட்டர் பிறந்தபிறகு "இந்தப் பிள்ளையும் அப்படி ஆகிவிடக்கூடாது. இவர் வாழவேண்டும்" என்று எம்பெருமானார் பெரிய பிராட்டியாருக்குத் திருமஞ்சனம் செய்து அந்தத் திருமஞ்சன நீரைப் பிள்ளைக்குப் புகட்டி "மஞ்சள் நீர்குடித்த பிள்ளையாய் வளர்க்க வேண்டும்" என்று காட்டிக் கொடுத்தருளினாராயிற்று. அக்காரணத்தாலேயே

பிராட்டியார் மகன்'' என்றுதான் பட்டரை அநந்தாழ் வான் சொல்லுவது. (அரவினமளி) நாற்றம் குளிர்த்தி மென்மைகளையுடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே ஏறி; படுக்கையிலே ஏறுகிறவிது தன் பேறாக விருக்கையாலே, நம்பெருமாள் ஆறுகால் சிவிகையை ஸாதரமாகப்பார்த்து ஏறியருளுமாபோலே பெரிய ஆதரத் தோடேயாயிற்று ஏறியருளுவது; அமளி-படுக்கை. (எறி கடல்நடுவுள்) ஸ்வஸந்நிதாநத்தாலே அலையெறிகிற கடலிலே. (அறிதுயிலமர்ந்து) அறிவே வடிவாகவுடைத்தா யிருந்துள்ள நித்ரையிலே பொருந்தி; அல்லாதார்க்கு முதல்தன்னிலே ஒன்று தோன்றாதே நெஞ்சிருண்டி ருக்கும்; சக்ஷுராதிகரணங்களாலே பதார்த்த தர்ஶ நம் பண்ணிப் போதுபோக்குவர்கள். அக்கண்தன்னையுஞ்

'பெரிய பிராட்டியார் மகன்' என்று பட்டரை அனந்தாழ் வான் அழைப்பாராம். (அரவினமளி ஏறி) நறுமணம், குளிர்த்தி, மென்மை ஆகிய படுக்கைக்குரிய குணங்களையு டைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே ஏறி. (ஏறி) இந்தப்படுக்கையிலே ஏறுவது தனக்கு இனிய பேறாக இருக்கையாலே, திருவரங்கத்தில் நம்பெருமாள் ஆறுகால் சிவிகையை ஆதரத்துடன் பார்த்து ஏறுவது போலே பெரிய ஆதரத்தோடே ஏறியருளுகிறான் க்ஷீராப்திநாதன். 'அமளி' என்னும் சொல் படுக்கையைக் குறிக்கும். (எறி கடல்நடுவுள்) எம்பெருமான் அருகில் இருக்கையாலே அலை யெறிகிற திருப்பாற்கடலிலே. (அறிதுயிலமர்ந்து) அறிவே வடிவாக இருக்கும் நித்ரையிலே பொருந்தி; மற்றுள்ளவர் களுக்குத் தம்முடைய ஸ்வரூபமே தெளிவாகக் காட்சியளிப்ப தில்லையாகையால் நெஞ்சு இருண்டே இருக்கும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களாலும் வெளிப்பொருளைக் கண்டு அநுபவித்துப் போது போக்கு வார்கள். அந்தக் கண் முதலானவற்றையும் மூடினால் உள்ளும் புறமும் இருண்டிருக்கும். ஸர்வஜ்ஞனான எம்பெரு மான் தன் ஜ்ஞாநத்தாலே காண்பதொழிய, கண்ணாலே

செம்பளித்தால் உள்ளோடு புறம்போடு வாசியற இருண்டிருக்கும். இவன்தான் திருக்கண்கள் செம்பளித்தால் ப்ரகாஶமுள்ளே உறைந்திருக்குமத்தனை. ஜக₃த்₃ரக்ஷணசிந்தை பண்ணுதல், த்₄யேயவஸ்து தனக்குப் புறம்பில்லாமையாலே ஸ்வாநுஸந்த₄ாநம் பண்ணுதல் — திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினலிருக்குமபடி. (சிவனயனிந்திரனிவர் முதலனைதோர் தெய்வக்குழாங்கள் கைதொழ) நாட்டுக்குஆஶ்ரயணீயராக ப்ரஸித்₃த₄ரானவர்கள் தாங்கள் ப₄க்₃நாபி₄மாநராய்த் தொழாநிற்பர்கள். ப்₃ரஹ்மாதி₃கள் தொடக்கமாக அநேக தே₃வதா ஸமூஹமானது தங்களிறுமாப்பை பப்பொகட்டு. சாய்ந்தருளின அழகிலே தோற்று

பார்ப்பவனல்லாமையாலே கண்ணை மூடினலும் அறிவுக்குக் குறையில்லை. திருக்கண்களை மூடுவது தன் ஜ்ஞானத்தை உள்முகமாகச் செலுத்துவதைக் காட்டும். அப்போது உலகத்தை ரக்ஷிக்கும் வழிகளைப் பற்றிச் சிந்திப்பதாலே, அது 'அறிதுயில்' எனப்படுகிறது. தியானிக்கத்தக்க வஸ்து தன்னைக் காட்டிலும் வேறில்லாமையாலே இந்த யோக₃நித்திரையின்போது எம்பெருமான் தன்னுடைய ஸ்வரூபத்தை அநுஸந்த₄ானம் பண்ணுவதாகவும் கொள்ளலாம். 'திருவனந்தாழ்வான் மேலே சயனித்து எம்பெருமான் தூங்குகிருன்' என்பதற்கு இவையே பொருளாக முடியும். (சிவனயனிந்திரன் இவர் முதலனைத்தோர் தெய்வக்குழாங்கள் கைதொழ) இவ்வுலகில் ஜனங்களால் ஆஶ்ரயிக்கத்தக்கவராகப் பிரசித்தி பெற்ற சிவன், பிரமன், இந்திரன் முதலான எல்லாத் தேவர் கூட்டங்களும் தங்களுடைய அபி₄மானம் ப₄ங்க₃மடையப் பெற்றவர்களாய் எம்பெருமானைத் தொழுவர்கள். தமக்குத் தலைவர்களான ப்₃ரஹ்மருத்₃ரேந்திரர்களை முன்னிட்டுக் கொண்டு பல தே₃வர் கூட்டங்கள் "நாங்கள் ஈச்வரர்கள்" என்னும் க₃ர்வத்தை விட்டு, எம்பெருமான் கடலின் நடுவிலே ஆதிசேஷசயனத்திலே சாய்ந்திருக்கும் அழகுக்குத் தோற்று அடிமைப்பட்டுத் தொழுது

எழுந்துவாங்கி நிற்பர்கள். இவர்கள் இப்படியே தொழா நின்ருல் அவன் செய்வதென்னென்னனில், (கிடந்த) கடலிலே இழிந்த கொககுததிரள்கள விக்ருதமாங்காட்டில் அக்கடலுக்கொரு வாசி பிறவாகிறு. ஏகரூபமாகச் சாய்ந்தருளுமாயிற்று. "சிலர் தொழாநிற்கக் கிடந்தோம்" என்கிறதுணுக்கும் பிறவாதாயிற்று ஐஶ்வர்யச்செருக்காலே. இவர்க்குமிரண்டும் ஸ்வரூபாந்தர்க்கதமாயிற்று. (தாமரையுந்தி)ஸகல ஜகத்துத்பத்திகாரணமான திருநாபிகமலத்தையுடையனுய்; இப்படியிருப்பார் அவ்வருகாரேனுமுண்டோ? என்ன. (தனிப்பெருநாயக) இத்தால் அவ்வருகில்லை என்

கிற்பர்கள். 'இவர்கள் இப்படித் தொழும் போது அவன் செய்வது என்ன?' எனில்—(கிடந்த) கடலிலே மீன் பிடிக்க இறங்கிய கொக்குக் கூட்டங்கள் ஆரவாரம் செய்வதால் கடலுக்கு ஒரு வேறுபாடு விளையாதன்ருே; அதுபோலே எம்பெருமானும் வேறுபாடு இல்லாமல் ஒருபடியாகக் கிடக்கிருன். ஸர்வலோக சக்ரவர்த்தியாக இருக்கும் மதிப்பாலே "சிலர் தொழும்போது நாம் படுத்திருக்கிருேமே" என்னும் எண்ணத்தால் திருமேனியில் சிறிது வேறுபாடும் விளைவதில்லை. இந்த ஆழ்வாரும் இந்த தெய்வங்கள் துதிப்பதையும் அவன் படுத்திருப்பதையும் அநுஸந்தித்து

"கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர் தெய்வமாய்க்
கிளர்ந்து
சூழ்த்தமரர் துதித்தால் உன் தொல்புகழ் மாசூணுதே?"
[திருவாய் 3-1-7]

என்று வியப்படையாதவராகையாலே இவருக்கும் இவ்விரண்டும் ஸ்வரூபாநுஸந்தானத்தில் அடங்கியிருக்கும். (தாமரையுந்தி) எல்லா உலகும் உண்டாவதற்குக் காரணமான திருநாபிக்கமலத்தை உடையவனுய்; இப்படி இவனுக்கும் காரணமாயிருப்பவர் வேறுயாரேனும் உண்டோ? எனில்— (தனிப்பெருநாயக) உலகிற்குக் காரணமாகவோ, இவனுக்கும்

னுமிடத்தைச் சொல்லுகிறது. அவ்வருகில்லையாகில் தன்னோடொக்கச் சொல்லலாவாருண்டோவென்னில்: (தனி அத்3விதீயநாயகன்; புறம்பேயுஞ்சிலரை நாயகராகச் சொல்லக்கடவது-ஔபசாரிகம். 4.''रुद्रं समाश्रिता देवा रुद्रो ब्रह्माणमाश्रितः । ब्रह्मा मामाश्रितो राजन्! नाहं कञ्चिदुपाश्रितः ॥ '' (ருத்3ரம் ஸமாஶ்ரிதா தே3வா ருத்3ரோ ப்3ரஹ்மாணமாஶ்ரித: । ப்3ரஹ்மா மாமாஶ்ரிதோ ராஜந் நாஹம் கஞ்சிது3பாஶ்ரித:॥) என்றாற்போலே ஆபேக்ஷிகமான ஐஶ்வர்யத்தையுடையராயிறே

காரணமாகவோ வேறு எவரும் இல்லை என்பதைச் சொல்லுகிறார். பிரமாணங்களிலும் காவியங்களிலும் உலகைப் படைத்த உந்தித்தாமரையை உடையதாக வேறு எந்தத் தெய்வத்தையும் சொல்லுவதில்லையன்றோ! இவனுக்கு மேல் ஒருவர் இல்லையாகில். இவனோடு சமமாகச் சொல்லக்கூடியவர்கள் உண்டோ? எனில்: 'தனி' என்னும் விசேஷணத்தாலே 'அப்படி ஒருவரும் இல்லை; இவனே ஒப்பற்ற நாயகன்' என்று காட்டுகிறார். பிரமாணங்களில் மற்றும் சிலரையும் நாயகராகக் குறிப்பது இவனால் அளிக்கப்பட்ட சில பெருமைகளை உடையவர்களாய் இருப்பது பற்றி ஏற்பட்ட உபசாரவழக்கே ஆகும்.

4. ருத்3ரம் ஸமாஶ்ரிதா தே3வா ருத்3ரோ
ப்3ரஹ்மாணமாஶ்ரித: ।
ப்3ரஹ்மா மாமாஶ்ரிதோ ராஜந் நாஹம்
கஞ்சிது3பாஶ்ரித: ॥
[பா4ர-ஆச் (118-37)]

[தேவர்கள் ருத்ரனை அண்டியிருக்கின்றனர்; ருத்ரன் (தன் தகப்பனான) பிரமனை ஆச்ரயித்திருக்கிறான்; பிரமனோவெனில் (அவனையும் பிறப்பித்த) என்னை அடைந்திருக்கிறான். அரசனே! நான் ஒருவனையும் பற்றியிருக்கவில்லை.] என்கிறபடியே பிரமன் உருத்திரன் முதலானவர்களெல்லாம் அளவுபட்ட செல்வத்தை உடையவர்களாகவன்றோ இருக்கிறார்கள். 'தனி' 'பெரு' என்னும் இரண்டு விசேஷணங்களை

இவர்களிருப்பது. இவ்வருகுள்ளார்க்கெல்லாம் தான் நிர்வாஹகனாயிருக்கிறவோபாதி தனக்கவ்வருகொரு நிர்வாஹகனையுடையனல்லாத அத்₃விதீயபரதே₃வதை; நிமித்தோபாதா₃நஸஹகாரிகளும் தானேயென்கை. (மூவுலகளந்த) தன்பக்கல் வந்து அநுப₄விக்கமாட்டாதார்க்கு அவர்களிருந்த விடத்திலே சென்று அநுப₄விப்பிக்கும். (சேவடியோயே) இழந்த இழவை மீட்டு ரக்ஷியாதே க்₃ரூரனானாலும் விடவொண்ணாதபடியாயிற்று திருவடிகளின் போ₄க்₃யதை யிருக்கிறபடி. கண்ணழிவற்ற அழகையும் கு₃ணங்களையும் அநுப₄வித்தார். 1.

இட்டதால் தான் லோகநாயகனாய் இருப்பது போல் தனக்கு மேல் ஒரு நாயகன் இல்லாதவனாய், ஒப்பற்ற பரம்பொருளாய் இருப்பவன் இவனே என்று காட்டுகிறது. "தாமரையுந்தி" "தனி" "பெரு" என்னும் மூன்று விசேஷணங்களால் உபாதா₃னகாரணமாகவும், நிமித்தகாரணமாகவும், ஸஹகாரிகாரணமாகவும் இருப்பவன் இவனே என்று கூறுகிறார். சட்டிபானைகளைச் செய்யும் குயவனைப் போலே இவனே உலகைத் தன் ஸங்கல்பத்தாலே படைக்கிறானாகையாலே இவன் நிமித்தகாரணமாகிறான். மண் சட்டிபானைகளாகப் பரிணமிப்பது போலே ஸூக்ஷ்மசேதநாசேதனங்களோடு கூடிய இவனே ஸ்தூ₂லசேதநாசேதனங்களோடு கூடிய உலகமாகப் பரிணமிக்கையாலே, இவனே உபாதா₃ன காரணமும் ஆகிறான். தடி, சக்கரம் முதலான ஸஹகாரி (துணை)களைக் கொண்டே குயவன் சட்டிபானைகளைப் படைப்பது போலே, வேறு துணையை எதிர்பாராமல் தன் ஜ்ஞாநம் சக்தி முதலான குணங்களைக் கொண்டே இவன் உலகைப் படைக்கிறானாகையாலே, இவனே ஸஹகாரி காரணமாகவும் ஆகிறான். (மூவுலகளந்த) இப்படி ஜக₃த்காரணனாய் இருக்கையாலே தன்னைக்கிட்டி அநுப₄விக்க முடியாதவர்களுக்கு, அவர்கள் இருந்தவிடத்திலே சென்று தன் திருவடிகளாலே தடவிக்கொடுத்து அவர்களை அநுப₄விக்கச் செய்பவன். (சேவடியோயே) இவர்கள் தன்னை இழந்திருப்பதை மாற்றி ரக்ஷிக்காத கொடுமையாளனாக இருந்தாலும் விடவொண்ணாதபடி இருக்கிறது திருவடிகளின் இனிமை. ஆக இப்பாட்டால், எக்குறையுமில்லாத எம்பெருமானின் அழகையும் கு₃ணங்களையும் அநுப₄வித்தாராயிற்று. 1.

2. உலகுபடைத் துண்ட வெந்தை அறைகழல்
சுடர்பூந் தாமரை சூடுதற்கு அவாவா
ருயிருருகி யுக்க, நேரிய காத
லன்பி லின்பீன் றேறல் அமுத
வெள்ளத் தானாம் சிறப்புவிட்டு ஒருபொருட்
கசைவோ ரசைக, திருவொடு மருவிய
இயற்கை, மாயாப் பெருவிற லுலகம்
மூன்றி னொடுநல் வீடு பெறினும்
கொள்வ தெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே.

பதவுரை:— உலகு படைத்து — (எல்லா) உலகங்களையும் ஸ்ருஷ்டித்து, உண்ட — (ப்ரளயகாலத்தில்) விழுங்கிய, எந்தை — என் ஸ்வாமியாகிய எம்பெருமானுடைய, அறை கழல் — சப்தியாநின்றுள்ள வீரக்கழலையுடைய திருவடிகளாகிற, சுடர் பூ தாமரை — ஜ்வலிக்கும்படியான அழகிய தாமரைப்பூவை சூடுதற்கு — அணிவதற்காக, அவா — ஆசையினால், ஆர் — நிறைந்த, உயிர் உருகி உக்க — ஆத்மாவானது உருகிவிழ, நேரிய காதல் — (அதனால்) உண்டான (பக்திரூபமான) அன்பென்ன, அன்பில் — (பக்தியினாலுண்டான பரமபக்திரூபமான) ப்ரீதியிலுள்ள, இன்பு — இனிமை என்ன, (இவைகளிலுள்ள), ஈன் தேறல் அமுத வெள்ளத்தானாம் — இனிமையின் வைலக்ஷண்யமாகிற அமுதக் கடலில் மூழ்கியிருக்கும்படியான, சிறப்பு விட்டு — மேன்மையை விட்டு, ஒருபொருட்கு-கீழான புருஷார்த்தத்திற்காக, அசைவோர்—அல்லலுறுபவர்கள், அசைக — அலையட்டும்; திருவொடு மருவிய — ஐச்வர்யத்துடன் கூடிய, இயற்கை—ஸ்வபாவத்தோடும், மாயா பெரு விறல் — அழியாத மிகுந்த பலத்தோடும், உலகம் மூன்றினொடு — மூன்று உலகங்களோடும் கூட, நல் வீடு பெறினும் — மேலான புருஷார்த்தமான மோக்ஷத்தைப் பெற்றாலும், தெள்ளியோர்— தெளிந்த ஜ்ஞானத்தையுடைய பெரியோர்களுடைய, குறிப்பு — அபிப்ராயம், கொள்வது — (இவைகளை) பெறுகைக்கு, எண்ணுமோ — நினைக்குமோ?

அவ:- இரண்டாம் பாட்டு (5) "आदित्यवर्णं तमसः परस्तात्" (ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்) என்று கொண்டு த்4யேய மாகச் சொல்லுகிற வஸ்துவினுடைய விக்3ரஹவைலக்ஷண் யஞ் சொன்னுர் முதற்பாட்டில்; அந்த த்4யேய வஸ்துவின் பக்கல் பிறக்கும் பரப4க்தி தொடங்கி ப்ராப்யாந்தர்க்க3த மாக இருக்கையாலே தத்3விஷயப4க்தியே அமையுமென் கிறது இரண்டாம் பாட்டில். முதற்பாட்டில் வடிவழகும் மேன்மையும் நீர்மையுஞ்சொல்லிற்று; அவை கர்மஜ்ஞா

---

2. அவ:—

5. வேத3ாஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்।
தமேவம் வித்3வாநம்ருத இஹ ப4வதி
நாந்ய: பந்தா2 வித்3யதேऽயநாய ॥ [புருஷ ஸூக்தம்]

[(வேத3புருஷனுகிய) நான் (ஸ்வரூபரூபகு3ணவிபூ4திகளில்) பெரியவனும், ஸூர்யன் போல் ஒளிவிடுபவனும், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான இந்தப் புருஷனே அறிகிறேன். அவனே இம்மாதிரி அறிபவன் இப்பிறப்பிலேயே முக்தனுக ஆகிருன்; மோக்ஷத்திற்கு வேறு வழி கிடையாது.] என்று தியானிக்கத்தக்க பரம்பொருளுடைய திருமேனியின் சிறப் பைச் சொன்னுர் முதல் பாட்டில். அந்தப் பரம்பொருள் விஷய மாக உண்டாகும் பரப4க்தி முதலானவை மோக்ஷஸாத4னமாக அல்லாமல் இவருக்கு ஸ்வயம் ப்ரயோஜனமான ப்ராப்யத்தில் அடங்கியிருக்கையாலே "அந்த ப4க்தியே போதுமானது; மோக்ஷமும் வேண்டா" என்கிருர் இரண்டாம் பாட்டில். முதற்பாட்டில் உபமானங்காட்டித் திருமேனியை வர்ணிப்ப தாலே எம்பெருமானுடைய வடிவழகையும், 'சிவனயன்' என்று தொடங்கி மூன்று அடிகளாலே மேன்மையையும், 'மூவுலகளந்த சேவடியோயே' என்னும் கடைசி அடியாலே நீர்மையையும் அருளிச்செய்தார். ப4க்தியை ஸாத4னமாகக் கொள்ளும்

நங்களினுடைய ஸ்த்தா₂நேயாய் நிற்க. அநந்தரம் பிறக்கும் பரப₄க்தி பரஜ்ஞாந பரமப₄க்திகளைப் பெறும்பேற்றுக்கவ் வருகில்லாத ப்ராப்யங்களென்கிறார். ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தா₂நத்தில் அவனுடைய வடிவழகும் மேன்மையும் நீர்மையுமாக, அநந்தரம் பிறக்கும் பரப₄க்த்யாதி₃களையிறே உத்₃தே₃ஶ்யமாகச் சொல்லிற்று. அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தா₂நத்திலே நிற்கிறவற்றை அநுப₄விக்கிறார், "உலகுபடைத்துண்டவெந்தை அறைகழல் சுடர்ப் பூந்தாமரை" என்கிற இவ்வளவிலே.

வ்யா:— (உலகுபடைத்துண்ட) (6) 'बहु स्यां' (ப₃ஹு ஸ்யாம்) என்கிற ஸங்கல்பமாத்ரத்தாலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களையுமுண்டாக்கி, உண்டான இவற்றுக்கு

உபாஸகர்களுக்குக் கர்மயோக₃மும் ஜ்ஞானயோக₃மும் அந்த ப₄க்தி யோக₃த்தை விளக்கும். ப₄க்தியை ஸ்வயம் ப்ரயோஜனமாகக் கொண்ட இவருக்கு இந்த வடிவழகும், மேன்மையும், நீர்மையும் அந்தக்கர்மஜ்ஞானங்களின் ஸ்தா₂னத்திலேயிருந்து ப₄க்தியை விளக்கின்றன என்றும், அவற்றால் விளையும் பரப₄க்தி முதலானவை தமக்கு ஸ்வயம்ப்ரயோஜனம் என்றும் இப்பாட்டில் கூறுகிறார். முன் பாட்டில் கூறியபடி இவருக்கு ஜ்ஞானகர்மங்களுடைய ஸ்தா₂னத்திலே நின்று ப₄க்தியை விளக்கும் வடிவழகையும் மேன்மையையும் நீர்மையையும் 'உலகுபடைத்துண்ட எந்தை அறைகழல் சுடர்ப்பூந்தாமரை" என்று சுருக்கிக் கூறுகிறார் இப்பாட்டின் தொடக்கத்தில்.

வ்யா:—(உலகுபடைத்துண்ட)

6. ததை₃க்ஷத ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி
தத் தேஜோऽஸ்ருஜத [சாந்-உப (6-2-3)]

[அந்தப் பரப்₃ரஹ்மம் '(நானே) பலவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டி செய்தது.] என்கிறபடியே தன் ஸங்கல்பத்தாலேயே தன்னையொழிந்த எல்லாப் பொருள்களையும் படைத்து, இப்படிப் படைக்கப்

ப்ரளயாபத்து வர, இவற்றையடைய வயிற்றிலேவைத்து ரக்ஷித்துப் பண்ணின வ்யாபாரத்தாலே கண்ணழிவற்ற மேன்மை சொல்லுகிறது. (எந்தை) ஸ்வாமித்வப்ரயுக்த மான மேன்மையை உடையனுயிருந்துவைத்து எத்தனை யேனும் தம்மைத் தாழ நினைத்திருந்தபடியாலே, தம்மை விஷயீகரித்தவத்தால் வந்த நீர்மை சொல்லுகிருர். "மூவுலகளந்த" இதினுடைய எல்லை தாமாக நினைத்திருக் கிருர். (அறை) த்வநியாநின்றுள்ள வீரக்கழலையுடைத் தாய், அத்யுஜ்ஜ்வலமாய் நிரதிஶய போ⁴க்யமாயிருக்கிற திருவடிகளை. இத்தால் அழகு சொல்லுகிறது. (தாமரை சூடுதற்கு) தாமரைபோலேயிருக்கிற திருவடிகளென்ற

பட்ட பொருள்களுக்குப் பிரளயகாலத்திலே ப்ரளயஜலம் முதலானவற்ருலே ஆபத்துவர, இவை அனைத்தையும் தன் வயிற்றிலே வைத்துக் காப்பாற்றிய செயலாலே குறைவற்ற மேன்மையைச் சொல்லுகிருர். (எந்தை)எனக்கு ஸ்வாமியான அவன். அனைவர்க்கும் தலைவனுகையாலே மேன்மையை உடையவனுயிருந்தும், மிகத்தாழ்ந்த என்னை மேல்விழுந்து கடாக்ஷித்தபடியாலே நிறைந்த நீர்மையையும் உடையவன் என்கிருர். தம்மை அனைவரிலும் தாழ்ந்தவராக நினைத்திருப் பவரன்ருே இவர். முதல் பாட்டில் 'மூவுலகளந்த' என்று நீர்மைக்கு விஷயமாகச் சொல்லப்பட்ட மூவுலகிலும் தாழ்ந்த வராகத் தம்மை நினைத்திருக்கிருர். (அறைகழல் சுடர்ப்பூந் தாமரை) ஒலிக்கின்ற வீரக்கழலை உடையதாய், மிகவும் பிரகா சிப்பதாய், தாமரைபோல் இனிமையில் ஒப்பற்றதாயிருக்கும் திருவடிகளை; இத்தொடரால் வடிவழகு சொல்லப்பட்டது. இனி, இம்மேன்மையாலும், நீர்மையாலும், வடிவழகாலும் விளைந்த பரப⁴க்தி முதலானவற்றை விளக்குகிருர்—(தாமரை சூடுதற்கு) திருவடிகள் தாமரைபோன்றவை என்று அநுஸந் தி⁴த்தவுடன்,

வாறே (7) ''कदा पुन:'' (கதா₃ புந:) என்ன வேண்டி யிருக்குமிறே. (சூடுதற்கவாவாருயிர்) அத்தலை யில் வைலக்ஷண்யத்தை அநுஸந்தி₄த்தால் அவன்பக்கல் ருசிபண்ணியல்லது நில்லானிறே சேதநன். (சூடுதற்கவா வாருயிர்) சூடுகையிலே அவாவியிருக்கிற. ஆருயிர் — ஆசைப்படுகிற ஆத்மவஸ்து. (உருகியுக்க) அத்தலையில் வைலக்ஷண்யத்தை அநுஸந்தி₄த்தவாறே அச்சே₂த்₃யமான ஆத்மவஸ்து த்₃ரவத்₃ரவ்யமாய், ஓரவயவியாக்கிக்காண வொண்ணுதபடி மங்கிற்றுயிற்று. (நேரியகாதல்) அந்த அவாவானது விலக்ஷணமானதொரு ஸங்க₃த்தையும்

---

7. கதா₃ புந:ஶங்க₂ரதா₂ங்க₃கல்பக
 த்₄வஜாரவிந்தா₃ங்குஶ வஜ்ரலாஞ்ச₂நம் |
த்ரிவிக்ரம! த்வச்சரணாம்பு₃ஜத்₃வயம்
 மதீ₃யமூர்த்₄தா₄நமலங்கரிஷ்யதி || [ஸ்தோ-ர (31)]

[திரிவிக்கிரமனே! சங்கு, சக்கரம், கல்பகவ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுத₄ம் இவைகளை அடையாளமாக் வுடைய உன் திருவடித்தாமரையிணை என் தலையை எப்போது தான் அலங்கரிக்கப்போகிறது?] என்கிறபடியே அந்தத் தாமரையைச் சூடுவதற்கு ஆசை ஏற்படுமன்றோ. (சூடுதற்கு அவாவு ஆருயிர்) எம்பெருமானுடைய சிறப்பை நினைத்தால் அவனிடம் அறிவுடைய சேதனனுல் ஈடுபடாமல் இருக்க முடியாதன்றோ. (சூடுதற்கு அவாவு ஆருயிர்) அந்தத் திருவடித் தாமரைகளை சூடுவதற்கு ஆசைப்படுகிற ஆத்மவஸ்து. (உருகி உக்க) எம்பெருமானுடைய சிறப்பை அநுஸந்தி₄த்து, பிளக்கவோ உருக்கவோ முடியாததான ஆத்மவஸ்துவும் நீர்ப் பண்டம்போலே உருகுவதாய், மறுபடியும் ஒரு திடப்பொரு ளாக்கிக் காணவொண்ணுதபடி மாறுபாட்டை அடைந்தது. ஆழ்வார் தாம் பக்திபரவசரான நிலையை இப்படிக் குறிக் கிறார். (நேரிய காதல்) அந்த அவாவினாலே உண்டான காதல். அந்த அவாவானது சிறந்ததொரு ஈடுபாட்டைப் பிறப்பித்தது என்று கருத்து. (அன்பு) அந்த ஈடுபாடு ஓர் அன்பை உண்டாக்கிற்று.

பிறப்பித்தது; (8) ' सङ्गात्सञ्जायते कामः'' (ஸங்க3ாத் ஸஞ்ஜாயதே காம:)—அந்த ஸங்க3ந்தானொரு அன்பைப்பிறப்பித்தது. (9) ' ध्रुवा स्मृतिः'' (த்4ருவா ஸ்ம்ருதி:) இத்யாதி3களை நினைக்கிறது. விஷயம் கு3ணாதி4கவிஷயமாகையாலே அந்த அன்பிலே ஓரின்புண்டு-இனிமை; அதென் பட்டது? அதுதான் இனிதாயிருக்குமிறே. து3:க்கா2த்மகமான விஷயத்தைப்பற்றி வந்ததன்றிக்கே, (10) ' सुसुखं कर्तुमव्ययं'' (ஸுஸுக2ம் கர்த்துமவ்யயம்) என்கிறபடியே

---

8. த்4யாயதோ விஷயாந் பும்ஸஸ்
ஸங்க3ஸ் தேஷூபஜாயதே ।
ஸங்க3ாத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோ4ऽபி4ஜாயதே ॥ [கீதை (2-62)].

[விஷயங்களை இடைவிடாமல் எண்ணும் மனிதனுக்கு அவற்றில் அதி4கமான சேர்க்கை (ஸங்க3ம்) உண்டாகிறது. அந்த ஸங்க3த்தினால் காமம் உண்டாகிறது. காமத்தினால் கோபம் ஏற்படுகிறது.]

9. ஆஹாரஶுத்3தௌ4 ஸத்வஶுத்3தி4: ।
ஸத்வஶுத்3தௌ4 த்4ருவா ஸ்ம்ருதி: ॥
[சா2ந்-உப (7-26-2).]

[உண்ணும் உணவு சுத்தமாயிருந்ததாகில் மனம் சுத்தியடைகிறது. மனம் பரிசுத்தமடைந்தவளவில் 'நிலைநின்ற நினைவு' எனப்படும் ப4க்தி உண்டாகிறது.] என்று அந்த ஈடுபாடும் அதிலிருந்து விளையும் ப4க்தியும் பேசப்பட்டதன்றோ. (அன்பில் இன்பு) இந்த அன்பானது எல்லா கு3ணங்களும் நிறைந்த எம்பெருமானைப் பற்றியதாகையாலே அந்த அன்பிலே ஓர் இனிமை உள்ளது. அந்த ப4க்தி இனிமையே வடிவெடுத்ததாய் இருக்குமன்றோ கீ3தா [2-62] ஶ்லோகத்தில் எடுக்கப்பட்ட துன்பத்தை விளக்கும் ப்ராக்ருதவிஷயங்களைப் பற்றி வந்ததாயிராமல்,

10. ராஜவித்3யா ராஜகு3ஹ்யம் பவித்ரமித3முத்தமம் ।
ப்ரத்யக்ஷாவக3மம் த4ர்ம்யம் ஸுஸுக2ம்
கர்த்துமவ்யயம் ॥ [கீதை (9-2)].

ஸ்மர்த்தவ்ய விஷயத்தினுடைய ரஸ்யதையாலே இது தானே ரஸிக்குமிறே. அதுதானென்போலே? என்னில், (ஈன்தேறல்) அம்ருதஸமுத்₃ரத்தில் கடைந்த அம்ருதம் போலே போ₄க்₃யமாயிருக்கும் விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தாலே; அதுதான் (11) "आनन्दमयः" (ஆநந்த₃மய:) என்கிற விஷயத்தைப்பற்றி வருகையாலே ஒரு ரஸஸாக₃ரமாயிருக்குமிறே; விலக்ஷண விஷயமாகையாலும் இவனுடைய ருசியாலும் ஒருகடலிலே ஏகாகி விழுந்தாற்போலேயிருக்குமிறே. (அமுதவெள்ளத்தாளும்) இன்பவெள்ளத்திலே உளளுகையாகிற. (சிறப்புவிட்டு) இந்தப் பரமப₄க்திகளே

[வித்₃யைகளுக்குள்ளும், ரஹஸ்யங்களுக்குள்ளும் மேலானது இது; பாபங்களைப்போக்கடிப்பவற்றில் உயர்ந்தது; என்னை நேரில் காட்டுவது; இனிதானது; (பலத்தைக் கொடுத்த பின்பும்) அழியாதது.] என்கிறபடியே நினைக்க வேண்டிய விஷயமாகிற எம்பெருமானைப் பற்றியதாகையாலே நினைவாகிய இந்த ப₄க்தியும் மிக இனிதாயிருக்குமன்றோ. அது எதைப்போல் இனிமையாயிருக்கும்? எனில்—(ஈன்தேறல்) அமுதக்கடலிலிருந்து கடைந்தெடுத்த அமுதம்போலே இனிதாயிருக்கும், அன்பு செலுத்தப்படும் எம்பெருமானுடைய இனிமை மிகுதியாலே;

11. தஸ்மாத்₃ வா ஏதஸ்மாத்₃ விஜ்ஞாநமயாத்
அந்யோऽந்தர ஆத்மா ஆநந்த₃மய: [தை-ஆந (5).]

[அப்படிப்பட்ட இந்த விஜ்ஞானமயனான ஜீவனைக்காட்டிலும் வேறுபட்டவனும், (அந்த ஜீவனுக்கு) அந்தராத்மாவாயிருப்பவனும் ஆநந்த₃மயனான பரமாத்மா.] என்கிற ஆனந்தக் கடலான அவனைப் பற்றி வருகையாலே அந்த ப₄க்தியும் ஒரு ரஸக்கடலாயிருக்குமன்றோ. ப₄க்திக்கு விஷயமான எம்பெருமான் மிகச் சிறந்தவனாகையாலும், ப₄க்தி உடையவனுடைய ருசியாலும் கடலிலே ஒரு தனியன் விழுந்தது போலே இன்பத்திலே திளைத்துத் திக்கித் திணற வைக்குமன்றோ; இதைச் சொல்லுகிறார் மேலே—(அமுதவெள்ளத்தாளும் சிறப்புவிட்டு) இன்பவெள்ளத்தில் உளளுகையாகிற சிறப்பை விட்டு;

யுடையனுகையாகிறதிறே ஐஶ்வர்யம். அத்தைவிட்டு, (ஒருபொருட்கு)இத்தை விட்டால் இனிப் பெற நினைப்பது இவ்வருகே சிலவையிறே. அவையாகிறன — தர்மார்த்தகாமமோக்ஷங்களில் சொல்லுகிறவையிறே; அவற்றை ஒன்றாக நினைத்திராத அநாதரந்தோற்ற ஒருபதார்த்தமென்கிறார். (அசைவோரசைக) அவைதான் இது போலே ஸுலபமாயிராது யத்நித்துப் பெறவேண்டுமதாய், பெற்றால் ப்ரயோஜநம் அல்பமாயிருக்கும். அவற்றுக்கு ஆசைப் படுவார் அங்ஙனே க்லேஶப்படுக. (12) "क्लेशोऽधिकतरः" (க்லேஶோதிகதர:) என்கிறபடியே நிரூபித்தால் து:க்காத்மகமென்றாலும் நாட்டிலே சில புருஷர்கள்

பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற பெருஞ்செல்வத்தை விட்டு என்று கருத்து; இனிமேல் இதைவிட்டு அறம் பொருள் இன்பம் விடு என்னும் புருஷார்த்தங்களைத் தேடிப்போகிற வர்கள் அறிவிலிகள் என்கிறார். (ஒரு பொருட்கு) இந்த அமுதவெள்ளத்தானும் சிறப்பை விட்டால் இவன் பெற நினைப் பது இவ்வுலகில் 'அறம், பொருள், இன்பம், வீடு' என்று சொல்லப்படுகிற புருஷார்த்தங்களேயன்றோ; அவற்றை ஒரு பொருளாகத் தாம் நினைக்கவில்லை என்னும் அநாதரம் [ஆதரவின்மை]தோற்ற அவற்றை 'ஒரு பொருள்' என்கிறார். (அசைவோர் அசைக) அந்தப் புருஷார்த்தங்கள் தாம் இது போல் எளிதாயிராமல், மிகமுயன்று பெறவேண்டுபவையாய், பெற்றாலும் பயன் மிகக் குறைவாய் இருக்கும். அவற்றுக்கு ஆசைப்படுகிறவர்கள் அலைந்து அல்லலுறுக.

12. க்லேஶோऽதிகதரஸ் தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம் |
அவ்யக்தா ஹி கதிர் து:க்கம்
தேஹவத்பிரவாப்யதே || [கீதை (12-5).]

[அவ்யக்தமெனப்படும் ஆத்மஸ்வரூபத்திலே ஈடுபட்ட மனத்தையுடையவர்களுக்கு (அதை அடையும் விஷயத்தில்) மிகவும் து:க்கமுள்ளது. தேஹாத்மாபிமானிகளுக்கு, ஆத்ம ஸ்வரூபத்தை அடைவது மிகவும் கடினமன்றோ] என்கிற படியே அப்புருஷார்த்தங்களால் அல்லல் விளைகின்றது

அவற்றை விரும்பாநின்ருர்களேயென்ன; அறிவுகேடர் படியோ நான் சொல்லுகிறது? பு₃த்₃தி₄மான்கள் இவற்றை ஸ்வீகரிப்பதாக மநோரதி₂ப்பார்களோ? (திருவொடு இத்யாதி₃) ஐஶ்வர்யம் நிலைநின்று அதுதானே யாத்ரையாயிருப்பது; இத்தாலும்ப₂லமில்லையிறே போ₄க்தாவுக்கு ஶக்தி வைகல்யமுண்டாகில்; அவனுமொருநாளுமழியாத மிடுக்கையுடையனுவது; ஐஶ்வர்யந்தான் ப்ராதே₃ஶிகமாவதன்றிக்கே த்ரைலோக்யமும் விஷயமாவது; இத்தோடேயடுத்து—

என்ருலும் உலகில் சில மனிதர்கள் அவற்றை விரும்புகின்ருர்களே எனில்; அறிவிலிகளான அவர்களைப்பற்றியோ நான் பேசுகிறேன்? தெளிந்த அறிவுடைய அறிவாளிகள் இவற்றை ஏற்றுக்கொள்ள நெஞ்சாலும் நினைப்பார்களோ? இந்தப் புருஷார்த்த₂ங்களை விவரிக்கிருர் மேலே—(திருவொடு மருவிய இயற்கை மாயாப்பெருவிறல் உலகம் மூன்றினெடு) ஐச்வர்யத்தோடு எப்போதும் இருப்பவனுகவும், அதை அநுப₄விக்கக் கூடிய அழியாத மிகுந்த ப₂லத்தை உடையவனுகவும், மூன்று உலகங்களையும் தனக்கு அதீ₄னமாக உடையவனுகவும் இருந்தாலும்; பொதுவாக ஐச்வர்யம் அற்பமாகவும் நிலைநில்லாததாகவும் இருக்கிறது; அப்படியில்லாமல் ஐச்வர்யம் நிலைகிற்பதாகவும் அதுவே இயற்கையாகவும் இருந்தபோதிலும்; இப்படிப்பட்ட ஐச்வர்யத்தைப் பெற்றிருந்தாலும், அநுப₄விப்பவனுக்கு அநுப₄விக்கும் சக்தி இல்லையாளுல் பயனில்லை; அப்படியில்லாமல் அவனும் ஒருநாளும் அழியாத அநுப₄வ சக்தியை உடையவனுய் இருப்பது; அந்த ஐச்வர்யமும் ஒரு கிராமத்தளவிலேயோ, ஒரு தேசத்தளவிலேயோ அடங்காமல் மூவுலகத்திற்கும் அதி₄பதியாய் இருப்பது; இப்படிப்பட்ட ஐச்வர்யத்தையும் அறிவாளிகள் ஏற்கமாட்டார்கள் என்று கருத்து. 'அளவற்றதும் நிலையானதுமான மோக்ஷத்தைப் பெறுவது சிறப்பன்ருே?' என்னும் கேள்வியெழ, அறிவாளிகள் அதையும் ஏற்கமாட்டார்கள் என்கிருர் மேலே (உலகம் மூன்றினெடு நல்வீடு பெறினும்) முற்கூறிய ஐச்வர்யத்தை அநுப₄வித்த பின்பு ஆத்மாநுப₄வமாகிற தாழ்ந்த மோக்ஷத்தையும் பெற்று, அதற்குப்பின் பரமபுருஷனை அநுப₄விப்பதாகிற சிறந்த மோக்ஷத்தையும் பெற்ருலும்;

(நல்வீடு பெறினும்) நல்வீடென்று - உத்தம புருஷார்த்தத்தைச் சொல்லுகையாலே, நடுவில் கைவல்ய புருஷார்த்தத்தைச் சொல்லிற்றாகிறது. இதுதான் பெறக் கடவதென்றிருக்கையன்றிக்கே இதிலே தோள்மாறும்படியானாலும், (கொள்வதெண்ணுமோ) இவை ஸ்வீகரிக்கக் கடவதான மநோரத ஸமயத்திலேதானுண்டோ? ஐச்வர்யம் அஸ்திரமாகையாலே கழியுண்டது; ஆத்மலாபம் பரிச்சிந்நமாகையாலே கழியுண்டது; பகவத்புருஷார்த்தம் ஆசைப்பட்ட உடம்பையொழிய வேறொருடம்பைக் கொண்டு போய் அநுபவிக்குமதாகையாலே கழியுண்டது; அவ்வுடம்போடே இருக்கச்செய்தே பெறக்கடவதான பரபக்த்யாதிகளோடு இவை * ஒவ்வாதே நிற்கிறவிடம்

"நல்வீடு" என்று பகவத்ப்ராப்தி ரூபமான சிறந்த மோக்ஷத்தைச் சொல்லுகையாலே, நடுவிலுள்ள தாழ்ந்த மோக்ஷமாகிற கைவல்ய மோக்ஷத்தையும் சொன்னதாகக் கொள்ளவேணும். (பெறினும்) இவற்றைப் பெறவேண்டும் என்று மனோரதிப்பதோடு நில்லாமல் இப்புருஷார்த்தங்கள் அனைத்தையும் பெற்றே தீர்ந்தாலும். (கொள்வதெண்ணுமோ) இவற்றை ஏற்றுக்கொள்ளுவதற்கு நினைப்பதற்கும் இடமுண்டோ? ஐச்வர்ய புருஷார்த்தம் என்றும் ஒரு நிலைநில்லாத அசித்தைப் பற்றியதாகையாலே தானும் நிலைநில்லாதது என்னும் காரணத்தாலே அதை நினைக்கவும் மாட்டார்கள். ஆத்மாநுபவமாகிற கைவல்ய மோக்ஷம் நித்யமாயினும், அணுவான ஆத்மாவைப் பற்றியதாகையாலே அளவுபட்டது என்னும் காரணத்தாலே அதைக்கொள்ளவும் எண்ணமாட்டார்கள். பகவதநுபவம் இந்தக் குறைகள் இல்லாததாயிருந்தாலும், ஆசைப்பட்ட இந்த உடம்போடு அநுபவிக்கத் தக்கதாயிராமல் வேறோர் உடம்பைக்கொண்டு வேறோர் தேசத்திற்குப் போய் அநுபவிக்கவேண்டியிருக்கையாலே அதையும் அடைய நினைக்கமாட்டார்கள். இந்த உடம்போடே இருக்கும்போதே பெறக்கூடியவையான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளோடு இவை

---

* (பா) ஒவ்வாதென்றவிடம்.

விசாரவிஷயமோ? ஆனாலுஞ் சிலபேர் நினையாநிற்கிறார் களேயென்னில், — (தெள்ளியோர் குறிப்பு எண்ணுமோ) ஸாராஸாரவிவேகம் பண்ணியிருப்பார்க்கு மநோரதத்துக்கு விஷயமல்ல; ஸாராஸார விவேகஜ்ஞர் நல்லதுக்கும் தீயதுக்குந் தரமிட்டுப் பிறந் (பிரித்தறிந்)து இருப்பார்கள். (13) ''सारासारविवेकज्ञा गरीयांस:'' (ஸாராஸாரவிவேகஜ்ஞா: கரீயாம்ஸ:) ''கூடுமாசை'' இத்யாதி. 2.

ஒப்பாகமாட்டா என்னும் விஷயத்திற்கு ஆராய்ச்சியும் வேணுமோ? 'ஆனாலும் சிலர் அந்தப் புருஷார்த்தங்களை அடைய நினைக்கிறார்களே' என்னும் கேள்வி எழக் கூறுகிறார்.—(தெள்ளியோர் குறிப்பு எண்ணுமோ?) 'இன்னது ஸாரம், இன்னது அஸாரம்' என்று பகுத்தறிய வல்லவர்கள் இவற்றைப் பெறவேண்டும் என்று மனத்தாலும் எண்ண மாட்டார்கள். ஸாராஸார விவேகம் அறிந்தவர்கள் இயற்கையாகவே நல்லதுக்கும் தீயதுக்கும் உள்ள வாசியைப்பிரித்து அறிந்தவர்களன்றோ.

13\. ஸாராஸாரவிவேகஜ்ஞா கரீயாம்ஸோ விமத்ஸரா:।
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி க்ருதோ
வேதார்த்தஸங்க்ரஹ:॥
[வேதார்த்தஸங்க்ரஹம் (நிகமநச்லோகம்).]

[ஸாரம், அஸாரம் ஆகிய இவற்றை ஆராய்ந்து அறிபவர்களும் (மிகுந்த கேள்விஞானத்தால்) பெருமை பெற்றிருப்பவர்களும், பிறரிடம் மாத்ஸர்யமற்றவர்களும், ப்ரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவர்களுமான மஹான்கள் (இக்காலத்திலும்) உளர் என்னும் நிச்சயத்தாலேயே என்னால் வேதார்த்தஸங்க்ரஹம் செய்யப்பட்டது] என்று எம்பெருமானார் அருளியதும், ''கேடில் சீர்'' [திருச்சந்த 108] என்று தொடங்கி, ''வீடதான போகமெய்தி வீற்றிருந்தபோதிலும் கூடும் ஆசையல்ல தொன்று கொள்வனோ குறிப்பிலே'' என்று திருமழிசைப் பிரான் அருளியதும் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. 2.

3. குறிப்பில் கொண்டு நெறிப்பட, உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்றுபுக ழாணை,
மெய்பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வ னாகிச், சுடர்விளங் ககலத்து
வரைபுரை திரைபொரு பெருவரை வெருவுற,
உருமுர லொலிமலி நளிர்கடற் படவர
வரசுஉடல் தடவரை சுழற்றிய, தனிமாத்
தெய்வத் தடியவர்க் கினிநா மாளாகவே
இசையுங்கொல், ஊழிதோ றூழியோ வாதே.

பதவுரை:— மூன்று உலகம் — மூன்று லோகங்களும், நெறி பட — நல்வழியில் செல்லும்படியாக, குறிப்பில் கொண்டு — திருவுள்ளத்தில் நினைப்பவனாய், உடன் வணங்கு —(அம்மூவுலகங்களும்) ஒருபடிப்பட்டுத் தொழுகையாகிற, தோன்று புகழ் — (ஸ்ருதி) ப்ரஸித்₃த₄மான புகழையுடையவனாய், ஆணை மெய் பெற நடாய — தன் ஆணையைச் சரிவர நடத்துமவனாய். தெய்வம் மூவரில் — ப்₃ரஹ்மா, ருத்₃ரன், இந்த்₃ரன் என்னும் மூவரிலும், முதல்வன் ஆகி — மேலானவனாய், சுடர் விளங்கு அகலத்து — (ஆப₄ரணங்களின்) ஒளியையுடைத்தான திருமார்பையுடையனாய், வரைபுரை திரை — மலைபோன்ற அலைகள், பொரு — மோதாநின்றதாய், பெருவரை வெருவு உற — பெரிய பர்வதங்கள் நடுங்கும்படியாக, உருமு உரல் ஒலி மலி —இடியின் முழக்கம் போன்ற கோ₄ஷமானது மிகுந்திருப்பதான, நளிர் கடல் —குளிர்ந்த ஸமுத்₃ரத்தை, படம் அரவு அரசு — படங்களையுடைய ஸர்ப்ப ராஜாவாகிய வாஸுகியினுடைய, உடல் — சரீரத்தை, தடம் வரை சுழற்றிய — மிகப்பெரிய (மந்தர) மலையில் சுற்றிக்கடைந்தவனாய், தனி மாத் தெய்வம் — ஒப்பற்ற பரதே₃வதையாயுள்ளவனான எம்பெருமானுக்கு. அடியவர்க்கு —தா₃ஸபூ₄தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, இனி நாம் — இனி நாங்கள், ஊழிதோறூழி — ஒவ்வொருகல்பத்திலும், ஓவாது — இடைவிடாமல், ஆளாக — அடியவர்களாம்படி, இசையுங் கொல் — (இப்பேறு) பொருந்துமோ?

அவ:— மூன்றாம்பாட்டு. (குறிப்பித்யாதி) முதலிட்டி ரண்டு பாட்டில், அதில் முதற்பாட்டில் அவன் வடிவழகைப் பேசியநுபவித்தார்; இவன் றன்னைப்பெற்று அநுபவித்துக் கொண்டிருக்குமிருப்பில் அவன் விஷயமாகப் பண்ணும் பக்தியே இனிதென்றார் இரண்டாம் பாட்டில்; இப்பாட்டில் பக்திபண்ணும் விஷயத்துக்கு எல்லை எவ்வளவென்னில், அவன் தொடங்கி, ததீயசேஷத்வ பர்யந்தமாக என்கிறது.

வ்யா:— (குறிப்பில் கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன்வணங்குதோன்று புகழாணை மெய்பெற நடாய— தெய்வம் மூவரில் முதல்வன்) என்று—இவனோடே அந்வயித்தல். (நெறிப்படக் குறிப்பில் கொண்டு) (6) "बहु स्याम्" (பஹு ஸ்யாம்) என்று ஸங்கல்பிக்கிறபடியே அரும்பும்படி திருவுள்ளத்திலே கொண்டு; ஸ்வவ்யதிரிக்தஸமஸ்த

அவ :—முதற் பாட்டில் எம்பெருமானுடைய வடிவழகைப் பேசி அநுபவித்தார்; இரண்டாம் பாட்டில் அவ்வடிவழகை அநுவாதம் செய்து கொண்டு இவனைப் பரமபதத்தில் பெற்று அநுபவித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் இங்கிருந்து இந்த தேஹத்தோடு அவன் விஷயமாகச் செய்யும் பக்தியே இனியது என்றார்;. இப்பாட்டில் பக்தி பண்ணும் விஷயத்திற்கு எல்லை எது என்னும் கேள்வி எழ, 'அவனிடம் தொடங்கி அவன் அடியாரளவாக' என்கிறார்.

வ்யா :—(குறிப்பில் கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன் வணங்கு தோன்று புகழாணை மெய்பெறநடாய தெய்வம் மூவரில் முதல்வன்) இத்தொடரில் 'மெய்பெறநடாய' என்பது வரை உள்ள பகுதியை 'முதல்வன்' என்னும் சொல்லுக்கு விசேஷணமாகவும் கொள்ளலாம். "தெய்வம் மூவர்" என்பதற்கு விசேஷணமாகவும் கொள்ளலாம். முதற்பொருள் இனி விவரிக்கப்படுகிறது. (நெறிப்பட குறிப்பில் கொண்டு) * 26—ம் பக்கத்தில உள்ள ஆறுவது ப்ரமாணத்தின்படி தன்னுடைய ஸங்கல்பத்தின்படியே உலகனைத்தும் உண்டாம்படி திருவுள்ளத்திலே கொண்டு, தன்னையொழிந்த மற்ற

வஸ்துக்களும் நெறிப்படும்படியாக — வழிபடும்படியாகத் திருவுள்ளத்திலே கொண்டு என்றுமாம். இப்படி நெறிப்படு வார் சிலராய், சிலரன்றிக்கே யிருக்கையன்றிக்கே, (உலகம் மூன்று) தன்னை யொழிந்தாரடையத் தன்னையாஶ்ரயிக்கும் படியாக. அதுதன்னில் அந்யோந்யம் ஆஶ்ரயிப்பாரும் ஆஶ்ரயணீயருமாகிற வைஷம்யமுண்டேயாகிலும் தன்னள விலே வந்தால் எல்லாருமொக்கக்கூடித் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கும்படிக்கீடாக. (உடன்வணங்கு) தனித்தான போதாயிற்று அவாந்தரவிஷயமுள்ளது. இவன்பக்கலிலே எல்லாரும் கூடித் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பார்கள். இத்தால் வந்த ப்ரஸித்₃தி, கிடந்தவிடம் தெரியாதபடி ஒரு மூலையிலே அடங்கிக்கிடக்குமோ? என்னில், (தோன்றுபுகழ்) ஶ்ருதிப்ர ஸித்₃த₄ம். (ஆணை மெய்பெற நடாய) ஆஜ்ஞையைப் பத்தும்

ஜீவர்கள் அனைவரும் நெறிப்படும்படியாக—தன்னை வழிபடும் படியாக, தன் திருவுள்ளத்தில் கொண்டு" என்றும் பொருள் கொள்ளலாம். இப்படி நெறிப்படுவார் சிலரும் நெறிப்படா தவர் சிலரும் இருப்பார்களோ? எனில்—(உலகம் மூன்று) தன்னைத்தவிர மற்ற எல்லாரும் தன்னை ஆஶ்ரயிக்கும்படியாக. இவர்களில் ஒருவருக்கொருவர் ஆஶ்ரயிப்பாரும் ஆஶ்ரயிக் கப்படுவாருமாய் இருக்கும் வேறுபாடு உண்டேயாகிலும், தன் விஷயத்தில் வந்தால் எல்லாரும் ஒன்றுகூடித் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பவர்களாகவே இருப்பார்கள் என்கிறார் மேலே—(உடன் வணங்கு) மற்றுள்ளவர்களிலும் சிலர் வணங்கப்படு பவர்களாய் இருந்தாலும், அவர்களுக்கு அனைவராலும் கூடி வணங்கப்படும் பெருமை இல்லை. இவனிடம் வரும்போது எல்லோரும் கூடி இவன் திருவடிகளிலே வணங்குவார்கள். 'இதனால் வந்தபுகழ் எவரும் அறியாதபடி ஒரு மூலையிலே அடங்கிக் கிடக்குமோ?" எனில்—(தோன்று புகழ்) மூலப்ர மாணமான வேத₃த்திலே பறைசாற்றப்படுவதாய் இருக்கை. (ஆணை மெய்பெற நடாய) தன் ஆஜ்ஞையைப் பரிபூர்ணமாக நடத்துகின்றவனும் எம்பெருமானே. மற்றவர்களுடைய ஆணை யைப்போல் இவனுடைய ஆணை பழுதுபடாது என்று கருத்து.

பத்தாக நடத்தாநிற்பானுமாய், தெய்வம் மூவரில் முதல் வனாகி, அன்றிக்கே, இவர்களும் தன்னோடு ஸமாநராய் "அவனோ ஈஶ்வரன்? இவர்களோ ஈஶ்வரர்கள்?" என்று கண்டார்க்கு இவர்கள் பக்கலிலேயும் ஈஶ்வரத்வஶங்கை பண்ணும்படியிறே தான் இவர்களுக்குக் கொடுத்துவைக்குந் தரம், ஆகையாலே "நடாயதெய்வப்மூவர்" என்று இவர் களோடே அந்வயிக்கவுமாம் (மூவரில் முதல்வனாகி) தன்னை யொழிந்த இருவரளவில் அவர்களுடைய ஶரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் நியாமகனாய் தன்னளவில் அஸாதாரண விக்ரஹத்தோடே நின்று, அதுக்கு நியாமகனாய். அன்றிக்கே

இப்படி இருப்பவன் யாரெனில்—(தெய்வம் மூவரில் முதல் வனாகி) ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதாக உலகில் புகழ்பெற்ற ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களில் படைக்கும் கடவுளையும் உந்தித்தாமரையில் படைத்தவனாகையாலும், ப்ரளயகாலத்தில் ப்ரஹ்மருத்ரர்கள் ஆகிய இருவரையுமே வயிற்றில் வைத்து ரக்ஷித்தவனாகையாலும் முழுமுதல்வன் என்று தெளிவாக விளங்கும் திருமாலே இவன் என்கிறார். இரண்டாவது பொருளில் "மெய்பெற நடாய" என்பது வரை உள்ள பெருமைகள் மூவருக்கும் எப்படி அந்வயிக்கும்? எனில்; மேலெழக்காண்பார்க்கு ப்ரஹ்மருத்ரர்களும இவனோடு ஒத்தவர்களாய் "அவனோ ஈச்வரன்? இவர்களோ ஈச்வரர்கள்?" என்று ஐயமுறவேண்டும்படியன்றோ எம்பெருமான் இவர் களுக்குப் பெருமைகளைக் கொடுத்து வைத்திருக்கிறான். அதையிட்டு இப்பெருமைகளைப் பொருந்தவிட வேண்டும். (மூவரில் முதல்வனாகி) மூவருக்கும் முதல்வனாகி என்றும் கொள்ளலாம். தன்னிலும் வேறுபட்ட பிரமன் உருத்திரன் ஆகியவர்கள் விஷயத்தில் அவர்களுடைய ஶரீரத்தையும் ஆத்மாவையும் நியமிப்பவனாய், விஷ்ணுவாகிய தான் அப்ராக் ருதத் திருமேனியோடு நின்று அதை நியமிப்பவனாய் இருப் பவன் என்று கருத்து. பிரமன் உருத்திரன் இந்திரன் ஆகிய மூவரையும் சேர்ந்து மூவராக ப்ரமாணங்களில் சொல்லுவ துண்டாகையாலே, அவர்கள் மூவருக்கும் முதல்வன் [காரண

இந்த்₃ரனேயுங்கூட்டி மூவரென்னவுமாம். (சுடர்விளங்க கலத்து) ஆப₄ரணசோபை₄யையுடைத்தான திருமார்பை யுடையனாய். அன்றிக்கே சந்த்₃ர ஸூர்யர்களாலே விளங்கா நின்றுள்ள ஆகாசத்தில் பாழ் இரும்படியாக என்னுதல். (வரைபுரையித்யாதி₃) அவன் ஆஶ்ரிதார்த்த₂மாகச் செய்யுஞ் செயல்களில்இதொன்றுமமையாதோ இவனே ஆஶ்ரயணீய னென்னுமிடத்துக்கு? (வரைபுரைதிரை) மலையோடொத்த திரை. அவை மலையும் மலையுந் தாக்கினாற்போலே தன்னில் தான் பொருகிறபோது. (பெருவரைவெருவுற) குலபர்வதங் கள் நடுங்க. (உருமுரலொலி) அப்போது உருமு இடித்தாற் போலேயிருக்கிற த்₄வநியானது மிக. (நளிர்கடல்) பொறி யெழக் கடையச் செய்தேயும் அவனுடைய கடாக்ஷமாத்ரத் தாலே கடல் குளிர்ந்தபடி; குமுறுதபடி நடுங்க என்னுதல்.

பூ₄தன்] என்றும் கொள்ளலாம். (சுடர் விளங்ககலத்து) ஆப₄ரணங்களால் உண்டான அழகையுடையதான திரு மார்வை உடையவனாய். "தடவரை சுழற்றிய" என்பதோடு அந்வயிக்கிறது. அன்றிக்கே அகலம் என்று ஆகாசத்தைக் குறிப்பதாய், 'சுடர் விளங்ககலத்து' என்று 'சந்த்₃ர ஸூர்யர் களால் பிரகாசிக்கும் ஆகாசத்தில் வெட்டவெளியாய் இருக்கும் பிரதேசத்தை அடைத்துக்கொண்டு மலைபோன்று கிளரும் அலைகள்' என்று அடுத்தபடியும் அந்வயிக்கலாம். (வரை புரை.........) அவனடியார்களுக்காகச் செய்யும் செயல்களில் இந்த அமுதம் கடைந்த செயல் ஒன்று போதாதோ இவனே ஆஶ்ரயிக்கத்தக்கவன் என்று காட்டுவதற்கு? (வரைபுரை திரை) மலையைப்போன்ற அலைகள். (திரைபொரு) அந்த அலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்போது மலையும் மலையும் மோதினாற்போலே இருக்கிறது என்று கருத்து. (பெருவரைவெருவுற) பெரிய குலபர்வதங்கள் நடுங்கும்படியாக. (உருமுரல் ஒலிமலி) அப்போது இடி இடித்தாற்போலே இருக்கும் ஶப்₃த₃ம் மிகுந்துவர. (நளிர்கடல்) குளிர்ந்த திருப்பாற் கடலை; 'சுழற்றிய' [கடைந்த] என்பதோடு அந்வயம். தீப் பொறி எழும்படியாகக் கடைந்தபோதிலும் எம்பெருமானுடைய கடாக்ஷம் பட்டவுடனேயே கடல் குளிர்ந்துவிட்டது என்பதை "நளிர்" என்னும் விஶேஷணம் காட்டுகிறது. "நளிர்" என்னும் பத₃ம் நடுக்கத்தையும் காட்டும். கடைந்த வேக₃த்தாலே

(படவரவரசு) ஒரு சேதனனைப்பற்றிக் கடையச் செய்தேயும் ஒரு நலிவின்றிக்கேயிருக்கையில் ஸ்வஸ்பர்ஶத்தால் வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் படத்தைவிரிக்கிற, அரவரசுண்டு—வாஸுகி, அதினுடைய உடலைச்சுற்றி. (தடவரை) கடலைக் கண்செறியிட்டாற்போலேயிருக்கும் மந்தாபர்வதத்தைக் கொடுபுக்குநட்டு (சுழற்றிய) கடல் கலங்கிக் கீழ் மண்கொண்டு மேல்மண்ணெறிந்து அம்ருதம் படுமளவும் செல்ல, தொட்டார்க்கெல்லாம் 'நான் கடைந்தேன்' என்று சொல்லலாம்படி தானே சுழன்று வரும்படியாகவாயிற்று கொடுபுக்கு வைத்த நெறாய்ப்பம். (தனிமாத் தெய்வம்) அத்விதீயபரதேவதை; இப்படி அத்விதீய பரதேவதைக்கு ஆளாகவோ ஆசைப்படுகிறது? என்னில்.—(அடியவர்க்கு)

சுழன்றபடி நடுங்கிற்று என்று கருத்து. (படவர அரசு உடல்) அறிவுள்ள ஒரு ஜீவனுயிருந்தபோதிலும், பற்றியிழுத்துக் கடையும்போது வாசுகியாகிற பாம்புக்கு ஒரு துன்பம் இல்லாமல் எம்பெருமானுடைய திருக்கை ஸ்பர்ஶத்தாலே வந்த ஆனந்தத்துக்குப் போக்குவிடாகப் படத்தை விரிக்கிற பாம்பரசனுகிற வாஸுகியின் உடலைச் சுற்றி. (தடவரை) கடலையே அடைத்துக்கொண்டாற்போலே இருக்கும் பெரிய மந்தரமலையைக் கொண்டுவந்து மத்தாக நட்டு. (சுழற்றிய) சுழலச்செய்த; கடல்கலங்கிக் கீழ்மண் கரைமண் மேலே போதும்படியாக ஆக்கி, அமுதம் கிளம்பும் வரையில் கடைகயிறான வாசுகியைத் தொட்டவர்களான தேவர்கள் அசுரர்கள் எல்லாம் 'நான் கடைந்தேன்' என்று சொல்லலாம்படி எம்பெருமான் இரண்டு புறமும் இரண்டு உருவங்களை எடுத்துக்கொண்டு ஆயிரம் தோளால் அலைகடல் கடைகையாலே மலை தானே சுழல்கிறதோ என்று தோற்றும்படியாக மலையைக்கொண்டு வந்து நட்டுக் கடைந்தபடி. (தனிமாத் தெய்வம்) ஒப்பற்ற பரதெய்வம். இப்படிப்பட்ட ஒப்பற்ற பரதெய்வத்துக்கு அடிமைப்படவோ ஆசைப்படுகிறீர்? என்னும் கேள்வியெழ—

ப்ரயோஜநாந்தரபரரான தேவதைகளுக்காகத் தன்னுடைய உடம்பு நோவக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக்கொடுத்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து அவன் நீர்மையிலே தோற்று எழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. (இனிநாம்) ஆத்மஸத்தை உள்ளவன்று தொடங்கி பாகவதசேஷமாய்ப்போருவது ப்ராப்தமாயிருக்க, கர்மத்தாலே "நான்" என்றும் "என்னது" என்றும் போந்தோம்; இனி சேஷித்த காலமாகிலும் இவ்வஸ்து பாகவதசேஷமென்னுமிடத்தை அவன் காட்ட, அவன் ப்ரஸாதத்தாலே கண்ட நாம். அவர்களோடொப்பூணாய் ஒத்த தரமாகவோவென்னில்,— (ஆளாக) சேஷபூதராக. அவர்களுக்குமாளாய் "நான், எனக்கு" என்றிருக்கும் இருப்புங்கலந்து

(அடியவர்க்கு) மற்ற பயன்களை விரும்பும் தேவர்களுக்காகத் தன்னுடைய உடல் நோவக்கடைந்து அமுதத்தைக்கொடுத்த பேருதவியைக் கண்டு அவனுடைய இந்த நீர்மைக்குத் தோற்று அடிமைப்பட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்யவே ஆசைப்படுகிறேன் என்கிறார். (இனி நாம்) ஆத்மாவுக்கு ஸத்தை (இருப்பு) உண்டாயிருக்கும் அநாதிகாலமாக பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருப்பது தகுதியாயிருக்க, கர்மத்தாலே நான் என்றும், எனது என்றும் அஹங்கார மமகாரங்களால் ஆக்ரமிக்கப்பட்டவர்களாய் இருந்தோம். இனிமேல் வருங்காலத்திலாவது இந்த ஆத்மவஸ்து பாகவதர்களுக்கு அடிமைப்பட்டது என்னும் விஷயத்தை அவன் தன் நிர்ஹேதுக க்ருபையாலே காட்ட, அவ்வருளாலே கண்ட நாம். அந்த அடியவர்களோடு ஒன்றாக பகவத் விஷயத்தை அநுபவித்துக்கொண்டு ஒருபடிப்பட்டிருக்கவோ ஆசைப்பட்டிருக்கிறது? எனில்— (ஆளாக) பாகவதர்களுக்கு அடிமைப்பட. அவர்களுக்கும் அடிமைப்பட்டு அஹங்காரமமகாரங்களும் கூடியிருக்கும் நிலையோ?

செல்லவோவென்னில்.—(ஆளாகவே)ஆளாந் தரமன்றிக்கே ஶேஷத்வமே வடிவாக. (இசையுங்கொல்) அவன் * ஆள் பார்த்துழிதருவானாகையாலே இவ்வர்த்தத்தில் இவனை இப்போதாக இசைவிக்கவேண்டா; இவர் "எப்போதோ?" என்று ப்ரார்த்திக்கிறாராகையாலே இவர்க்கு இசைவுண்டு; "இசையுங்கொல்" என்பானென்? என்னில்; பாகவத ஶேஷத்வமாகையாகிறது கூடுவதொன்றல்லாமையாலே கூடாதஅர்த்தம் இங்ஙனே கூடவற்றோ?என்கிறார்.இதுதான் சிலகாலமாய்க் கழியவொண்ணாது; (ஊழிதோறூழி) கல்பந்தோறுமாகவேணும். அதுதன்னிலும், (ஓவாதே) ஒருக்ஷணமும் இடைவிடாதேயாகவேணும்.அவாப்தஸமஸ்தகாமனாய்,

---

என்னில்—(ஆளாகவே) அவர்களுக்கு அடிமைப்பட்டிருப்பது மாத்திரமல்லாமல், அந்த அடிமையே வடிவெடுத்தவர்கள் ஆவதற்கு. (இசையுங்கொல்) இப்பேறு கூடுமோ? "ஆள் பார்த்துழிதருவாய்" [நான் திருவ 60] என்கிறபடியே எம்பெருமான் இவரைத் தேடித்திரிகிறவனாகையாலே, இவ்வர்த்தத்தில் அவனை இப்போது இசைவிக்க வேண்டிய அவசியம் இல்லை; இந்த ஆழ்வாரும் 'இப்பேறு கிடைப்பது எப்போது?' என்று பிரார்த்திக்கிறாராகையாலே இவருக்கும் இசைவு இருக்கிறது; இப்படியிருக்க, இங்கு "இசையுங்கொல்" என்று சொல்லுவதற்குக் கருத்து என்ன? எனில் —அடியார்க்கு அடிமைப்பட்டிருக்கும் பேறானது எவர்க்கும் கிடைப்பது அரிதானதாகையாலே, 'இப்படிப்பட்ட அரிய பேறு இப்போது கிடைக்குமோ?' என்கிறார் என்றே பொருள் கொள்ளவேண்டும். இப்பேறு சிலகாலம் இருந்து கழிந்துவிடக்கூடாது என்கிறார் மேலே, (ஊழிதோறூழி) ஒவ்வொரு கல்பத்திலும் ஆகவேணும். அதிலும், (ஓவாதே) ஒரு கணமும் இடைவிடாமல் நடக்கவேணும். அப்படிப்பட்ட கிடைத்தற்கரிய பேறோ இது? எனில்: எல்லா விருப்பங்களும் என்றும் நிறைவேறப் பெற்ற

ஸ்ரீய:பதியாய், *அயர்வறுமமரர்களதிபதியான ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காகத் தன்னைப் பேணாதே இங்கே வந்தவதரித்தவிடத்து துஷ்ப்ரக்ருதிகளான சிசுபாலாதிகள் அது பொறுக்கமாட்டாமே முடிந்து போனாற்போலே. இப்போது பாகவதர்களுடைய பெருமையறியாதே "இவர்களும் நம்மோடொக்க அந்நபாநாதிகளாலே தரியாநின்றார்களாகில் நம்மிற் காட்டில் வாசியென்?" என்று ஸஜாதீயபுத்தி பண்ணி ஸம்ஸாரிகள் அநர்த்தப்படுகிறபடி. §(கண்டு) அவதரித்த ஸர்வேஶ்வரன் இதர ஸஜாதீயனுமன்றிறே இவர்களும் ஸம்ஸாரிகளோடு ஸஜாதீயராவது. 3.

வனாய், திருவுக்கும் திருவான செல்வனாய், *அயர்வறும் அமரர்களுக்கும் தலைவனான ஸர்வேஶ்வரன் தன் பெருமையைப் பாராமல் ஸம்ஸாரிகளை ரக்ஷிப்பதற்காக இங்கே வந்து அவதரித்த இடத்திலும் தீயவர்களான சிசுபாலன் முதலானோர் அதைப் பொறுக்காமல் அழிந்து போனதைப்போலே, இப்போது இங்குள்ள ஸம்ஸாரிகள் பாகவதர்களுடைய பெருமையை அறியாமல் "இவர்களும் நம்மைப்போலே அன்னம் பானம் முதலானவற்றாலே உயிர் தரிக்கும்போது நம்மைக் காட்டிலும் இவர்களுக்கு என்ன பெருமை?" என்று தங்களிலே ஒருவர் என்று எண்ணி ஸம்ஸாரமாகிற பெரிய அனர்த்தத்திலேயே உழன்று கொண்டிருக்கிறார்களன்றோ. மனிதர் முதலான பிறப்புக்களில் அவதாரம் செய்த ஸர்வேஶ்வரன் அந்த மனிதர்களில் ஒருவனல்லன்றோ. இவர்களும் ஸம்ஸாரிகளோடு ஒத்தவர்களாவது; இவ்வுலகில் இவ்வுண்மையை அறிவது அரிதன்றோ. 3

---

*திருவாய் 1—1—1 § ( ) இது ப்ரக்ஷிப்தம்.

4. ஊழிதோ றூழி யோவாது வாழிய
வென்று யாம்தொழ விசையுங் கொல்,
யாவகை யுலகமும் யாவரு மில்லா,
மேல்வரும் பெரும்பாழ் காலத்து. இரும் பொருட்
கெல்லா மருப்பெறல் தனிவித்து, ஒருதா
ஞகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
யீன்று, முக்க ணீசனோடு தேவுபல
நுதலிமூ வுலகம் விளைத்த வுந்தி.
மாயக் கடவுள் மாமுத லடியே.

பதவுரை:— யாவகைஉலகமும் — எவ்வகைப்பட்டலோகங்களும், யாவரும் இல்லா — எவ்வகைப்பட்ட பிராணிகளும், இல்லா—இல்லாதவாறு, மேல்வரும்—முன்னரே கழிந்து போன, பெரும் பாழ் காலத்து — மிகவும் நீண்ட, (உலகம்) அழிந்துகிடந்த (ப்ரளய) காலத்திலே, இரும் பொருட்கு எல்லாம் - எண்ணற்றஜீவராசிகளுக்கெல்லாம், பெறல்அரும் —அடைவதற்கு அறியனாய், தனி ஒரு வித்து — ஒப்பற்றவனாய், ஸஹாயமற்றவனான காரணவஸ்துவாக, தான் ஆகி —தானே நின்று. தெய்வம் நான்முகன் — தேவதையாகிய பிரமனென்னும், கொழுமுளை— பூர்ணமான அங்குரத்தையும், முக்கண் ஈசனோடு - மூன்று கண்களையுடை ருத்₃ரனுடன், பல தேவு—பல தே₃வதைகளையும். ஈன்று — படைத்து. நுதலி — (இவர்களை ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்காக) ஸங்கல்பித்து. மூ உலகம் — மூன்று லோகங்களையும், விளைத்த — படைத்த, உந்தி — திருநாபி₄யையுடையனாய், மாயன் — ஆஶ்சர்யஶக்தியுக்தனாய், கடவுள் — பரதே₃வ்தையாய், மா முதல்— பரமகாரணபூ₄தனான எம்பெருமானின். அடி — த் ருவடிகளை, ஊழிதோறூழி — கல்பங்கள்தோறும், ஓவாது —இடைவிடாமல், 'வாழிய' —'வாழவேண்டும்', என்று — என்று, யாம்—நாம், தொழ - (மங்க₃ளாஶாஸனம் செய்து துதிக்க, இசையும் கொல்— நேர்படுமோ?

அவ:—நாலாம் பாட்டு. (ஊழிதோறூழி) கீழிற்பாட்டில் பக்தி பண்ணும் விஷயத்துக்கு எல்லை எவ்வளவென்னில், ஸர்வேஶ்வரன் தொடங்கி ததீயஶேஷத்வபர்யந்தமாக அநுஸந்திக்கை என்றது. அப்படிப்பட்ட அநுஸந்தானத்தை உடையரானார் பரிமாறும் பரிமாற்றம் இருக்கும்படி என்னென்னில், (ஊழிதோறூழியோவாது, வாழிய என்று) "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு" என்றுயிற்றிருப்பது; பெரியாழ்வார் "பல்லாண்டு" என்று ஆண்டாக்கி, அதுதன்னைப் பலவாக்கி, ஆயிரமாக்கி, அதுதன்னைக் கோடியாகப்பெருக்கி மங்களாஶாஸநம் பண்ணுகிறார்; இவர் அவ்வளவமையாமல் முதலிலே கல்பத்தை விவக்ஷித்து அதுதன்னை மேல்மேலெனப் பெருக்குகிறார்.

---

4. அவ:— மூன்றும்பாட்டில், 'பக்தி செலுத்தும் விஷயத்திற்கு எல்லை எவ்வளவு?' என்னும் கேள்வியெழ, ஸர்வஸ்வாமியான எம்பெருமான் தொடங்கிஅவன் அடியார்வரையில் பக்திக்கு விஷயமாக்க வேண்டும் என்றார். 'அப்படிப்பட்ட பக்தர்களுடைய வாழ்க்கை நடைமுறை எப்படி இருக்கும்?' என்னும் கேள்வியெழ, அதற்குப் பதிலுரைக்கிறார் இப்பாட்டில். "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு" என்ற பெரியாழ்வாரைப் போலே, எம்பெருமானுக்கும், அவன் அடியார்களுக்கும் பல்லாண்டு பாடுவதையே இயல்வாகக் கொண்டவர்களாய் இருப்பார்கள் அவர்கள் என்கிறார். பெரியாழ்வார் "பல்லாண்டு" என்று ஆண்டாகிற வருடத்தை முதலில் வைத்து, அதைப் பலவாக்கி, ஆயிரமாக்கி, அதையே கோடியாகப் பெருக்கி மங்களாசாஸனம் செய்கிறார். இவர் அந்த அளவில் திருப்தியடையாமல், "ஊழி" எனப்படும் கல்பத்தை முதலில் வைத்து அதை மேன்மேலாகப் பெருக்கிக் கொண்டு செல்கிறார்.

வ்யா:—(ஊழிதோறூழி) கல்பந்தோறும் கல்பந்தோறும். அதுதான் நித்யாக்₃நிஹோத்ரமாகவொண்ணாது—(ஓவாது) ஒரு க்ஷணமும் இடை விடாதே. இத்தால், மேலெல்லாம் கூடிச் செய்யப்புகுகிறதென்னென்னில், "வாழிய" என்னுமித்தனை. ஸர்வேஶ்வரனுடைய ஶேஷித்வத்தை உபக்ரமித்துத் ததீ₃யஶேஷத்வத்தளவும் செல்ல அநுஸந்தி₄த்து, அந்த ஶேஷத்வகாஷ்ட₂ா ப்ராப்தியைக்கொண்டு அவன் திருவடிகளுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறது நித்யமாய்ச் செல்லவேணும். (யாம்) (14) "ஆயுராஶாஸ்தே" (ஆயுராஶாஸ்தே) என்று கண்டதடைய "எனக்கு" என்று போந்த நாம் இப்போது அது தவிர்ந்து.—(தொழ) தொழுகையாகிறது—மங்க₃ளாஶாஸநம் பண்ணுகையாயிற்று.

வ்யா:— (ஊழிதோறூழி) கல்பந்தோறும் கல்பந்தோறும் "அக்₃னி ஹோத்ரத்தை தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட வேளையில் செய்தபோதிலும், அது 'நித்யாக்₃னி ஹோத்ரம்' என்று பெயர் பெறுவதுபோலே, இந்த மங்க₃ளாசாஸனத்தையும் ஒவ்வொரு கல்பத்திலும் சில சமயங்களில் செய்தால் போதுமோ?" எனில்:—(ஓவாது) ஒரு கணமும் இடைவிடாது செய்யவேண்டும். அப்படி மேலுள்ள காலமெல்லாம் செய்யப் போகிற கார்யம் என்ன? எனில்: (வாழியவென்று) 'வாழ்க' என்று பல்லாண்டு பாடுவதையே செய்ய வேண்டும். முதல் பாட்டில் எம்பெருமான் ஶேஷியாய் (ஸ்வாமியாய்) இருக்கும் பெருமையைத் தொடங்கி, மூன்றும் பாட்டில் 'அது அவனுடைய அடியார் வரையிலும் செல்கிறது' என்று அநுஸந்தி₄த்து, இப்பாட்டில் "அந்த அடியார்க்கு அடிமைப்பட்டிருக்கும் பெருமையை உடையவர்கள் அந்த எம்பெருமான் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவது என்றும் நடக்கவேணும்" என்கிறார். (யாம்)

14. ஆயுராஶாஸ்தே [யஜு-அஷ்ட 3-5]

[நீண்ட ஆயுளைப் பிரார்த்திக்கிறான்.] என்று எல்லாச் செயல்களிலும் தனக்கு என்னும் எண்ணமே உடையவர்களான நாம். இப்போது அதைவிட்டுச் செய்யவேண்டிய காரியத்தைக் கூறுகிறார் மேலே—(தொழ) தொழுகையாவது-மங்க₃ளாஶாஸநம்

(இசையுங்கொல்)எனக்கென்று போந்த அது தவிர்ந்து உனக்கென்கையாகிறது நெடுவாசியிறே; கூடாத இப்பேற்றேடே கூடுவார்க்கு. இப்படி ப்ரார்த்திக்கிறது அவனுடைய எந்தச்செயலை அநுஸந்தித்தோ? என்னில், (யாவகையித்யாதி) முன்பேயுள்ளதொரு வஸ்துவுக்கு ஒரு குணாதானம் பண்ணின அளவன்றிக்கே, முதலிலே அழிந்து கிடந்த வஸ்துவை அடிதொடங்கி உண்டாக்கி நமக்கு பண்ணின மஹோபகாரத்துக்கு (யாவகை உலகமும்) இங்ஙனிட்டு மூன்று லோகம் கழிந்து மேலே ஒரு லோகம் குடிவாங்கக்கடவதாய், அவ்வருகொன்று குடியிருக்கக் கடவதாயிருப்பதொரு ப்ரளயம் உண்டிறே; அப்படியன்றிக்கே எவ்வகைப்பட்ட லோகங்களும். அன்றிக்கே, (யாவருமில்லா) எல்லாரு

செய்கைபே ஆகும். (இசையுங்கொல்) இப்பேறு கைகூடுமோ? 'இது அவ்வளவு அரிதோ?' எனில்; 'எனக்கு' என்கிற நினைத்துப் போந்த நிலை தவிர்ந்து, 'எனக்கும் உனக்கும்' என்கிற நிலையும் தவிர்ந்து, 'உனக்கே' என்னும் நிலை ஏற்படுவது மிகவும் அரிதன்றோ! இப்படி மிக அரிதான இப்பேற்றைப் பெற ஆசைப்பட்டு "இசையுங்கொல்" என்கிறார். 'இப்படிப் பிரார்த்திக்கிறது அவனுடைய எந்தச்செயலை அநுஸந்தித்து?' எனில்: 'அவன் ஜகத்காரணனாயிருந்து உலகைப் படைத்த செயலை அநுஸந்தித்து' என்று மேலே காட்டுகிறார்-(யாவகை ......மூவுலகம் விளைத்த உந்தி) முன்பே இருந்ததொரு பொருளுக்கு ஒரு பெருமையைக் கொடுத்ததாக அல்லாமல், முதலிலே அழிந்துகிடந்த இவ்வுலகை முதலிலிருந்து உண்டாக்கி நமக்குப் பண்ணின பேருதவிக்குத் தோற்று இப்படிப் பிரார்த்திக்கிறது என்று கருத்து. (யாவகை உலகமும் யாவருமில்லா) 'பூ: புவ: ஸுவ:' என்னும் மூன்று உலகங்களும் அழிந்து, இவற்றுக்கு மேலுள்ள 'ஜந:' என்னும் உலகம் ஆளற்றுப் போய், அதில் உள்ளவர்கள் 'மஹ:' என்னும் உலகிற்குச் செல்லும்படி ஆவது நைமித்திக ப்ரளயம் எனப்படுவது. அப்படிப் பாதி அழிந்தும் பாதி அழியாமலும் இருக்கும் ப்ரளயம் அல்லாமல், எல்லா உலகங்களும் அவற்றிலுள்ளவர்களும் அழிந்த மஹாப்ரளயத்தைச் சொல்லுகிறார். (யாவருமில்லா)

மொக்க லயிக்கச் செய்தே மார்க்கண்டேயாதிகள் "நித்யத்வம்" என்றலைவாருமுண்டிறே; அங்ஙனுமொருவரின்றிக்கே. (மேல்) மேலென்றது—பண்டென்றபடி; (வரும்) என்றது, போனவென்றபடி; பண்டு போன. (பெரும் பாழ் காலத்து) கர்ஷகன் உவர்த்தரையை உவர்கழிய நீர்நிறுத்துமா போலே, விளைகைக்கு இவற்றினுடைய துர்வாஸநையை அழிக்கைக்காக ஒரு ப்ரஹ்மாவினுடைய ஆயுஸ்ஸித்தனையும் அழித்திட்டுவைக்குமாயிற்று. (இரும்பொருட்கெல்லாம்) தேவமநுஷ்யாதி ரூபமாய், அஸங்க்யேயமாய், அசித் ஸம்ஸ்ருஷ்டங்களுமான ஜீவவஸ்துக்களுக்கெல்லாம்.

ப்ரளய காலத்தில் எல்லாரும் ஒருபடியாக லயமடையும்போதும் மார்க்கண்டேய மஹரிஷி முதலான சிலர் நித்யத்வத்தை உடைய சிரஞ்ஜீவிகளாகையாலே, எம்பெருமானுடைய வயிற்றிலே அலைந்து கொண்டு அதற்குள் இருக்கும் பொருள்களை யெல்லாம் கண்டதாக மஹாபாரதம் முதலானவற்றில் சொல்லப்பட்டதன்றோ. அப்படி ஒருவரும் இல்லாத ப்ரளய காலத்தின் இறுதியிலே என்று உணர்த்தப்படுவதாகவும் கொள்ளலாம். (மேல் வரும்) "மேல்" என்றது "பண்டு" என்றபடி. "வரும்" என்றது "போன" என்றபடி. ஆக "பண்டு போன" என்கிறது. (பெரும் பாழ் காலத்து) உலகம் அழிந்து கிடந்த மிக நீண்ட காலத்திலே. உழவன் உப்புக் கலந்த உவர்நிலத்திலே அந்த உப்பு கழிவதற்காகப் பலநாட்கள் நீரை நிலத்தில் நிறுத்தி வைப்பதுபோலே, இந்தச் சேதனனுடைய தீய வாஸனையை அழிப்பதற்காக, ஒரு பிரம்மாவினுடைய ஆயுட்காலமளவும் இவற்றை மூலப்ரக்ருதியோடு வாசி தெரியாதபடி சேர்த்துவைக்கிறான் எம்பெருமான். [இதுவே ப்ரளய காலம் எனப்படும்]. (இரும் பொருட்கெல்லாம்) தேவர், மனிதர், திர்யக், தாவரம் என்று நாலுவகைப்பட்டவராய், ஒவ்வொரு வகையிலும் எண்ணிக்கையற்றவராய், அசேதனத்தோடு சேர்ந்தவரான ஜீவர்களுக்கெல்லாம்.

(அரும்பெறல்) இவ்வளவில் வந்து முகம் காட்டுவா ஞெருவனைக் கிடையாதிறே. ஆகையால் பெறுதற்கரிய. (தனிவித்தொருதாஞகி) நிமித்தோபாதா3ந ஸஹகாரி காரணத்ரயமும் தானேயாய். ''வித்து'' என்கையாலே, காரணவஸ்துவென்கை. ''தனி'' என்கையாலே, (15 'एको ह वै'' (ஏகோ ஹ வை) என்று அத்3விதீய னென்கை. அன்றிக்கே, எங்களை உண்டாக்கவேணுமென்று அபேக்ஷிக்கைக்கொருவரில்லை என்கை. ''ஒரு'' என் கையாலே, இதுக்கு ஸஹகாரிகள் ஒருவருமில்லை என்கை. (தாஞகி) கார்யரூபமான ப்ரபஞ்சத்துக்கெல்லாம் வேண்டும்

இது தொடங்கி, படைக்கும் முறையைச் சொல்லுகிருர்—(அரும் பெறல்) அடைவதற்கு அரியவஞய். இப்படி அசித்தோடு ஒன் ருகக் கலந்திருக்கும் காலத்திலே, இவர்களிடம் கருணை காட் டுவார் வேறு எவரும் இல்லையன்ருே. அதஞல் 'பெறுதற்கு அரியவன்' என்கிருர். (தனிவித்து ஒரு தாஞகி) நிமித்தம், உபாதா3னம். ஸஹகாரி என்னும் மூன்று *விதமான காரண மும் தானேயாய்; "வித்து" என்கையாலே மரத்துக்கு விதை போலே உபாதா3ன காரணம் என்று உணர்த்தப் படு கிறது. "தனி" என்கையாலே

15. ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்3ரஹ்மா நேசாந:
[மஹோபநிஷத் 1.]

[நாராயணன் ஒருவனே பிரளயகாலத்திலிருந்தான்; பிரமனு மில்லை: சிவனுமில்லை;] என்கிறபடியே "ஒப்பற்றவன்" என்று சொல்லப்படுகிறது. அன்றிக்கே 'எங்களை உண்டாக்க வேணும்என்றுஅபேக்ஷிப்பதற்குக்கூட நாங்கள் ஒருவருமில்லை' என்கிறது. இதஞல் 'நிமித்த காரணமும் இவனே' என்கிறது. "ஒரு" என்கையாலே 'ஸஹகாரிகாரணமும் இவனையொழிய வேறு ஒருவருமில்லை' என்கிறது. முதல் பாட்டில் "தாமரை உந்தித் தனிப்பெருநாயக" என்ற விடத்தில் இது விளக்கப் பட்டது. (தாஞகி) கார்ய ரூபமான இவ்வுலகிற்கெல்லாம்

காரணகுணமெல்லாம் தானேயாய். இப்படி அண்ட ஸ்ருஷ்டியளவும் தானே உண்டாக்கி, இவ்வருகு உள்ள வற்றை உண்டாக்குகைக்காகக் கோயிலுக்கு ஸ்ரீமதுர கவிதாஸரை நிர்வாஹகராக விட்டாற்போலே, ப்ரஹ்மாவை இப்பாலுள்ள ஸ்ருஷ்டிக்காக உண்டாக்கினன். (தெய்வ நான்முகன்) இதர ஸஜாதீயனை சதுர்முகனாகிற. (கொழு முளையீன்று) இவ்வருகில் கார்யவர்க்கத்தையடைய உண்டாக்குகைக்கீடான சக்தியையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து. அவனொருவனுமே மூன்று கார்யமும் செய்ய மாட்டானே; அதற்காக—(முக்கணீசனித்யாதி) ஸம்ஹார க்ஷமனை ருத்ரனோடே கூட மற்றும் கார்யத்துக்கு வேண்டும்

வேண்டிய மூவகையான காரணஸமூஹம் எல்லாம் தானே யாகி. இப்படி அண்டஸ்ருஷ்டியளவுமுள்ள ஸமஷ்டி ஸ்ருஷ்டி யைத் தானே உண்டாக்கி அண்டத்திற்குள்ளிருக்கும் பொருள் களைப் படைப்பதாகிற வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்வதற்குப் பிரமனைப் படைத்தான் என்கிறார் மேலே. "இது எம்பெருமா னார் திருவரங்கம் பெரிய கோயிலில் நடைபெற வேண்டிய எல்லாக் காரியங்களையும் தம்முடைய திவ்யாஜ்ஞையாலே திட்டமிட்டு, அவற்றைச் சரிவர நடக்குப்படி கவனித்துக் கொள்வதற்கு ஸ்ரீமதுரகவிதாஸரை நியமித்ததுபோல் உள் ளது என்று பெரியவாச்சான்பிள்ளை திருஷ்டாந்தம் காட்டுவர். (தெய்வ நான்முகன்) தெய்வங்களில் ஒருவனை நான்முக னாகிற. (கொழுமுளை ஈன்று) நிறைவுடைய முளைபோன்ற வனைப் படைத்து என்றபடி. 'அண்டத்திற்குள்ளிருக்கும் காரியப்பொருள்கள் அனைத்தையும் உண்டாக்குவதற்கு உறுப் பான சக்தியை உடைய பிரமனைப் படைத்து' என்று கருத்து. பிரமன் ஒருவன் மாத்திரம் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றையும் செய்யமுடியாதே. ஆகையால், பிரமன் படைத்த பொருள்களை ஸம்ஹரிப்பதற்காக சிவனைப்படைத்தபடியைச் சொல்லுகிறது அடுத்தபடி— (மூக்கண் ஈசனொடு தேவு பல ஈன்று) ஸம்ஹாரம் செய்வதற்குத் தக்கபடி நெற்றிக்கண்ணை உடைய உருத்திரனோடு கூட, மற்றும் லோக வ்யாபாரங்கள் நடத்துவதற்கு வேண்டிய இந்திரன், வாயு, வருணன், யமன்

தே₃வதைகள் பலரையும் உண்டாக்கி. இவை பலரும் தேவைக்கெல்லாம் அவன் பண்ணின வ்யாபாரமென்னென்னில்; (நுதலி) (6) ''बहु स्याम्'' (ப₃ஹு ஸ்யாம்) என்று ஸங்கல்பித்து. ''நுதலி'' என்றது-கருதி என்றபடி. (மூவுலகம் விளைத்த! கீழும் மேலும் நடுவுமான லோகங்களை உண்டாக்கிற்று அவன் திருவுந்தியாயிற்று. அவனையொழியவே தானே இவையடைய உண்டாக்கிற்றாயிற்றுதிருவுந்தி; திருவுந்தி என்றொரு பத்₃மமாய், அதடியாகவாயிற்று லீலாவிபூ₄தியடைய உண்டாக்கிற்று. (மாயக்கடவுள்) ஆஶ்சர்ய ஶக்தியுக்தனான பரதே₃வதை. (மாமுதல்) பரமகாரணமான மாயக்கடவுளென்னுதல்; மாயக்கடவுளானவனுடைய மாமுதலடியென்னுதல். ஆஶ்சர்ய ஶக்தியுக்தனான பரதே₃வதையான பரமகாரணபூ₄தனானவனுடைய திருவடியென்னு

அக்னி முதலான பல தேவர்களையும் உண்டாக்கினான். 'இப்படிப் பலரையும் படைப்பதற்கு அவன் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டானோ?' எனில்: (நுதலி) 26வதுபக்கத்திலுள்ள ஆறுவது பிரமாணத்தின்படி தன் ஸங்கல்ப மாத்ரத்தாலே உண்டாக்கினான் என்கிறார். ''நுதலி'' என்றது ''கருதி'' என்று பொருள்படுகிறது. (மூவுலகம் விளைத்த உந்தி) 'கீழும் மேலும் நடுவுமாய் மூவகைப்பட்ட எல்லா உலகங்களையும் உண்டாக்கினது அவனல்ல; அவனது திரு உந்தியே' என்கிறார். திருவுந்தி என்று ஒரு தாமரையாய், அதன் மூலமாகவன்றோ இந்த லீலாவிபூ₄தியை உண்டாக்கினான். (மாயக்கடவுள்) ஆச்சரியமான ஶக்தியை உடைய பரதெய்வம்.(மாமுதல்)'மாமுதல் மாயக்கடவுள்' என்று கூட்டி, 'உலகனைத்துக்கும் பெரிய காரணமான மாயக்கடவுள்' என்றும் கொள்ளலாம். 'மாயக்கடவுளுடைய மாமுதலடி' என்று கூட்டி ஆச்சர்யமான சக்தியுடைய பரதெய்வத்தினுடைய ஜக₃த்காரணமான திருவடி' என்றும் பொருள் கொள்ளலாம். திருவடி' என்றது திருமேனிக்கு உபலக்ஷணம். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் அஸ்த்ர பூ₄ஷணாத்₄யாயத்தில் திருமேனிக்கும் ஜக₃த்காரணத்வம் சொல்லப்பட்டதன்றோ.அன்றிக்கே, ஆச்சரிய சக்தியுடைய பரதெய்வமாய், பரமகாரணமாய் இருப்பவனுடைய திருவடி என்றும்

5. மாமுத லடிப்போ தொன்றுகவிழ்த் தலர்த்தி,
மண்முழுது மகப்படுத்து, ஒண்சுட ரடிப்போ
தொன்றுவிண் செலீஇ, நான்முகப் புத்தேள்
நாடுவியந் துவப்ப, வானவர் முறைமுறை
வழிபட நெறீஇ, தாமரைக் காடு
மலர்க்கண் ணோடு கனிவா யுடையது
மாய்,இரு நாயி ருயிரம் மலர்ந்தவ னை,
கற்பகக் காவு பற்பல வன்ன,
முடிதோ ளாயிரந் தழைத்த,
*நெடியோய்க் கல்லது மடியதோ வுலகே.

பதவுரை:– மா முதல்—பரமகாரணனான உன்னுடைய, அடி--திருப்பாதமாகிற, ஒன்றுபோது-ஒரு (சிவந்ததாமரைப்) பூவை, கவிழ்த்து அலர்த்தி—கவிழ்த்துப்பரப்பி, மண்முழுதும் அகப்படுத்து – பூமிப்பரப்பையெல்லாம் கைப்பற்றியும், ஒண்— அழகிய, சுடர்—தேஜஸ்ஸையுடைய, போது புஷ்பம் போன்றதான, ஒன்று அடி—மற்றொரு திருவடியை, நான் முகன் புத்தேள்—பிரமனாகிற தேவதையின், நாடு வியந்து உவப்ப—லோகமானது அதிசயப்பட்டு மகிழ்ச்சியுறவும், வானவர்—(அவ்வுலகத்திலுள்ள) தேவதைகள், நெறீ இ—

தல்; ''மாயக்கடவுள்'' என்று அவனுடைய பரமப்ராப்யமான திருவடிகளென்னுதல். (அடியே வாழியவென்று யாம்தொழ இசையுங்கொல்) ''உன் சேவடி செவ்வி திருக்காப்பு'' என்கிறபடியே. 4.

உள்ளபடியே கூட்டிப் பொருள் கொள்ளலாம். ''மாயகடவுளு னுடைய பரமப்ராப்ராப்யமான திருவடிகள்'' என்றும் கொள்ள லாம். (அடியே வாழிய என்று யாம் தொழ இசையுங்கொல்) ''உன் திருவடிகள் வாழ்க'' என்று மங்களாசாஸனம் செய் யும்பேறு நமக்குக் கிட்டுமோ? ''உன் சேவடி செவ்வி திருக் காப்பு'' [திருப்பல்—1] என்கிற பெரியாழ்வாரைப்போலே பேறுபெற ஆசைப்படுகிறார். 4.

* (பா) நெடியோய்க் கல்ல தடியதோ.

சரியான வழியில் செல்லுகையை, முறை—முறையிடுகிற, முறை—சாஸ்திரவழிப்படி, வழிபட—வணங்கும்படியும், விண்—ஆகாசத்தில், செலீஇ—செலுத்தியும், தாமரை காடு—தாமரைப்பூக்கள் நிறைந்த காடு, மலர்—புஷ்பித்தாற் போலிருக்கிற, கண்ணோடு—திருக்கண்களோடு கூட, கனி வாய் உடையதுமாய்-பழம் போன்ற (சிவந்த) திருப்பவளத்தை யுடையதாய், இரு பரந்த (அநேகமான கிரணங்களை யுடைய), ஆயிரம நாயிறு—ஆயிரம் ஸூர்யர்கள், மலர்ந் தன்ன — உதித்தாற்போலேயிருக்கிற, முடி பற்பல— பல கிரீடங்களையும், கற்பகக் காவு அன்ன—கற்பகவநம் போலி ருக்கிற, தழைத்த—ஓங்கி வளர்ந்துள்ள, ஆயிரம் தோள்— ஆயிரம் திருத்தோள்களையும் உடையவனாய், நெடியோய்க்கு அல்லதும்—எல்லாருக்கும் மேலானவனாய் விளங்குகிற எம்பெருமானையொழிந்த மற்றெவர்க்கும், உலகு—இவ்வுலக மானது, அடியதோ—அடிமைப்பட்டதோ?

அவ:—ஐந்தாம் பாட்டு. (மாமுதலடியித்யாதி₃) "மாமுத லடியே வாழியவென்று யாம் தொழ இசையுங்கொல்" என்றார் கீழ்; நமக்கு மங்க₃ளாஶாஸநம் * பண்ணப்புக்க உமக்குக் கருத்தென்னென்னில்; "உறங்குகிற ப்ரஜைக்குத் தானறிந்தபடி ஹிதம் பார்க்கும் தாயைப்போலே நீ பண்ணின உபகாரம் அறிகைக்கடி ஒருவருமின்றியே இருக்க, அழிந்து கிடந்தவற்றையடைய உண்டாக்கி, /உண்டான

---

5. அவ:—சென்றபாட்டில் 'மாமுதலடியே வாழியவென்று யாம் தொழ இசையுங்கொல்' என்று திருவடிகளுக்கு மங்க₃ ளாஶாஸனம் செய்தார். "இப்படிப் பல்லாண்டு பாடும் உமக்குக் கருத்து என்ன?" என்று எம்பெருமான் திருவுள்ளமாக, "உறங்குகிற குழந்தைக்கு, தன் அறிவுக்கேற்ப நன்மை செய் யும் தாயைப்போலே நீ பண்ணின உதவியை அறிவதற்கும் ஒருவரும் இல்லாமலிருக்க, சரீரமில்லாமல் அசேதனம்போலே இருந்த ஜீவர்கள் அனைவரையும் படைத்து, அப்படிப்படைக்கப்

---

* (ப) பண்ண அடுப்பது;/(பா) உண்டாக்கின.

வற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளை அடைத்துவிட்ட அநந்தரம், சிறியத்தைப்பெரியது நலியாதபடி நீநாட்டுக்குக் காவலாக நிறுத்தின இந்த்ரன், /(ஒரு) ஆஸுரப்ரக்ருதியான மஹாபலிகையிலே ராஜ்யத்தைப் பறிகொடுத்துக் கண் பிசைய, 'முதலிலே இவற்றை உண்டாக்கினோம்; அநந்தரமாக இவற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளைக் கையடைப்பாக்கி நோக்கினோம்; ஆகில் இனி அவைபட்டது படுகிறன' என்று கைவாங்கியிராதே, ஸ்ரீய:பதியான உன்னை அழித்து இரப்பாளனாக்கிக்கொடுத்து, இட்டு வளர்ந்த கையைக் கொண்டு இரந்து, இந்த்ரன் கார்யம் செய்து தலைக்கட்டின செயலொன்றையும் அநுஸந்தித்தால் உனக்கன்றிக்கே மற்றையார்க்கோ மங்களாஶாஸநம் பண்ணவடுப்பது" என்று இந்த ப்ரஸங்கத்திலே திருவுலகளந்தபடி ப்ரஸ்துதமாக அத்தைப்பேசி அநுபவிக்கிறார்.

பட்டவர்களுக்குக் காவலாக ஒவ்வொரு திக்குக்கும் ரக்ஷகர்களான திக்பாலகர்கள் முதலானவர்களை நியமித்த பிறகு, வலிமை குறைந்தவர்களை வலிமை மிகுந்தவர்கள் துன்புறுத்தாதபடி நீ மூவுலகுக்கும் ரக்ஷகனாக நிறுத்திய இந்திரன் அஸுரத்தன்மையுடைய மஹாபலியிடம் தன் ராஜ்யத்தைப் பறிகொடுத்துக் கண் கலங்கி நிற்க, 'முதலில் இவற்றைப் படைத்தோம்; அடுத்தபடி இவற்றுக்கு ரக்ஷையாக திக்பாலகர்கள் முதலானவர்களை நியமித்து ரக்ஷித்தோம்; இனி இவை எப்பாடுபட்டால் என்ன?' என்று உதாஸீனமாக இராமல், செல்வத்திற்கெல்லாம் தேவதையான திருவின் நாயகனான உன்னை யாசகனாக மாற்றிக்கொண்டு, கொடுத்துக் கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு யாசித்து இந்திரன் காரியம் செய்துமுடித்த இச்செயல் ஒன்றை நினைத்தால் உனக்கல்லால் வேறு யாருக்கு மங்களாஶாஸனம் செய்யமுடியும்?" என்று பதில் கூற நினைத்து, அப்போது அந்த ப்ரஸங்கத்திலே எம்பெருமான் திருவுலகளந்தபடியைச் சொல்லவேண்டி வருகையாலே அதைப்பேசி அநுபவிக்கிறார்.

/( ) அடைப்பிலுள்ளது சில பிரதிகளிலேயே.

259455
27.10.09

வ்யா:— (மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி) [நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப] திருவுலகளந்தருளுவதாக நின்றபோது நின்ற திருவடி அந்நிலையில் "ஒண் மிதியில் புனலுருவியொருகால் நிற்ப" என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டத்தையடைய, தன் கீழே இட்டுக் கொண்டது; வளர்ந்த திருத்தோள்கள் வ்யாபித்து திக்குகளை அளந்து கொண்டன; [அன்று கருமாணியாய்] ஸ்ரீயஃபதியான நீ, "உண்டு" என்று இட்டபோதோடு "இல்லை" என்று மறுத்தபோதோடு வாசியற ப்ரீதியோடே போம் படியான இரப்பிலே தகணேறின வடிவை உடையையாய்க் கொண்டுஇரந்துஉன்படி ஒருவர்க்கும்தெரியாதபடிமறைத்து வர்த்திக்கிறவனே! நீ இச்செயல் செய்தது இந்த்ரன் ஒரு

வ்யா:— (மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி) இவ் வர்த்தத்தையே "நின்றதோர் பாதம் நிலம் புதைப்ப" [இர. திருவ 61] என்னும் பாட்டிலே பூதத்தாழ்வார் அருளிச் செய்தார். [நின்றதோர் பாதம் நிலம் புதைப்ப நீண்டதோள் சென்றளந்ததென்பர் திசையெல்லாம்] உலகை அளந்தருள்வதாக நின்றபோது, நின்ற திருவடி அந்த நிலையிலே "ஒண் மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப" [திருநெடு 5] என்கிறபடியே அண்டச் சுவர் வரையில் நீண்டு ஆவரண ஜலத்துக்கு உட்பட்ட எல்லாப்பொருள்களையும் தன் கீழே இட்டுக்கொண்டது. வளர்ந்த திருத்தோள்கள் வியாபித்து எல்லாத் திசைகளையும் அளந்துகொண்டன என்று கூறுவர். [அன்று கருமாணியாய் இரந்த கள்வனே! உன்னைப் பிரமாணித்தார் பெற்ற பேறு] லக்ஷ்மீநாதனை நீ பிச்சை கேட்கும் பிரம்மசாரியாய், 'உண்டு' என்று பிச்சையிட்ட போதோடு 'இல்லை' என்று மறுத்தபோதோடு வேறுபாடில்லாமல் உகப்போடு செல்லும்படி யாசிப்பதில் தழும்பேறின வாமன வடிவை உடையவனாய்க் கொண்டு யாசித்து, உன் மேன்மை எவரும் அறியாதபடி மறைத்துக்கொண்டிருந்தாயன்றோ! நீ இந்தச் செயலைச் செய்தது இந்திரன் ஒருவனுடைய விருப்

வனுடைய அபேக்ஷிதம் செய்கைக்கன்றிறே; "ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலைசாய்த்தார்க்காகத் தன்னை அழியமாறியும் காரியம் / செய்வானொருவன்" என்று உன்படியை அநுஸந்தித்து ஆஶ்ரிதர் மார்விலே கைவைத்து உறங்குகைக்காகச் செய்த செயலிறே இது; கீழ்ச்சொன்னபடியே "மாமுதலடிப்போது" என்று பரமகாரணமானவனுடைய திருவடியென்னுதல்; அன்றிக்கே "மாமுதலடிப்போது" என்று திருவடிதனக்கேயாய், ஶேஷபூதரடைய வந்து சேருவது திருவடிகளிலே ஆகையாலே அவர்களுக்குப் பரமப்ராப்யமான திருவடி என்னுதல். "அடிப்போது", என்றது — அடியாகிற செவ்விப் பூ என்றபடி. ‖ (அடி-திருவடி). திருவடியாகிற செவ்விப்பூவை.

பத்தை நிறைவேற்றுவதற்கன்றே. 'எவர் தன் திருவடிகளிலே வணங்கினாலும் தன்னைத் தாழ்த்திக்கொண்டும் அவர்கள் காரியம் செய்பவன் ஒருவன்' என்று உன் நீர்மையை அநுஸந்தித்து அடியார்கள் அனைவரும் பயமில்லாமல் மார்பிலே கைவைத்து உறங்குவதற்குச் செய்த செயலன்றோ இது. (மாமுதலடிப்போது) சென்ற பாட்டில் "மாயக்கடவுள் மாமுதலடியே" என்றவிடத்திற் சொன்னபடியே, "மாமுதல்" என்று பரமகாரணமான எம்பெருமானைச் சொல்லுவதாய், அவனுடைய திருவடி என்றும் பொருள் கொள்ளலாம். அல்லது 'மாமுதல்' என்று திருவடிக்கே விசேஷணமாய், அடியார்கள் அனைவரும் வந்து சேருமிடமாகையாலே, அவர்களுக்கு பரமப்ராப்யமான திருவடி என்றும் கொள்ளலாம். அடிப்போது என்றது — அடியாகிய அன்றலர்ந்த தாமரைப் பூ என்று பொருள்படும். திருவடியாகிற அன்றலர்ந்த பூவை என்ன செய்தான்? எனில்—

/(பா) செய்யும் ஒரு ஸர்வேஶ்வரன். ‖ ( ) அடைப்பில் உள்ளது சில பிரதிகளிலேயே.

(கவிழ்த்தலர்த்தி) திருவடியைப் பரப்பி எல்லாவற்றையும அளந்து கொள்ளுகிறவிடத்தில் சிறியதின் தலையிலே பெரியது இருந்தால் சிறியது நெருக்குண்ணக்கடவது; அப்படியே திருவடியின் கீழ்ப்பட்ட பதார்த்தங்கள் நெருக்குண்டதில்லையோ? என்னில், ஒருசெவ்வித்தாமரைப்பூவைக் கவிழ்த்தலர்த்தினால் அதினுள் அல்லிக்குள்ள நெருக்கிறே திருவடியின் கீழ்ப்பட்ட பதார்த்தங்களுக்குள்ளது. ''ஒண்மிதி'' என்னக்கடவதிறே. (மண்முழுதுமகப்படுத்து) ''புனலுருவி'' என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டதடையத் தன் கீழே இட்டுக் கொண்டு. இதுவாகில் இத்திருவடி செய்தது, மற்றைத் திருவடி செய்த தென்னென்னில், (ஒண்சுடரடி) ''ஒருகாலும் காமருசீர்'' என்று தொடங்கி மேல் சொல்லு

(கவிழ்த்தலர்த்தி) ''திருவடியை வியாபிக்கச்செய்து எல்லாவற்றையும் அளந்துகொள்ளும்போது, சிறிய பொருள்களின் மேலே பெரியபொருளான திருவடி அழுத்தினால் அச்சிறிய பொருள்கள் துன்பமடையும். அப்படியே திருவடியின் கீழே பட்ட பொருள்கள் துன்பமடையவில்லையோ?'' எனில்; அன்று பூத்ததாமரைப் பூவைக் கவிழ்த்து அதன் இதழ்களை விலக்கி அலரச்செய்தால் அத்தாமரையினுள் இருக்கும் அல்லிதாது முதலானவை எப்படி நெருக்குப்படாமலிருக்குமோ அப்படியே இந்தத் திருவடித்தாமரையின் கீழ்பட்ட பொருள்களுக்கும் எத்துன்பமும் விளையவில்லை என்று கருத்து. ''ஒண்மிதி'' [திருநெடு 5] [கீழுள்ள பொருள்களை நெருக்காதமிதி] என்றாரன்றோ திருமங்கையாழ்வாரும். (மண்முழுதும் அகப்படுத்து) ''புனலுருவி'' [திருநெடு 5] என்கிறபடியே ஆவரண ஜலம் வரையில் உள்ள எல்லாப் பொருள்களையும் தன் கீழே இட்டுக்கொண்டு, நின்ற இத்திருவடி செய்தது இதுவானால் நீட்டிய மற்ற திருவடி செய்தது என்ன? எனில்—(ஒண்சுடரடி) ''ஒருகாலும் காமருசீர் அவுணனுள்ளத்து எண்மதியும் கடந்து அண்டமீதுபோகி இருவிசும்பினூடுபோய் எழுந்து'' என்று தொடங்கி ''மண்முழுதும் அகப்படுத்து'' [திருநெடு 5] என்பதிருகச் சொன்னதுபோலே, மேலே உள்ள எல்லா

கிறபடியே மேலுள்ள லோகங்களடைய அளந்துகொண்டது. (ஒண்சுடரடிப்போதொன்று) மனுஷ்யர்களெல்லார்க்குமுள்ள து₃ர்மாநம் இந்த்₃ராதி₃களில் ஒரொருவர்க்கும் உண்டாயிருக்கும்; அப்படிப்பட்டவர்களை அடைய ப₄க்₃நாபி₄மாநராக்கிக்கொள்ளுகையாலே வந்த புகரையுடைத்தாயிருக்கை; அழகிய சுடரையுடைய செவ்விப்பூவாகிய ஒரு திருவடி. (விண்செலீஇ) விண்ணையடைய வ்யாபித்தது. எவ்வளவிலே சென்றதென்னில், (நான்முகப்புத்தேள் நாடுவியந்துவப்ப) சதுர்முக₂னுகிற தேவதையினுடைய லோகமானது இத்தைக்கண்டு, வியப்பும் செய்தது; "அந்நீர்மை ஏறிப்பாயாததொரு மேடுதேடிப் போந்தோமானோம், நீர்மை இங்கே வந்தேறுவதே? இதோர் ஆஶ்சர்யமிருந்தபடியென்!" என்று விஸ்மயப்படுவதும் செய்தது; "திருவடிகளுக்கு ஆகாதாரில்லையாகாதே, அவன் உளனுக்க

உலகங்களையும் அளந்து கொண்டது. (ஒண்சுடரடிப்போது ஒன்று) அழகிய ஒளியை உடைய அன்றலர்ந்த பூவாகிற ஒரு திருவடி. மனிதர்கள் அத்தனை பேருக்கும் உள்ள அஹங்காரமும் சேர்ந்து இந்திரன் முதலான தேவர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டாயிருக்கும். அப்படிப்பட்ட தேவர்கள் அனைவருடைய அபி₄மானத்தையும் குலையச்செய்து, தன் கீழ்ப் படுத்துகையாலே 'ஒளி உடைய அடி' என்கிறார். (விண் செலீஇ) ஆகாசம் முழுவதையும் வியாபித்தது. எதுவரையில் வியாபித்தது? எனில்—(நான்முகப்புத்தேள் நாடுவியந்துவப்ப) நான்முகனாகிய தெய்வத்தினுடைய ஸத்யலோகத்திலுள்ளவர்கள் இப்படி நீண்டுவந்த திருவடியைக்கண்டு ஆச்சரியப் பட்டனர். (வியந்து உவப்ப) "எம்பெருமானுடைய ஸௌலப்₄ய ஸௌஶீல்யங்களாகிற குணவெள்ளம் ஏறிப்பாயமுடியாததான மேடான இவ்வுலகத்தைத் தேடி வந்தோம் நாம்; அந்த கு₃ணங்கள் இங்கே வந்து பாய்வதே! இது என்ன ஆச்சரியம்" என்று ஆச்சரியப்படுவதையும் செய்தனர்; "இத் திருவடிகளுக்கு ஆகாதவர் எவருமில்லை போலிருக்கிறதே.

நாமல்லோம் என்று அகலப்பார்த்தாலும் அகலவிர கின்றிக்கே இருந்ததீ! இதொரு அலப்₄யலாப₄ம் இருந்த படியே! '' என்று உகப்பதும் செய்தது. அவ்வளவில் ப்₃ரஹ்மா செய்ததென்னென்னில், [குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து] நினைவின்றிக்கே இருக்கத் திருவடி கையிலே வந்திருந்தவாறே அலப்₄யலாப₄த்தாலே தடு மாறிச் சுற்றிலே பார்த்தான்; அவ்வளவிலே த₄ர்மதத்வம் நெகிழ்ந்து நீராய்க் குண்டிகையிலே புக்கிருந்தது; அத்தைக் கொண்டு திருவடியை விளக்கினான். அவ்வளவில் ''இது நமக்கு நல்லவிடம்'' என்று சிவன் தன் தலையை மடுத்

அவன் நம் ஸ்வரூபத்தை உண்டாக்குவதற்காக நம் தலையில் காலை வைக்க வந்தாலும், நமக்குத் தேவையில்லை என்று நாம் அகலநினைத்தபோதும் அகலமுடியாமல் இருக்கிறதே. இப்படி யொரு கிடைத்தற்கரிய பேறுகிடைத்ததே'' என்று உகப்பதும் செய்தனர். அப்போது அவ்வுலகிற்குத் தலைவனான பிரமன் என்ன செய்தான் என்பதைத் திருமழிசையாழ்வார் பின்வரும் பாடலில் அருளிச்செய்தார் :—

'' குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான்
அண்டத்தான் சேவடியை யாங்கு.'' [நான் திருவ-9]

நினைக்காமல் இருக்கும்போது எம்பெருமானுடைய திருவடி பிர மன் கையில் வந்து தங்கிற்று; இப்படிப் பெரும்பேறு கிடைத்த தாலே இத்திருவடிக்கு என்ன உபசாரம் செய்வது என்று தடுமாறி நாற்புறமும் பார்த்தான் அவன். அந்த நேரத்தில் தர்மமாகிற தத்துவம் திருவடியைக்கண்டு நீர்ப்பண்டமாய் உருகி, பிரமனின் குண்டிகையிலே புகுந்தது; அதைக் கொண்டு பிரமன் திருவடியை விளக்கினான்; அதைக் கண்டவுடன் "தன்மைப் பரிசுத்தப்படுத்தக்கூடியது இதுவே'' என்று சேர்ந்து, சிவன் தன் தலையைத் திருவடிக்குக்கீழே நீட்டினான்

தான். (16) 'पावनार्थं जटामध्ये दधार शिरसा हर:' (பாவநார்த்தும் ஜடாமத்யே த₃தா₄ர ஶிரஸா ஹர:) என்று தன்னுடைய ஶுத்₃த்₄யர்த்₂த₂மாக ஜடையிலே த₄ரித்தான் (16) "योग्योऽस्मीत्यवधारणात्" (யோக்₃யோஸ்மீத்யவதா₄ரணாத்) திருவடிகளுக்கு யோக்₃யரல்லாதாரில்லை என்று பார்த்தான். (16) "वर्षायुतान्यथ बहून् न मुमोच तथा हर:" (வர்ஷாயுதாந்யத₂ ப₃ஹூந் ந முமோச தத₂ா ஹர:) என்கிறபடியே நற்சரக்கு வந்தால் விடுவாரில்லையிறே. கிடையாதது கிடைத்த

---

16. த்₃ரவீபூ₄தஸ் ததா₃ த₄ர்மோ ஹரிப₄க்த்யா மஹாமுநே ।
க்₃ருஹீத்வா த₄ர்மபாநீயம் ஜக₃ந்நாத₂ஸ்ய துஷ்டயே ॥
க்ஷாளிதம் பரயா ப₄க்த்யா பாத்₃யார்க்₄யாதி₃-
ரர்ச்சிதம் ।
தத₃ம்பு₃ பதிதம் த்₃ருஷ்ட்வா த₃தா₄ர ஶிரஸா ஹர: ॥
பாவநார்த்த₂ம் ஜடாமத்₄யே யோக்₃யோஸ்-
மீத்யவதா₄ரணாத் ।
வர்ஷாயுதாந்யத₂ ப₃ஹூந் ந முமோச தத₂ா ஹர: ॥
[ஈஶ்வரஸம்ஹிதை.]

[மாமுனிவரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம், ஹரியினிடம ப₄க்தியினால த₄ர்மம் ஜலமாயிற்று. த₄ர்மமாகிய அந்த ஜலத்தை எடுத்து, ஜக₃ந்நாத₂னுடைய ஸந்தோஷத்திற்காக (அவனுடைய) திருவடியானது (என்னால்) மேலான ப₄க்தியுடன் விளக்கப்பட்டது; பாத்₃யம் அர்க்₄யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது; விழுந்த அந்த ஜலத்தைப் பார்த்து நான் (பரிசுத்தப்படுத்தத) தகுந்தவனாயிருக்கிறேன்' என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினான். பிறகு, பலபதினாயிரக்கணக்கான வருஷங்கள், உருத்திரன் அப்படியே (அதை) விடவில்லை.] என்கிறபடியே 'இந்தத் திருவடிகளுக்கு எத்தனையேனும் தாழ்ந்தவர்களும் தகுதி உள்ளவர்களே' என்று உணர்ந்து, தகப்பன் தலையைக் கிள்ளிய பாபம் போவதற்காக எம்பெருமானுடைய ஸ்ரீபாத₃தீர்த்த₂த்தைத் தன் ஜடையிலே த₄ரித்தான்; நல்ல பொருள் ஒரு

வாறே ''விடேன்'' என்று தலையிலே வைத்துத் திருவடியைக் கட்டிக்கொண்டு நெடுங்காலம் நின்றான். [சதுமுகன் கையில் சதுப்புயன்றாளில் சங்கரன் சடையினில் தங்கி] என்றிறே கங்கைக்கு வரலாறு சொல்லுவது. முந்துற ப்₃ரஹ்மாவின் கையிலே இருந்து, பின்னை ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே தங்கி அநந்தரம் ருத்₃ரன் தலையிலே வந்து விழுந்தது. இத்தால் ப்₃ரஹ்மா தான் பெற்றதென்னென்னில், [தாணிநிவந்தளப்ப நீட்டியபொற்பாதம் சிவந்த தன் கையனைத்து மாரக்கழுவினன்] அநேகம் கைகளைப் படைத்ததாலுள்ள ப்ரயோஜநம் § பெறும்படி திருவடியை விளக்கப் பெற்றான். [குறைகொண்டு] தன்னுடைய வெறுமையை முன்னிட்டுக் கொண்டு, [குண்டிகைநீர்பெய்து மறை

வருக்குக் கிடைத்தால் அதை விட மாட்டார்களன்றோ; கிட்டாத இந்த ஸ்ரீபாத₃தீர்த்த₂ம் கிட்டுகையாலே, நெடுங்காலம் தன் தலையிலேயே அந்த ஸ்ரீபாத₃தீர்த்த₂மாகிற கங்கையைத் தலையிலே கட்டிக்கொண்டு நின்றான். [சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் சங்கரன் சடையினில் தங்கி] [பெரியாழ் திரு 4—7—3] என்றல்லவோ பெரியாழ்வார் கங்கைக்கு வரலாறு அருளினார். முதலில் பிரமனின் கையிலே இருந்து, அதற்குப் பிறகு ஸர்வேஶ்வரனான எம்பெருமானின் திருவடிகளிலே தங்கி, அதற்குப்பிறகு உருத்திரன் தலையிலே வந்து விழுந்தது. இதனால் பிரமன் பெற்ற பயன் என்ன என்பது பின்வரும் பாசுரத்தில் சொல்லப்பட்டது:—"தரணி நிவந்தளப்ப நீட்டிய பொற்பாதம் சிவந்த தன் கையனைத்தும் ஆரக்கழுவினன்" [இர—திருவ—78] எட்டுக் கைகளைப் படைத்ததாலுண்டான பயன் பெறும்படி திருவடியை விளக்கினான். [பயனை விளக்கும் நான்முகன் திருவந்தாதி ஒன்பதாம் பாட்டும் அடுத்து விவரிக்கப்படுகிறது.] [குறைகொண்டு] தன்னுடைய வெறுமையை முன்னிட்டுக்கொண்டு; பிரமன் ஜ்ஞான ஶக்திகளால் மிகுந்தவனாயினும், "திருவடிகளுக்குத் தக்கபடி நான் செய்யக் கூடிய உபசாரம் ஒன்றுமில்லை" என்று அநுஸந்தித்

---

§ பெறும்படி என்று சில ஸ்ரீகோசங்களில் பாடமில்லை.

கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி] வேதத்தில் அநந்யபர மான வாக்யங்களைக்கொண்டு;மங்களாஸாஸநம் பண்ணி, [கறைகொண்ட] "இவன் அவிவேகத்தாலே விளைவதறி யாமே அநர்த்த,ரூபங்களாயிருக்குமவற்றைச் செய்யா நின்றான்; இனி இங்ஙனொத்த அமங்களங்கள்வாராதொழிய வேணும்" என்று விஷமப்ரஜைகள் மேலே தீர்த்தத்தைக் கொண்டு "விநீதனாக வேணும்" என்று தெளிக்குமாபோலே ருத்ரன் ஜடையிலே விழும்படி கழுவினான்.

இதுவாகில் அவன் செயல், ‡ அவ்வவ லோகத்திலுள்ள தேவதைகள் செய்ததென்னென்னில், (வானவர் முறை முறைவழிபட நெறீஇ) தேவர்கள் நெறிபட்டு பகவத்

தான் என்று கருத்து. [குண்டிகை நீர் பெய்து மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி] வேதத்தில் எம்பெருமானை நேரே குறிக்கக் கூடியதான புருஷஸூக்தம் முதலான மந்திரங்களைக் கொண்டு மங்களாசாஸனம் பண்ணி, கமண்டலத்திலிருந்த தர்மஜலத்தைத் திருவடியின் மேல் சொரிந்தான். [கறை கொண்ட கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான்] தந்தையானவன் குறும்பு செய்யும் தன் சிறுவனைக் கண்டு 'இவன் பகுத்தறிவின்றிக்கே, விளைவை அறியாமல் தவறான காரியங்களைச் செய்கின்றான். இனிமேலாவது இப்படிப்பட்ட அசுபங்கள் இவனுக்கு வராமலிருக்க வேண்டும்.' என்று அவனை நல்லவனாக்குவதற்காகப் புனித நீரைத் தெளிப்பது போலே, பிரமனும் தன் பிள்ளையான உருத்திரன் சடையிலே ஸ்ரீபாத தீர்த்தம் விழும்படி கழுவினான்.

'இப்படிப் பிரமன் செய்தானாகில், அந்தந்த லோகங்களி லுள்ள மற்றதெய்வங்கள் செய்தது என்ன?' எனில்—(வான வர் முறை முறை வழிபட நெறீஇ) "வானவர் நெறீஇ முறை முறை வழிபட" என்று அங்வயித்துக்கொள்ள வேண்டும்.

---

‡ (பா) அவன் லோகத்திலுள்ள.

ஸமாஶ்ரயணம் பண்ணும்படியைச் சொல்லுகிற ஶாஸ்த்ரங்களின் வழியே திரளாக ஆஶ்ரயிக்க; திருவணுக்கன் திருவாசலில் திரள்திரளாகப் புக்குத் திருவடி தொழுமா போலே ஸமாராத,ந விதி,யின்படியே வழிபட்டாஶ்ரயிக்க. அவ்வளவில் அவன் செய்ததென்னென்னில், (தாமரைக் காடு இத்யாதி,) ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலையை வைத்தால். ஆதி,த்ய ஸந்நிதி,யில் தாமரைபோலே திருக்கண் செவ்வி பெறுமாயிற்று. தாமரைக் காடு அலர்ந்தாற் போலே இருக்கிற திருக்கண்ணோடே கனிந்த வாயையுமுடைத்தாயிருப்பதுமாய். (இருநாயிறு இத்யாதி,) நாமிங்கு காண்கிற ஆதி,த்யனைப் போலன்றிக்கே அநேகமாயிரம் கிரணங்களையும் கீழ்ச்சொன்ன விஶேஷங்களையுமுடையரா

நன்னெறியில் எம்பெருமானை ஆஶ்ரயிப்பதற்குரிய வழிகளை முறையிடும் ஶாஸ்த்ரங்களில் சொன்னபடி கூட்டமாக வணங்கும்படியாக, திருவரங்கத்தில் திருமணத் தூணுக்கு அருகிலுள்ள திருவணுக்கன் திருவாசலிலே திரள்திரளாகப் புகுந்து பெரிய பெருமாளைத் திருவடி தொழுவது போலே, ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட திருவாராதன விதிப்படி தேவர்கள் திருவாராதனம் செய்து திரளாக ஆஶ்ரயித்தார்கள் என்று கருத்து. இப்படி இவர்கள் வழிபடும்போது அவன் செய்தது என்ன என்பதை மேலே விளக்குகிறார்—(தாமரைக்காடு மலர்க் கண்ணொடு கனிவாய் உடையதுமாய்) எவராயிருந்தாலும் தன் திருவடிகள் மேல் தலையை வைத்தால் ஸூர்யனைக்கண்ட தாமரை மலர்வது போலே திருக்கண்கள் மலர்கின்றன; ஆகையால் அஹங்காரமுடையவர்களாயிருந்தாலும் தேவர்கள் வணங்கியவுடன் தாமரைக்காடு பூத்தாற்போலே இருக்கிற திருக்கண்களோடு கனிந்த வாயையும் உடையதாயிருப்பதாய். (இரு நாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன) மிகுந்த கிரணங்களை உடைய ஆயிரம் ஸூர்யர்கள் மலர்ந்தது போல்; நாம் இங்கு காண்கிற ஸூர்யனைப் போல் அல்லாமல், அநேகமாயிரம் கிரணங்களையும் கீழ்ச்சொன்ன பெருமைகளையும் உடைய

யிருப்பார் ஆயிரமாதித்யர்கள் சேர உதித்தாற்போலேயாய், § பலவான கற்பகச்சோலை போலேயுமாய், இப்படியிருக்கிறதேதென்னில் (முடிதோளாயிரந் தழைத்த) ஞாயிறுயிரம் மலர்ந்தாற்போலே இருக்கிறது திருவபிஷேகம்; பலவகைப்பட்ட கற்பகச்சோலை போலே இருக்கிறது அநேகமாயிரமாய்ப் பணைத்த திருத்தோள்கள். (நெடியோய்க்கு) இப்படி தன்னை அழியமாறி இரந்து அவன் கார்யம் செய்து தலைக்கட்டச் செய்தேயும், தன்னை விஸ்வஸித்து உடனே கிடந்தவன் முடியவிழ்த்தவனைப்போலே அநுதபித்து. "மஹாபலிபோல்வார் நலிவதற்கு முன்னே முற்கோலி நோக்கப்பெற்றிலோம், பறிகொடுத்தோம், பிற்பாடரானோம்" என்று || நோக்கி லஜ்ஜித்து ஒன்றும் செய்யாதானாய்த் தன் குறையை நினைத்திருக்குமவனாயிற்று.

ஆயிரம் ஸூர்யர்கள் ஒன்றாக உதித்தது போலேயாய், (கற்பகக் காவு பற்பல வன்ன) பலபலவான கற்பகச் சோலை போலே இருப்பதுமாய். இப்படி இருப்பது எது? எனில்— (முடிதோள் ஆயிரம் தழைத்த) ஆயிரம ஸூர்யர்கள் தோன்றினாற்போலிருக்கிறது எம்பெருமானுடைய கிரீடம். பல வகைப்பட்ட கற்பகச் சோலைபோலே இருக்கிறது பல்லாயிரமாகப் பெருகிய திருத்தோள்கள். (நெடியோய்க்கு) "இவனுக்கு ஒன்றும் செய்யவில்லையே; இன்னமும் என்ன செய்வது" என்னும் நீண்ட நினைவை உடையவனுக்கு. இப்படித் தன்னை யாசகனாக மாற்றிக்கொண்டு யாசித்து இந்திரனுடைய காரியத்தைச் செய்து முடித்த பின்பும, தன்னை நம்பிக் கூடப்படுத்திருந்தவன் வஸ்திரத்தில் முடிந்து வைத்திருந்த பணத்தைத் திருடியவனைப் போலே அனுதாபம் கொண்டு, "இந்த மஹாபலியைப் போன்றவர்கள் துன்புறுத்துவதற்கு முன்னமே முன்வந்து இவனை ரக்ஷிக்கவில்லையே. என்னுடைய ரக்ஷண தர்மம் போய்விட்டதே, பிந்திவிட்டேனே." என்று நினைத்து வெள்கி ஒன்றும் செய்யாதவனாய், தன் குறையை நினைத்து இவனுக்குச் செய்ய வேண்டியவற்றை நீள நினைப்பவன் என்னும் கருத்துடைத்து 'நெடியோன்' என்னும் பதம்.

---

§ இங்கு கற்பகக்காவு பற்பலவென்று ப்ரதீகம் சில ஸ்ரீகோஶங்களில் காண்கிறது. || (பா) என்று நோக்கிற்று.

6. ஓஒ உலகின தியல்வே, ஈன்றோ ளிருக்க
மணைநீ ராட்டிப், படைத்திடந் துண்டுமிழ்ந்
தளந்து, தேர்ந்துல களிக்கும் முதற்பெரும்
கடவுள் நிற்பப், புடைப்பல தானறி
தெய்வம் பேணுதல், தனாது
புல்லறி வாண்மை பொருந்தக் காட்டிக்,
கொல்வன முதலா வல்லன முயலும்,
இனைய செய்கை யின்பு துன்பளித்,
தொன்மா மாயப் பிறவியுள் நீங்காப்,
பன்மா மாயத் தழுந்துமா நளிர்ந்தே.

(நெடியோய்க்கல்லதும் அடியதோவுலகே) இப்படி ஸர்வ ரக்ஷகனை தன்னையொழிய ஜகத்து மற்றும் சிலர் காற்கீழே கிடந்ததோ * மங்களாசாஸநம் பண்ண? எல்லாரையும் ஆஶ்ரயிப்பித்துக் கொள்ளுகிறவர்கள் தலைமேலே காலைவைத்த உனக்கு மங்களாஶாஸநம் பண்ண அடுக்குமோ? உன் காலின் கீழே துகையுண்டவர்களுக்கு மங்களாஶாஸநம் பண்ண அடுக்குமோ? சொல்லிக்காண். 5.

(நெடியோய்க்கு அல்லதும் அடியதோ உலகே?) இப்படி அனைவரையும் ரக்ஷிக்கும் இவனைத்தவிர இவ்வுலகம் வேறொருவன் கால்கீழே கிடந்ததோ அவர்களை மங்களாசாஸநம்செய்ய? பலரையும் முயன்று தங்களை வணங்க வைத்துக்கொள்ளுகிறவர்கள் தலைமேலே கால் வைத்த உனக்கு மங்களாசாஸனம் செய்வது தகுமா? உன் காலின் கீழே மிதியுண்டவர்களுக்கு மங்களாசாஸனம் செய்வது தகுமா? நீயே சொல் என்கிறார். இப்போது 'நெடியோன்' என்றது அனைவரிலும் பெரியவனான திரிவிக்கிரமன் என்று பொருள்படுகிறது. 5.

---

* இங்கு, ''சிலர் காற்கீழேகிடந்தவர்களிலே சிலர்க்கு மங்களாஶாஸநம் பண்ண அடுக்குமோ'' என்று கோசாந்தரங்களில் பாடம் காண்கிறது.

பதவுரை:—உலகு—இப்பூமண்டலத்தை, படைத்து—(ஆதியில்) உண்டாக்கி, இடந்து—(வராஹாவதாரகாலத்தில் அண்டபித்தியிலிருந்து) குத்தி எடுத்து, உண்டு—(ப்ரளய காலத்தில்) அமுதுசெய்து, உமிழ்ந்து—(அவாந்தரஸ்ருஷ்டி காலத்தில்) வெளிப்படுத்தி, அளந்து—(த்ரிவிக்ரமாவதார காலத்தில் திருவடிகளால்) அளந்து. தேர்ந்து—(அதற்கு மேல் ரக்ஷணோபாயத்தைச்) சிந்தைசெய்து, அளிக்கும்—ரக்ஷிக்கும்படியான, முதல் பெரும் கடவுள்—ஆதிகாரணனும் பரதேவதையுமான ஸ்ரீமந்நாராயணனை, நிற்ப—(ஆஶ்ரயணீயனாக) இருக்க, (அவனை விட்டு), புடை—(அவனுடைய) விபூதியாகச்சொல்லப்பட்டனவாய், பல—பல வகைப்பட்டனவாய், தான் அறி தெய்வம்—(ஆஶ்ரயிக்கும்) தான் அறிந்த (சில) தேவதைகளை, பேணுதல்—(ரக்ஷகனாக) ஆதரிக்கை, தனது புல் அறிவு—தன்னுடைய கீழான புத்தியை, ஆண்மை பொருந்த காட்டி- பெரியோர்கள் (மனத்தில்) படும்படிக் காண்பித்து, ஈன்றோள் இருக்க—பெற்றவள் இருக்கும்போது, (அவளைக் கவனியாமல்), மணை நீராட்டி—(அசேதநமான) மணைக்கு நீராட்டுவது போலிருக்கிறது; செய்கை—(அத்தேவதைகளின்) செய்கைகள், கொல்வன முதலா—ஹிம்ஸிக்கை முதலிய, அல்லன முயலும்—செய்யத்தகாத காரியங்களைச்செய்கையாகிற, இனைய—இப்படிப்பட்ட தன்மையையுடையவை. அளி—(அத்தேவதைகள் அளிக்கும்) பலமாவது, துன்பு—துக்கத்துடன் கூடிய, இன்பு—ஸுகமாகும்; (ஆகையால் அத்தேவதைகளை ஆஶ்ரயிக்கை) தொல்—அநாதியாய், மா—பெரியதாய், மாயம்—ஆஶ்சர்யகரமான, பிறவியுள்—ஸம்ஸாரத்தில் நின்றும், நீங்கா—நீங்குகையன்றிக்கே, பல் மா—பலவாய், பெரியதாய், மாயத்து—(மோஹத்தை உண்டாக்கக் கூடிய) ஶப்தாதிவிஷயங்களில், நளிர்ந்து—நன்றாக, அழுந்துமா—அழுந்துகைக்கு இடமாகும்; உலகினது இயல்வு—லோகத்தின் ஸ்வபாவம், ஓ ஓ—என்னே!

அவ:—ஆரும்பாட்டு. (ஓ ஓ வுலகு) இவற்றினுடைய ஸத்தையை ஸார்த்த₂மாக உபாதா₃நம்பண்ணிஸ்ருஷ்டித்து. ஸ்ருஷ்டித்த அனந்தரம் "இனிமேல் அவை பட்டதுபடுகிறன" என்றிராதே, சிறியத்தைப் பெரியது நலிந்து மஹாப₃லி போல்வார் பருந்துஇருஞ்சிறைப்போலே அபஹரிக்க, ஸ்ரீய: பதியானவன் தன் மேன்மைபாராதே தன்னை அழித்து ரக்ஷித்த செயலை அநுஸந்தி₄த்து. சேதநராயிருப்பார்க்கு, இவனுக்கு மங்க₃ளாஶாஸநம் பண்ணி வர்த்திக்கவிறே செய்யவடுப்பதுஎன்றார் கீழே. "இவர்கள் தாங்கள் சேதநரான பின்பு, இதிலே ஒருப்படாதொழிவார்களோ?" என்று லௌகிகரைப் பார்த்தார்; அவர்கள் வருந்திக் கைவிடுவது இவனொருவனை யுமேயாய், விரும்புகைக்கும் இவனை யொழிந்தவையாகவமைந்து, "நான்" என்றும் "என்னது" என்றும், ப₄க₃வத்₃ வ்யதிரிக்தரை ரக்ஷகராகத் தேடியும்

---

6. அவ:—"ஜீவர்களுடைய ஸத்தை பயனுடையதாம்படி தேஹேந்திரியங்களோடு படைத்து, அப்படிப் படைத்த பிறகு 'அது எப்படிப் போனால் என்ன?' என்று இராமல் ப₃லம் மிகுந்தவனான மஹாப₃லி ப₃லம் குன்றியவனான இந்திரனைத் துன்புறுத்திப் பருந்து கோழிக்குஞ்சைத் தூக்கிச் செல்வது போலே அவனுடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்ள, லக்ஷ்மீநாத₂னானவன் தன்னுடைய மேன்மையைப் பாராமல் தன்னை யாசகனாக்கிக்கொண்டு இந்திரனை ரக்ஷித்த செயலை அநுஸந்தி₄த்து, அறிவுடைய ஜீவர்கள் இவனுக்குப் பல்லாண்டு பாடி வாழ்வதன்றோ தக்கது" என்றார் சென்ற பாட்டில். அதற்குப் பின் "இவர்கள் அறிவுடையவர்களாய் இருக்கிறார்களே; நாம் சொன்னபடி இவனுக்குப் பல்லாண்டு பாட முற்படுகிறார்களா" என்று உலகிலுள்ள ஸம்ஸாரிகளைப் பார்த்தார், அவர்களோ முயற்சி செய்து எம்பெருமான் ஒருவனையுமே கைவிடுகிறவர்களாய், இவனைத் தவிர்ந்த எதுவாய் இருந்தாலும் அதனை விரும்புகிறவர்களாய், அஹங்காரமம காரங்களுக்கு ஆட்பட்டவர்களாய், எம்பெருமானைத் தவிர்ந்த மற்றவர்களையே ரக்ஷகர்களாகத் தேடிச் செல்பவர்களாய்

போருகிறபடியைக்கண்டு இதிருந்தபடியென்? (17) "एकस्मि-न्नप्यतिक्रान्ते मुहूर्ते ध्यानवर्जिते। दस्युभिर्मुषितेनेव युक्तमाक्रन्दितुं भृशम्" (ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்4யாநவர்ஜிதே। த3ஸ்யுபி4ர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்தி3தும் ப்4ருஶம் ||) என்கிறபடியே ப4க3வத்3 த்4யாநத்திற்கு விச்சே2த3ம்பிறந்தால் அதுக்குப் பரிஹாரமாகத்திருநாமஸங்கீர்த்தநம் பண்ணுகை, சீரிய த4நம் அபஹ்ருதமானால் எல்லாருமறியக் கூப்பிடுமா போலே கீழ்ப்பிறந்த விச்சே2த3த்திற்குக் கூப்பிடக்கடவதிறே; அப்படித் தங்களிழவுக்குக் கூப்பிடவேண்டியிருக்க, அவர்கள் அதுதானுமறியாதே இருக்க, அவர்களிழவு பொறுக்க மாட்டாமை தாம் § "ஓ! ஓ!" என்று கூப்பிடுகிறார்.

இருப்பதைக்கண்டு, 'இப்படியும் உண்டோ?' என்று வருத்த முற்றார்.

17. ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தேத்4யாநவர்ஜிதே।
த3ஸ்யுபி4ர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்தி3தும் ப்4ருஶம் ||

[ப4க3வானுடைய தியானமில்லாமல் ஒரு முகூர்த்தகாலம் சென்றதாகிலும், திருடர்களால் திருடப்பட்டவன் போல் உரக்கக் கதறுவதே தகுந்தது.] என்று ப்ரமாணம் சொல்லுகிறபடியே எம்பெருமானைத் தியானிப்பதற்குச் சிறிது நேரம் இடையூறு பிறந்தாலும் அதற்குப் பரிஹாரமாகத் திருநாமஸங்கீர்த்தனம் பண்ணி, பெருந்தனம் திருடப்பட்டால் அனைவருமறியக்கதறுவது போலே அந்த இடையூறை நினைத்துக் கதற வேண்டியிருக்க. இப்படிக் கதற வேண்டும் என்னும் நினைவுமில்லாமல் இருக்கும் ஸம்ஸாரிகளைப் பார்த்து இப்பாட்டில் ஆழ்வார் அவர்களுடைய இழப்பைப் பொறுக்க மாட்டாமல 'ஓ ஓ" என்று கதறுகிறார்.

---

§ (பா) "ஓ என்று என்று"

வ்யா:—(ஓ ஓ) இருந்தார்இருந்தவிடங்களிலே செவிப் படும்படி கூப்பிடுகிறுர். (உலகினதியல்வே) ஒரு விபூ₄தி யாகத் தன்னை அநுப₄விக்கிற அநுப₄வத்துக்கு விச்சே₂த₃ மின்றிக்கே செல்லுகிறுப்போலே இதொரு விபூ₄தி தன்பக்கல் வைமுக்₂யம் பண்ணும்படி வைப்பதே! இதொரு லோகத்தி னுடைய ஸ்வப₄ாவமே! நீர்இங்ஙனே "ஓ!" என்றிட்டு நெடு வாசிபடக் கூப்பிடுகைக்கு லோகமாகத்தான் செய்ததென் னென்னில், (ஈன்றோளிருக்க மணை நீராட்டி) இராநின்றுர்கள்; உற்பத்திக்கு முன்னே உண்டாக்குகைக்கு ஸாத₄நாநுஷ்டா₂ நம் பண்ணி, பின்னை க₃ர்ப்ப₄த்திலே த₄ரித்து, ப்ரஸவ வேத₃னையை அனுப₄வித்து, அநந்தரம் தண்ணிய தரையிலே இட்டுக்கொடு துவண்டு நோக்கினல், அறிவு பிறந்து

வ்யா:—(ஓ ஓ) அவரவர் இருந்தவிடங்களிலே 'சென்று கேட்கும்படி உரத்த குரலில் கூப்பிடுகிறுர். (உலகினதியல்வே) "நித்ய விபூ₄தியானது அதிலுள்ளவர்கள் தன்னை அநுப₄விக்கிற அநுப₄வத்திற்குச் சிறிதும் இடையூறில்லாமல் நடப்பது போலே, இந்த லீலா விபூ₄தியைத் தன்னிடம் வெறுப்புடைய வர்கள் நிறைந்தவர்களாம்படி படைத்து விட்டானே எம்பெரு மான்! உலகம் முழுவதும் இப்படிப்பட்ட ஸ்வப₄ாபத்தை உடையவர்கள்நிறைந்ததாய் இருப்பதே!" என்று வருந்துகிறுர். 'நீர் இப்படி "ஓ" என்று பெருங்குரலெடுத்துக் கதறும்படி இந்த உலகம் என்ன செய்து விட்டது?' என்னும் கேள்வியெழ (ஈன்றோளிருக்க மணை நீராட்டி) இவர்கள் செய்யும் செயல் பெற்ற தாயிருக்கும்போது அசேதனமானதொரு மணைக்கு நீராட்டுதல் முதலான உபசாரங்களைச் செய்வது போலிருக்கிறது என்கிறுர். பிள்ளை பிறப்பதற்கு முன்பு பிறப்பதற்காக விரதம் இருந்து, பிறகு கர்ப்ப₄த்திலே பத்து மாதம் த₄ரித்து, பிரசவ வேதனையை அநுப₄வித்து, அதறகுப் பிறகு குழந்தை யாய் இருக்கும்போது வெறுந்தரையில் படுத்து இவனுக்குப் பாலூட்டிச் சீராட்டி, தான் மிகவும் நலிவடைந்து இவனை ரக்ஷிக்கிறுள் தாய். இந்தப் பிள்ளை பெரியவனுகி அறிவு பிறந்து இவள் பண்ணின உபகாரங்களை நினைக்கத் தகுதி

பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்குமளவானவாறே அவனை விட்டு, ஒரு உபகாரமும் பண்ணவுமறியாதே இவன் பண்ணின உபசாரத்தை ஸ்மரிக்கவுமறியாதே இருப்பதொரு அசித்பதார்த்தத்தைக்கொண்டாடுவாரைப்போலே, வகுத்த விஷயத்தை விட்டு அப்ராப்த விஷயத்தை ஆதரியா நின்றீர்கள். நீர் ' ஈன்றோள்'' என்று தாயாக நினைக்கிறது தான்ஆரை? என்னில்: (படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுள்) இவையடங்கலும் போகமோக்ஷஸூந்யமாய்த் தமோபூதமாய் அசித்கல்பமாய் இழந்துகிடக்கிறபோது இவற்றினுடைய தசையைக் கண்டு ''ஐயோ!'' என்றிரங்கி (6) ''बहु स्यां'' (பஹு ஸ்யாம்) என்று ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான அநந்தரம் ப்ரளயங் கொள்ள, நீருக்குஞ் சேற்றுக்கும் இளயாத மஹாவராஹமா

பெற்றவளாய் இருக்கும்போது, அவனை விட்டு, ஒரு உதவி செய்யவும் அறிவில்லாததாய், இவன் பண்ணும் உபசாரங்களை நினைக்கவும் அறியாததாய் இருக்கும் அசேதன பதார்த்தமான ஒரு மணைக்கு நீராட்டுதல் முதலான உபசாரங்களைச் செய்வது போலே, எல்லா உறவுமாயிருக்கும் எம்பெருமானை விட்டு, ஓர் உறவும் இல்லாத மற்ற தெய்வங்களைக் கொண்டாடுகிறீர் களே என்கிறார். நீர் ''ஈன்றோள்'' என்று தாயாக நினைப்பது யாரை? எனில்—(படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து தேர்ந்து உலகளிக்கும் முதற் பெருங்கடவுள் நிற்ப) இந்தச் சேதனர்கள் அனைவரும் இவ்வுலக போகமோ மோக்ஷாநுபவமோ இல்லாதவராய் ''ஆஸீதிதம் தமோபூதம்'' [மநு 1—15] என்று மநு சொன்னபடியே தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதியோடு ஒன்றியவராய், அந்த அசேதனத்தோடு ஒருபடிப் பட்டவராய் அறிவிழந்து கிடக்கிற ப்ரளயகாலத்திலே, இவர்களுடைய நிலைமையைக்கண்டு 'ஐயோ' என்று இரங்கி 26. வது பக்கத்திலுள்ள ஆறுவது ப்ரமாணத்தின்படி இவற்றைப் படைத்து, படைத்தபிறகு பூமியானது ப்ரளயத்தில் மூழ்கிப் போக, நீரிலும் சேற்றிலும் சென்று புகக்கூடிய மஹாவராஹ ரூபத்தைக்கொண்டு பூமியைத் தூக்கி எடுத்து, மறுபடியும்

யெடுத்து. திரிய ப்ரளயம் வருமென்று முற்கோலி வயிற்றிலே வைத்து, உள்ளே கிடந்து தளராதபடி வெளிநாடு காண உமிழ்ந்து, எல்லே நடந்து மீட்டு, இப்படி ஸர்வவித, ரக்ஷணங்களையும் பண்ணச்செய்தே, பின்னையும் தன்னை விஶ்வஸித்து அருகே கிடந்தவனை மடிதடவினவனைப்போலே அநுதபித்து, ஒன்றுஞ்செய்யாதாளுய்மேன்மேலென ரக்ஷணோபாயங்களைச் சிந்தித்து, ஒருவரை இருவரையன்றிக்கே வரையாதே எல்லாரையுமொக்க ரக்ஷிக்கிற அத்₃விதீய பரதே₃வதையானவன், "ஆரோ வருவார்" என்று (18) " आशया यदि वा रामः " (ஆஶயா யதி₃ வா ராம:) என்கிறபடியே அவஸர ப்ரதீக்ஷனாய் நிற்க. * இவ்வோ

ப்ரளயம் வருங்காலத்தில் நோவுபடாதபடி ப்ரளயம் வருவதற்கு முன்பே தன் வயிற்றில் வைத்து, நெடுங்காலம் உள்ளே கிடந்து தளர்ந்துபோகாதபடி ஸ்ருஷ்டி காலத்திலே வெளியில் உமிழ்வதாகிற படைப்புத் தொழிலைச் செய்து, மஹாபலி அபஹரித்தபோது 'தானே உடையவன்' என்று விளங்கும்படியாக அனைத்தையும் அளந்து மீட்டு, இப்படி எல்லா விதமான ரக்ஷணங்களையும் செய்தபோதிலும், தன்னை நம்பிக் கூடப் படுத்தவனிடம் முடிச்சவிழ்த்துத் திருடினவனைப்போலே இவை நோவுபட்டதை நினைத்து வருந்தி, 'இவற்றுக்கு ஒன்றும் செய்யவில்லையே' என்று குறைப்பட்டு மேன்மேலே இவற்றை ரக்ஷிக்கும் உபாயங்களைச் செய்து, இப்படி ரக்ஷிப்பதும் ஒருவரிருவரையல்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமையின்றிக்கே எல்லா ஜீவர்களையும் ரக்ஷிக்கிற ஒப்பற்ற பரதெய்வம்,

18. கு₃ஹேந ஸார்த்த₄ம் தத்ரைவ ஸ்தி₂தோऽஸ்மி
தி₃வஸாந் ப₃ஹூந் ।
ஆஶயா யதி₃ வா ராம: புந: ஶப்₃த₃₃பயேதி₃தி॥

[ரா-அ59-3.]

['ராமபிரான் மறுபடியும் கூப்பிடுவரோ' என்னும் ஆசையாலே கு₃ஹனுடன் கூட அங்கேயே பல தினங்கள் தங்கினேன்.]

* (பா) இவ்வுபகாரங்களை

உபகாரங்களைப் பண்ணிற்றிலனாகிலும் ஆஶ்ரயிக்கைக்கு முட்டுப் பொறுக்கும் அத்விதீய பரதேவதை இவனல்லதில்லை.

யயாதி ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணி ஸ்வர்க்கத்திலே இந்த்ரனோடு அர்த்தாஸநத்திலே இருக்கச் செய்தே, "கர்மபூமியில் புண்யக்ருத்துக்களார்?" என்று அவனைக்கேட்க, ஒரு தேவதைமுன்பே பொய்சொல்லிற்றாக வொண்ணாதென்று 'நான் வர்த்தித்த காலத்தில் என்னை எல்லார்க்கும் மேலாகச் சொல்லுவார்கள்' என்ன. "ஆத்மப்ரஶம்ஸை பண்ணினாய், த்வம்ஸ" என்று பூமியிலே விழும்படி சபித்தானென்று, இவ்விடத்தைபட்டர்வாசித்துப்போந்த காலத்திலே

என்ற ஸுமந்த்ரனைப்போலே 'நம்மை ஆச்ரயிக்க யாராவது வருவார்களா?' என்று உங்களை எதிர்பார்த்துக்கொண்டு நிற்க. இந்த உபகாரங்களைச் செய்யாவிடினும் இவனுடைய பரத்வத்தைப்பார்த்தால் இவனைப்போன்ற ஒப்பற்றபரதெய்வம் இல்லை; இவன் இவ்வளவு உபகாரங்களைச் செய்த பின்பும் இவனை ஆச்ரயிக்க முற்படாதிருப்பதே! என்று வருந்துகிறார். இவ்விடத்தில் எம்பெருமானுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் உள்ள நெடுவாசியைத் தெரிவிப்பதற்காக, பின்வரும் ஐதிஹ்யம் பெரியவாச்சான்பிள்ளையால் எடுக்கப்படுகிறது.

யயாதி என்னும் அரசன் உயர்ந்த ஸாதனங்களை அனுஷ்டித்து, ஸ்வர்க்கத்தில் இந்திரனோடு சரியாசனத்தில் இருக்கும்போது "கர்மபூமியான உங்களுடைய உலகில் புண்யம் செய்தவர்கள் யார்?" என்று யயாதியை இந்திரன் கேட்டான். "ஒரு தெய்வத்தின் முன்பு பொய் சொல்லக்கூடாது" என்னும் நினைவாலே "நான் அரசாண்ட காலத்திலே என்னை மற்ற அனைவரைக்காட்டிலும் புண்யசாலியாகச் சொல்லுவார்கள்" என்று யயாதி கூறினான்; உடனே இந்திரன் "உன்னை நீயே புகழ்ந்து கொண்டாய்; ஆகையால் இவ்வுலகிலிருந்து பூமியிலே விழக்கடவாய்" என்று யயாதியை இந்திரன் சபித்தான் என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இந்த்₃ரன் தன்னை ஆஶ்ரயித்துப்பெற்ற உத்கர்ஷமாயிருக்க, அர்த்த₄ாஸநத்திலே இருந்தது பொறுக்கமாட்டாமை 'ஆத்மப்ரஶம்ஸை பண்ணினாய்' என்றொரு வ்யாஜத்தை யிட்டுத் தள்ளினானாயிருந்தது. இதுதான் வேதோ₃பப்₃ரும் ஹணார்த்த₂மாக ப்ரவ்ருத்தமான மஹாப₄ாரதத்திலே எவ் வர்த்த₂த்தினுடைய விஶத₃மாக ருஷி எழுதினான்?" என்று கேட்க, "தான் தன்னோடொக்க உத்கர்ஷத்தைக் கொடுக்க வல்லதுவும், அத்தைப் பொறுக்கவல்லதுவும் பரதே₃வதை யானபின்பு ஆஶ்ரயிக்கப்படுமதுவும் பரதே₃வதை; அல்லா தார் ஆஶ்ரயணீயரல்லர் என்னுமிடம் ப்ரகாஶிக்கைக்காக" என்றருளிச்செய்தார்.

இவ்விடத்தை ப₄ட்டர் ப்ரவசனம் செய்து கொண்டிருந்த காலத்திலே "யயாதி இந்திரனை ஆஶ்ரயித்து இந்தப் பெருமை யைப் பெற்றிருக்க, இப்படிச் சரியாசனத்திலே இருந்ததைப் பொறுக்கமாட்டாமல் 'உன்னை நீயே புகழ்ந்து கொண்டாய்' என்ற வியாஜத்தையிட்டு இந்திரன் அவனைத் தள்ளி விட்டான் என்றது; வேதத்தை விளக்க வந்த மஹாப₄ாரதத்தில் இந்த வரலாற்றை எந்த வேத₃ார்த்த₂த்தை விளக்குவதற்காக ரிஷி எழுதினார்?" என்று சிலர் கேட்க, "தான் தனக்கு சமமான பெருமையைத்தன் அடியார்களுக்குக் கொடுக்கக்கூடியவனும், அப்படிக் கொடுத்த பத₃வியைப் பொறுக்கக்கூடியவனும் பரம் பொருளான எம்பெருமானே; ஆகையால் அவனையே ஆஶ்ரயிக்க வேண்டும்; மற்றதெய்வங்கள் தம்மையொத்த பெருமையை ஒருவனுக்குக் கொடுப்பதும் அரிது; கொடுத்தாலும் அதைப் பொறுக்கமாட்டா- என்னும் விஷயத்தை வெளிப்படுத்துவதற் காகவே இதை ரிஷி எழுதிவைத்தார்" என்று பட்டர் அருளிச் செய்தார் என்பது அவ்வைதிஹ்யம்.

அவனை விட்டால், சுருக்கமொழிய அவனோடு தோள் தீண்டியாயிருப்பாரை ஆஶ்ரயிக்கப் பெறினுமாமிறே— (புடைப்பல தானறிதெய்வம் பேணுதல்) ஒரு புடைகளிலே—அர்த்தவாதத்து அவனுடைய விபூதியைப் பேசுகிறவிடத்திலே, அவனுடைய உத்கர்ஷத்துக்காக இவ்வருகே சிலருக்குச் சில மினுக்கஞ்சொல்லுமே; அத்தைக்கொண்டு கிடந்தவிடமறியாமே ஒதுங்கிக்கிடந்தவற்றையாயிற்று ஆதரிப்பது. அதுதனனிலும் ஒரு தேவதையே இவனுடைய ஸர்வாபேக்ஷிதங்களையுங் கொடுக்கமாட்டாதே. ஒருவனைப் பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷத்தைக் கொடுக்கிறானன்றே. அது வேண்டில் (19) "गतिमिच्छेज्जनार्दनात्" (கதிமிச்சேத் ஜநார்த்தநாத்) என்னக்கடவதிறே. ஆக, விபூதி

அவனை ஆஶ்ரயிக்க விட்டாலும், மிகவும் கீழே இறங்காமல் அவனோடு ஏறக்குறைய ஒத்திருப்பவர்களையாவது ஆச்ரயிக்கிறார்களோ? எனில்: (புடைபபல தானறி தெய்வம் பேணுதல்) ஶாஸ்த்ரங்களில் பரமாத்மாவின் செல்வங்களைப் பேசுகிற விடங்களிலே, அவனுடைய பெருமை விளங்குவதற்காக அவனுடைய செல்வமாய் இருக்கும் சிலருக்கு ஒவ்வொருவிதமாக அவர்களுக்கு இல்லாத சில பெருமைகளைச் சொல்லுவதுண்டன்றோ; அது எத்தகைய இடம் என்பதை அறியாமல், அந்த வாக்கியங்களையே ப்ரமாணமாகக் கொண்டு ஜீவகோடியிலே சேர்ந்தவர்களையாயிற்றுத் தங்களுக்குத் தெய்வமாகக் கொள்ளுவது. அவற்றிலும் ஒரு தெய்வமே அவனுக்கு எல்லா விருப்பங்களையும் அளிக்க வலமை அற்றதாயிற்றே; ஒப்பற்றவனைய் மேலான புருஷார்த்தம் அனைத்தையும் கொடுக்கின்ற பரமாத்மாவைப் போன்றதன்றே அது;

19\. ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநமிச்சேத் ஹுதாஶநாத் ।
ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சேத் கதிமிச்சேத் ஜநார்த்தநாத் ॥ [ப்ரஹ்மாண்டம்]

[ஆரோக்யத்தை ஸூர்யனிடமிருந்து விரும்பக்கடவன்; பணத்தை அக்னியிடமிருந்து விரும்பக்கடவன்; ஈஶ்வரனிடமிருந்து ஞானத்தை விரும்பக்கடவன்; மோக்ஷத்தை

காமனாகிலின்னானைப் பற்றுவான், புத்ரகாமனாகில் இன்னானைப் பற்றுவான், பசுகாமனாகில் இன்னானைப் பற்றுவான் என்று இங்ஙனே ஒன்றுக்கொருவராய்ப் பலராயிருக்கும். (தானறி தெய்வம்) ப்ரமாண ப்ரஸித்₃த₄மாயிருப்ப தொன்றன்றே; ரஜோ கு₃ணத்தாலும் தமோ கு₃ணத்தாலும் மிக்கிருக்கிற தானறியும் தெய்வத்தையாயிற்றுப் பற்றுவது. (பேணுதல்) அவை தனக்கென்னவொரு உத்கர்ஷமில்லாமையாலே, மொட்டைத்தலையனை "பனியிருங்குழலன்" என்று கவிபாடுவாரைப்போலே ஆஶ்ரயிக்கிற இவனுக்கே ப₄ரமாயிற்று, அத்தே₃வதைகளுக்கு ஈஶ்வரத்வம் ஸம்பாதி₃த்துக் கொடுக்கையும். (தனாது) இவன் சொன்னபோதாக அவை ஆஶ்ரயணீயங்களாகிறனவுமல்ல; இவன்றான் அங்கே சில

ஜநார்த்த₃னனிடமிருந்து விரும்பக்கடவன்.] என்கிறபடியே மோக்ஷத்தை விரும்பினால் பரமாத்மாவையே பற்றவேண்டுமன்றோ; மற்ற தெய்வங்களில் "செல்வத்தை விரும்பினால் இன்ன தெய்வத்தைப் பற்ற வேண்டும்; பிள்ளையை விரும்பினால் இன்ன தெய்வத்தைப் பற்றவேண்டும்; கால்நடையை விரும்பினால் இன்ன தெய்வத்தைப் பற்றவேண்டும்" என்று இப்படி ஒவ்வொரு பலனுக்கு ஒருவராய்ப் பலதெய்வங்களைப் பற்ற வேண்டியிருக்கும். (தானறிதெய்வம்) ப்ரமாணங்களில் பரம் பொருளாகப் புகழ்பெற்றிருக்கும் தெய்வமன்றோ இது. தன் கு₃ணத்துக்கேற்ப ரஜோகு₃ணத்தாலும் தமோகு₃ணத்தாலும் மிக்கிருக்கும் தானறிந்த தெய்வத்தையாயிற்று இவன் பற்றுகிறான். (பேணுதல்) அவைகளுக்கு இயற்கையில் எந்தப் பெருமையும் இல்லாமையாலே, மொட்டைத்தலையனை "பனியிரும் குழலன்" [குளிர்ந்தும் பரந்தும் இருக்கிற முடியை உடையவன்] என்று கவிபாடுபவரைப்போலே அவற்றைப் பற்றுகிற இவனுக்கே அவைகளுக்கு ஈஶ்வரத்வத்தைச் சம்பாதித்துக்கொடுப்பதும் பொறுப்பாகிறது. (தனாது............ காட்டி) இவன் சொன்னதாலே, அந்தத் தெய்வங்கள் ஆச்ரயிக்கத்தக்கதாகவும் ஆவதில்லை. இவன் தான் அவர்களிடம் சில ப₂லன்களைப் பெற்றதாகவும் சொல்ல முடி

தா, ப்ரஜையை அறுத்துத்தா'' என்பன சிலவும், நிஷித்₃த₃த்₃ரவ்யங்களைக் கொண்டு பரிமாறவேண்டுவன சிலவும் இவையாயிற்று செயல்கள். ஆஶ்ரயணங்கள் தானே நரகமாயிருந்ததே! இப்படி ஆஶ்ரயித்துப் பெறும் ப₂லத்தைப் பார்த்தால் அதுபெறுமதில் பெருதொழிகை நன்றாயிருக்கும்- (இன்பு துன்பளி) ஸுக₂து₃:க்க₂மிஶ்ரமான ப₂லத்தையாயிற்றுத்தருவது. நிஷ்க்ருஷ்டஸுக₂மான மோக்ஷம அவற்றுக்கில்லையே. ஆகச்செய்ததாயிற்றென்னென்னில், தன்னோடொத்திருப்பானொருவனாய், ப₄வோபகரணபூ₄தனாய், நித்ய ஸம்ஸாரியாயிருப்பானொருவனை ஆஶ்ரயித்துப் ப₂லம் பெறப் பார்த்தவிதுதான் நித்யஸம்ஸாரியாகைக்கு க்ருஷிபண்ணினானாயிற்று-(தொன்மாமாயப் பிறவியுள் நீங்கா இத்யாதி₃)

அறுத்துத்தா' என்று கொலையை விரும்புகின்றன சிலதெய்வங்கள். மது, மாம்ஸம் முதலான தாழ்ந்த பொருள்களை அபேக்ஷிக்கின்றன சிலதெய்வங்கள். அவற்றின் செயல்கள் இப்படி இருக்கின்றன. இப்படி இந்த தெய்வங்களை ஆச்ரயிப்பதே நரகத்தை ஒத்ததாய் இருக்கிறது. இப்படி இவர்களை ஆச்ரயித்துப்பெறும் பலனைப்பார்த்தால் அதைப்பெறுவதைக் காட்டிலும் பெறுமலிருப்பதே நல்லதாயிருக்கும் என்கிறார் மேலே- (இன்பு துன்பு அளி) துன்பம் கலந்த இன்பமாகிற பலனையே இத்தெய்வங்கள் தருகின்றன. துன்பமில்லாத சுகமேயான மோக்ஷத்தைத் தரும் வல்லமை அவற்றுக்கு இல்லையே. ஆக, இந்த தெய்வங்களை ஆச்ரயிப்பவர்களுக்குப் பலிப்பது என்ன என்னும் கேள்வி எழ, தன்னையொத்த ஒரு ஜீவனாய் ஸம்ஸாரம் வளருவதற்குக் கருவியாய், அநாதிகாலமாக ஸம்ஸாரத்தில் உழன்றுவந்த ஒரு தெய்வத்தை ஆச்ரயித்துப் பலன் பெறப் பார்ப்பதின் பயன்: இவனும் என்றும் ஸம்ஸாரத்தில் உழல்பவனாய் ஆவதே என்கிறார்:— (தொன்மாமாயப் பிறவியுள் நீங்காப் பன் மாமாயத்து அழுந்துமாளிகை) அநாதியாய், ஸம்ஸாரத்திற்குக் காரணமாய்

பெற்ருனுகிருனுமல்லன்; இத்தால் ப₄லித்ததாயிற்று-விஶேஷ ஜ்ஞர்க்குத் தன்னறிவில் குறைவை ப்ரகாஶிப்பித்தானுமித்தனை; (தனது புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி) தன்னுடைய ஜ்ஞாநத்தில் அல்பதையை விஶேஷஜ்ஞர்க்குத் தேறும்படி தெரிவிப்பித்து.

ப₄லம்பெறும்போது பரதே₃வதையை ஆஶ்ரயித்துப்பெற வேணுமே; ஆஶ்ரயிக்குமிடத்தில் (20) "निदिध्यासितव्यः" (நிதி₃த்₄யாஸிதவ்ய:) என்றும், (5) "तमेवं विद्वानमृत इह भवति । नान्यः पन्थाः" (தமேவம் வித்₃வாநம்ருத இஹ ப₄வதி, நாந்ய: பந்தா₂:) என்றும் உபாஸந வாக்யங்களிற் சொன்னபடியே காரணவஸ்துவை உபாஸிக்கிறதன்றிறே. (கொல்வன முதலாவல்லன முயலுமினையசெய்கை) 'ஆட்டை அறுத்துத்

யாது; இவன் அந்த தெய்வங்களைப் பற்றியதால பலித்தது என்ன வெனில், அறிவாளிகளுக்குத் தன் அறிவின்மையை வெளிப்படுத்திக் கொண்டான் என்ற இவ்வளவே பலிப்பது. (தனது புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி) தன்னுடைய அறிவின் சிறுமையை அறிவு நிறைந்தவர்களுக்குத் தெரியும்படியாக அறிவித்து.

உண்மையில் பலம் என்று சொல்லக் கூடியது மோக்ஷமே ஆகும்; அதைப் பரமாத்மாவை ஆச்ரயித்தே பெற வேண்டும்.

20. ஆத்மா வா அரே த்₃ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ
மந்தவ்யோ நிதி₃த்₄யாஸிதவ்ய: [ப்₃ருஹ 6—5—6]

[கேட்கத்தக்கதும் நினைக்கத்தக்கதுமான ஆத்மா நேரே காண்பது போன்ற நிலைவருமவரை த்தியானிக்கத் தக்கது.] என்கிறப்ரமாணத்தின் படியும் 25-ம் பக்கத்திலுள்ள 5வது ப்ரமாணத்தின் படியும் உபாஸனவாக்யத்தில் சொன்னபடியே ஜக₃த்காரணப் பொருளை உபாஸித்தேபெறவேண்டும். இவன் உபாஸிக்கிற தெய்வங்கள் அப்படிப்பட்டவை அல்லவே. அவற்றின் தன்மையை விவரிக்கிருர் மேலே— (கொல்வன முதலா அல்லன முயலும் இனைய செய்கை) 'ஆட்டை அறுத்துத் தா, உன் பையனை

பழையதாய், காரணமாயிருக்கிற மாமாயமுண்டு-இம்மாயை "இது ஒருவரால் கடக்க வொண்ணாது" என்று அவனருளிச் செய்த ப்ரக்ருதி; இப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ நிப₃ந்த₄நஜந்மங்களிலேபுக்கு மீள விரகின்றிக்கே, பலவகைப்பட்டிருக்கிற மாமாயமுண்டு-ஶப்₃த₃ாதி₃விஷயங்கள், அவற்றிலே. (நளிர்ந் தழுந்துமே) எடுத்ததனையும் தரையளவுமழுந்தாநின்றன. (உலகினதியல்வே) வகுத்த விஷயத்தைப்பற்றி நிஷ்க்ருஷ்ட ஸுக₂த்தைப்பெறப்பாராதே சேதநர் அப்ராப்தவிஷயத்தை ஆஶ்ரயித்து அநர்த்த₂த்தைப் பெறப் பார்ப்பதே! இதென்ன படுகொலை! என்கிறார்.

இருக்கும் மூலப்ரக்ருதி இங்கு "மாமாயம்" எனப்படுகிறது. 'தை₃வீ ஹ்யேஷா கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா" [கீ₃தை 7-14] [தேவனுடைய என்னால் படைக்கப்பட்டதாய், முக்குணங்கள் நிறைந்ததான இந்த என்னுடைய மூலப்ரக்ருதி ஒருவரால் கடக்க அரியது.] என்று அவனால் கீதையில் அருளிச் செய்யப்பட்ட ஆச்சர்யமான சக்தியை உடைய இந்த மூல ப்ரக்ருதியின் பரிணாமமான தேஹத்தின் தொடர்பால் உண்டாகும் பிறவிகளிலே புகுந்து, இதிலிருந்து மீள வழியில்லாமல் பலவகைப்பட்ட மாமாயங்களாகிற ஶப்₃த₃ ஸ்பர்ஶ ரூப ரஸ க₃ந்த₄ங்களாகிற விஷயங்களிலே, எவ்வளவு எடுத்தாலும் கரையேறமுடியாதபடி அடிமட்டத்தளவும் அழுந்தி நிற்கும். "மாயம்" என்னும் சொல் ஆச்சர்யமான இயல்வுகளை உடைய எப்பொருளையும் குறிக்கும். இங்கு முதலில் உள்ள "மாமாயம்" ஆச்சர்யமான ப்ரக்ருதியையும் இரண்டாவதாக உள்ள "மாமாயம்" ஆச்சர்யமான ஶப்₃த₃ாதி₃ விஷயங்களையும் குறிக்கும். (உலகினதியல்வே) நம் ஸ்வரூபத்திற்குத் தகுந்த தலைசிறந்த சுகத்தைப் பெற நினையாமல், இவ்வுலகிலுள்ள ஜீவர்கள் ஸ்வரூபத்துக்குத் தகாத தெய்வங்களை ஆச்ரயித்து அனர்த்த₂த்தைப் பெற முயல்கிறார்களே! இது என்ன ஆத்ம விநாசம்! என்கிறார்.

7. நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்,
தளிரொளி யிமையவர் தலைவனு முதலா,
யாவகை யுலகமும் யாவரு மகப்பட,
நிலம் நீர் தீகால் சுடரிரு விசும்பும்,
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க,
ஒருபொருள் புறப்பா டின்றி முழுவது
மகப்படக் கரந்துஓ ராலிலை சேர்ந்தவெம்
பெருமா மாயனை யல்லது,
ஒருமா தெய்வம்மற் றுடையமோ யாமே.

பதவுரை:— நளிர் மதி சடையனும்—குளிர்ந்த சந்திரனை தலையில் த₂ரித்துள்ள ருத்₃ரனும், நான் முகம் கடவுளும்—நாலு முகங்களையுடைய பிரமனும், தளிர் ஒளி—தளிர் போன்ற (அழகிய) தேஜஸ்ஸையுடைய, இமையவர் தலைவனும் முதலா—தேவர்களின் அதி₄பனான இந்த்₃ரனும் இவர்கள் முதலான, யாவகை உலகமும்—எல்லாவிதமான லோகங்களும், யாவரும் அகப்பட—எல்லாச் சேதநர்களும் உட்பட, நிலம்—பூமியும், நீர்—ஜலமும், தீ—அக்₃நியும், கால்—காற்றும், சுடர்—தேஜஸ்ஸினால், இரு—வியாபிக் கப்பட்டுள்ள, விசும்பும்—ஆகாசமும், மலர் சுடர்—மலர்ந்த கிரணங்களையுடைய சந்த்₃ரஸூர்யர்களும், பிறவும்—மற்றுமுள்ள வஸ்துக்களும், உடன்—ஒரே காலத்தில், சிறிது—(வயிற்றில்) ஏகதேசத்தில், மயங்க—சேரும்படி, ஒரு பொருள்—ஒருவஸ்துவும், புறப்பாடு இன்றி—வெளிப் படாதபடி, முழுவதும்—எல்லாவற்றையும்,அகப்பட—உள்ளே இருக்கும் வண்ணம், கரந்து—உண்டு (வயிற்றிலே) மறைத்து, ஓர் ஆலிலை—ஒரு ஆலினிலைமேல், சேர்ந்த—நித்₃ரை செய்யுமவனாய், எம்—என்னுடைய ஸ்வாமியாய் பெரு—பெரியனாய், மா—அளவிட்டறிய முடியாதவனாய், மாயனை அல்லது—ஆஶ்சர்யஶக்தியுடைய ஸ்ரீமந்நாரா

யணை ஒழிய, மற்று — வேருன, மா — பெரிய, ஒரு தெய்வம் — ஒரு தேவதையை, யாம் — நாம், உடையமோ — (ஆஶ்ர யணீயராக) உடையராவோமோ?

அவ:— ஏழாம்பாட்டு. (நளிர்மதி இத்யாதி) "சேதந ரெல்லாருக்கும் செய்யவடுப்பது-அவனுக்கு மங்களாஶாஸ நம் பண்ணுகையாயிருக்க, இதரதேவதைகளை ஆஶ்ரயித்து ஸம்ஸாரபந்தம் வர்த்திக்கும்படி பண்ணுநிற்பர்கள். இதென்ன படுகொலை. இவ்வநர்த்தமென்னுல் பொறுக்கப் போகிறதில்லை" என்ருர் கீழ்; "அல்லாதார் செய்தபடி செய் கிருர்கள்; நாம் முந்துறமுன்னம் ‡ இவ்வநர்த்தத்தைத் தப்பப்பெற்ருேம்" என்று உகக்கிருரிதில். "நாட்டார் கண் டார் காலிலே குனிந்து திரியாநிற்க, நமக்கு முந்துற முன்னம் தேவதாந்தரஸ்பர்ஶமின்றிக்கே இருக்கப் பெற்ருேமே; இந்த லாபமே அமையாதோ" என்று ஸ்வலாபத்தைப் பேசி இனியர் ஆகிருர்.

---

7. அவ:— "எல்லா ஜீவர்களும் எம்பெருமானுக்கு மங்களா சாஸனம் செய்வதே தகுதியாயிருக்க மற்ற தெய்வங்களை அடைந்து ஸம்ஸாரத் தளையை வளரும்படி பண்ணிக்கொண் டிருக்கிருர்கள். இது என்ன ஆத்மஹத்தி. இந்த அனர்த் தத்தை என்னுல் பொறுக்கமுடியவில்லை" என்ருர் சென்ற பாட்டில். "மற்றவர்கள் எதையாவது செய்யட்டும். முதன் முதலில் நாம் இந்தஅனர்த்தத்திலிருந்து தப்பிப்பிழைத்தோமே" என்று பேரானந்தத்துடன் இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிருர் இந்தப்பாட்டில். "இவ்வுலகிலுள்ளார் கண்டவர்கள் காலி லெல்லாம் விழுந்து பொழுது போக்கிக்கொண்டிருக்கும்போது நாம் முதல் முதலில் மற்ற தெய்வங்களின் தொடர்பில்லா மல் இருக்கப்பெற்ருேமே. இந்த லாபமே போதாதோ?" என்று தாம்பெற்ற பேற்றைப் பேசி உகப்புடன் நிறைவுபடுத்துகிருர்.

---

‡ (பா) இவ்வர்த்தத்தைப்பெற்ருேம்" என்று.

"அவன் ஸர்வபதார்த்தங்களையும் வயிற்றிலே வைத்து நோக்குகிறபோது நம்மோடொக்க அவன் வயிற்றிலே புக்குப் புறப்பட்டவர்களிலே சிலரை ஆஶ்ரயித்து, பலத்துக்கு அவர்கள் கைபார்த்திருக்கையாகிற இப்புன்மை யின்றிக்கேயொழியப்பெற்ற இதுவே அமையாதோ?" என்று ப்ரீதராய், அல்லாத ப்ரபந்தங்களை அந்தாதியாக்கிக் கொண்டுபோந்த இவர், இத்தை அந்தாதியாக்கமாட்டாதே உகப்புக்குஇதுக்கு மேற்பட இல்லாமையாலே இவ்வநுபவத் தோடே தலைக்கட்டுகிறார். "நளிர்மதிச் சடையனும்" என்று தொடங்கி யாவகையுலகமும் யாவருமகப்படவாயிற்று அவனுண்டது; தன்னோடொக்கச் சிறையிருந்தவர்களிலே சிலரை ஆஶ்ரயித்துப் பெறுவதொரு பலமுண்டோ?

"அவன் உயர்ந்தார் தாழ்ந்தார் என்னும் வாசி பாரா மல் அனைவரையும் அனைத்துப் பொருள்களையும் வயிற்றிலே வைத்து ரக்ஷிக்கும்போது நம்மைப்போல் அவன் வயிற்றிலே புகுந்து புறப்படுகின்றவர் சிலரை ஆச்ரயித்து, பலத்துக்கு அவர்களை எதிர்பார்த்திருக்கையாகிற இந்தத் தாழ்வு இல்லா மல் இருக்கப்பெற்ற இதுவே போதாதோ?" என்று உகந்தவ ராய், தம்முடைய ஆனந்தத்திற்கு இதற்குமேல் ஒன்று மில்லாமையாலே, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகிய மற்ற மூன்று திவ்யப்ரபந்தங்களையும் பரிபூர்ண மான அந்தாதியாக அருளிச்செய்த இவர் இந்த திவ்யப்ரபந் தத்தையும் இதுவரையில் அந்தாதியாக அருளிச்செய்தபோதி லும், முடிக்கும்போது முதல்பாட்டின் முதல்பகுதியோடு மண்ட லிக்கவேண்டும் என்னும் அந்தாதி லக்ஷணத்தை உகப் பின் மிகுதியாலே மறந்தவராய் இவ்வநுபவத்தோடே நிறைவு படுத்துகிறார். "நளிர்மதிச்சடையனும்" என்று தொடங்கி எல்லா அசேதனப் பொருள்களையும், எல்லா ஜீவர்களையும் முழுவதும் தன் வாயினால் விழுங்கினான். தன்னைப்போலே அவனுடைய வயிற்றில் சிறையிருந்த ஜீவர்களாகிற அந்தத் தெய்வங்களை அடைந்து பெறக்கூடிய நற்பயன் ஏதேனும் உண்டோ?—என்பது இப்பாட்டுக்குக் கருத்து.

வ்யா: — (நளிர் மதிச்சடையனும்) ஸாத₄க வேஷந் தோற்ற ஜடையை த₄ரித்துக்கொண்டிருக்கச்செய்தேயும், து₃ர்மாநத்தாலே "ஸுக₂ப்ரத₄நன்" என்று தோற்றும்படி தாழைமடலைக் கீறித் தலையிலே வைப்பாரைப்போலே, குளிர்ந்த சந்த்₃ரனை ஜடையிலே த₄ரித்த ருத்₃ரனும். (நான் முகக் கடவுளும்) அவன்றனக்குங்கூட ஜநகனாய், ஸ்ருஷ்டிக் குறுப்பாக நாலு முக₂த்தையுடையனாயிருக்கிற சதுர்முக₂னா கிற தெய்வமும்; இவர்களிருவரும் இரண்டு கார்யத்துக்குக் கடவராய் அதி₄காரிகளாயிறே இருப்பது. குசவனையும் புறம டக்கியையும்போலே (தளிரொளியித்யாதி₃) போ₄க₃ப்ரவணனா கையாலே அப்ஸரஸ்ஸுக்களை மெய்க்காட்டுக்கொண்டு

வ்யா:— (நளிர்மதிச் சடையனும்) தான் ஒருவனைக் குறித்துத் தவம்புரிபவன் என்பது விளங்கும்படியாகச் சடையைத் தரித்துக் கொண்டிருந்த போதிலும் தான் ஈச்வரன் என்னும் து₃ரபி₄மானத்தாலே, தான் இன்பத்தில் ஆழ்ந்திருப்பவன் என்று விளங்கும்படி தாழைமடலைப் பறித்துத் தலையிலே வைத்துக்கொண்டிருப்பாரைப் போலே, குளிர்ந்த சந்திரனைத் தன் தலையிலே வைத்துக் கொண்டிருக்கும் உருத்திரனும். (நான் முகக்கடவுளும்) அவனையுங்கூடப் படைத்தவனாய், நாலு புறமும் உள்ள பொருள்களைப் படைப்பதற்காக நாலு முகங்களை உடையவனான நான்முகனாகிற தெய்வமும்; இவர்கள் இருவரும் அண்டத்திற்குட்பட்ட வ்யஷ்டிப் பொருள்களை முறையே படைப்பதும் அழிப்பதுமாகிற இரண்டு காரியங்களையும் செய்யும் அதி₄காரிகளாக அல்லவோ இருப்பார்கள்; அதில் சட்டிபானைகளைப் படைக்கும் குயவனைப் போன்றவன் பிரமன்; அப்படிப் படைக்கும் போது தேவையில்லாத மண்ணைக்கழித்துக் கூட்டிப் பானைகளுக்கு உருவம் கொடுக்கிற தண்டமாகிற புறமடக்கியைப் போன்றவன் சிவன். (தளிரொளி இமையவர் தலைவனும் முதலா யாவகை உலகமும் யாவரும் அகப்பட) சொர்க்க போகத்திலே ஆழ்ந்தவனாகையாலே அப்ஸரஸ்ஸுக் களின் உடலழகை அனுபவித்துக்கொண்டு அதற்குத்தக்க

வடிவைப்பேணி தேவர்களுக்கு நிர்வாஹகனாயிருக்கிற இந்த்ரன் தொடக்கமாக எவ்வகைப்பட்ட லோகங்களையும், அவ்வவ லோகங்களிலுண்டான எல்லாச் சேதநரையும் தப்பாமே. (நிலநீரித்யாதி) அவர்களெல்லார்க்குங்காரணமாயிருக்கிற பூதபஞ்சகமும். "சுடரிருவிசும்பும்" என்றது— உண்டாமிடத்தில் மற்றை நாலுக்கு முன்னே §உண்டாமதாகையாலும், அழியுமிடத்தில் அவையழிந்தாலும் தான் சிறிதுகாலம் ‡நின்று அழியுமதாகையாலும் வந்தபுகரைப் பற்ற. (மலர்சுடரித்யாதி) சந்த்ர ஸூர்யர்களும் மற்றுமுள்ள மநுஷ்யாதிகளும் இவையடைய. (சிறிதுடன் மயங்க) சிறியதாய்க்கொண்டு உடனே மயங்க; சிலபேருக்கு இடச்சொல்லி உண்பார் பலருண்டானால் சோறு மட்டமாமா போலே, ரக்ஷ்யமாய்க்கொண்டு நாநாவாய்ப்புகுகிற பதார்த்தங்கள் அளவுபடும்படியாகவாயிற்று தன்வயிற்றிலே வைக்

படி தன்னுடைய உடம்பையும் ஒளியுடையதாக்கிக்கொண்டு தேவர்களுக்குத் தலைவனாயிருக்கிற இந்திரன் முதலான எல்லாவுலகங்களையும், அந்தந்த லோகங்களிலுள்ள எல்லா ஜீவர்களையும் ஒருவர் தப்பாமல். (நிலம் நீர் தீ கால் சுடர் இரு விசும்பும்) அண்டத்தின் உள்ளிருக்கும் இவர்கள் அனைவருக்கும் காரணமாயிருக்கும் பூமி ஜலம் அக்னி வாயு சிறப்பு மிக்க ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களும்; இந்த ஆகாயமானது மற்ற நாலு பூதங்களுக்கும் காரணமாகையாலே அவற்றுக்கு முன்னால் உண்டாவதாய், அழியும் அவை அழிந்த பின்பு சிறிது காலம் கழித்தே அழிவதாகையால் இதற்குள்ள சிறப்பை நோக்கி "சுடர் இரு விசும்பு" என்று சிறப்பிக்கிறார். (மலர் சுடர் பிறவும்) மலர்ந்த கிரணங்களை உடைய சந்திரனும் ஸூர்யனும் மற்றுமுள்ள மனிதர் முதலான ஜீவர்களும் ஆகிய அனைத்தும். (சிறிதுடன் மயங்க) ஒரேகாலத்தில் வயிற்றின் ஒருபகுதியிலே சேரும்படி; சில பேருக்கு இடுவதற்காக உணவு சமைத்த பின் உண்பவர் பலர் வந்துவிட்டால் அவரவருக்குச் சோறு சிறிதாக ஆகிவிடுவதுபோலே எம்பெருமான் தன்னுடைய காக்கும் த்வரையாலே பாரிப்பு மிகுந்திருக்க அவனால் வயிற்றில் வைத்து ரக்ஷிக்கப்படுபவையான பல

---

§ (பா) உண்டாய். ‡(பா) நின்றுஅழியும்படிதாழ்க்கையாலும்.

கிறபோது பாரிப்பின் பெருமை. இவையடங்க அல்பமாகக் கொண்டு ஒன்று ஒன்றைவிடாதே தன் பக்கலிலே கலச. அன்றிக்கே, ''சிறிதுடல் மயங்க'' என்றுபாட₂மாய், ஓராலந் தளிரினுள்ளடங்கின வடிவிலே கலச. ''உடன், உடல்'' என்கிறவிடத்தில் னகர லகரங்களுக்கொரு விரோத₄மில்லை. (ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்பட) ஒருபத₃ார்த₂மும் பிரிகதிர்ப்படாதபடி எல்லாவற்றையும்; (கரந்து) ப்ரளயம்வந்தால் முன்புற்றைக்காட்டிலும் வயிற்றை இளைத்துக்காட்டலாம்படி ஒரு விக்ருதியின்றிக்கே இருக்கை. (ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனை யல்லது) இவற்றை இப்படி வயிற்றிலே வைத்துத் தான் முகிழ்விரியாதே பவனு

பொருளும் அவனுடைய பாரிப்புக்கு ஈடுகொடுக்க மாட்டாமையாலே உலகமுண்ட பெருவாயனுை அவனுடைய உணவும் சிறிதாயிற்று — வயிற்றின் ஒரு மூலைக்கே போதுமானதாயிற்று. ''உடன்'' என்றது ஒரே காலத்தில் உண்டதைச் சொல்லுகிறது. ''சிறிது மயங்க'' என்றது இவையெல்லாம் அவனுடைய பாரிப்புக்கெல்லாம் ஈடுகொடுக்க மாட்டாமல் சிறிதாகி ஒன்றையும் விடாமல் உண்டபோதிலும் வயிற்றின் ஒரு மூலையிலேயே கலந்தது. இப்படியல்லாமல் ''உடன் மயங்க'' என்றதை ''உடல் மயங்க'' என்றும் பிரிக்கலாம். அப்போது ''ஓர் ஆலந்தளிரினுள் அடங்கின சிறிய திருமேனியிலே இவையனைத்தும் கலந்தன'' என்று பொருள்படுகிறது. ''மயங்க'' என்று கலத்தலைச் சொல்லுகிறது. (ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்பட) ஒரு பொருளும் வெளிச் செல்லாதபடி எல்லாப்பொருளையும். (கரந்து) உலகில் மிகுதியாகச் சாப்பிட்டால் வயிறு பெருத்துவிடும்; இவன் விஷயத்தில் எல்லா உலகமும் வயிற்றின் ஒரு மூலையிலே மறைந்துவிடுகையாலே பிரளய காலத்தில் அனைத்தையும் உண்டபிறகு முன்பிருந்ததைக்காட்டிலும் வயிற்றை இளைத்ததாகக் காட்டலாம்படி வயிறு பெருத்துப்போகையாகிற விகாரமில்லாமல் இருந்ததைச் சொல்லுகிறது. (ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனை அல்லது) இவற்றை இப்படி வயிற்றிலே வைத்துத்

யிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்த நம்முடைய ஆஶ்சர்யஶக்தியுக்தனையொழிய; [பாலன்றனதுருவாய் ஏழுலகுண்டு] (21) ''यशोदास्तनन्धयमत्यन्तं विमुग्धम्'' (யஶோதா₃ஸ்தநந்த₄யமத்யந்தம் விமுக்₃த₄ம்) என்னும்படி முக்₃த₄மான வடிவையுடையனாய், ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து. [ஆலிலையின் மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்] ''ஆலின் மேலோரிளந்தளிரிற் கண்வளர்ந்த ஈசன்'' என்கிறபடியே முகிழ்விரியாத ஆலந்தளிரிலே, த₄ரிக்கைக்கு ஒரு யஶோதா₃தி₃களின்றிக்கேயிருக்க நீ கண்வளர்ந்தருளினவற்றை ''மெய்'' என்று ஆப்தரான

தான் அப்போதே அலர்ந்துகொண்டிருக்கும் முகிழ் விரியாததொரு ஆலந்தளிரிலே கண் வளர்ந்தருளிய நம்முடைய அக₄டிதக₄டனா சக்தியை (பிறரால் இயலாதவற்றையும் இயலவைக்கும் சக்தியை) உடைய எம்பெருமானையொழிய. இவ்விஷயத்தை விளக்கும் முதல் திருவந்தாதிப் பாட்டு [69]இனி விவரிக்கப்படுகிறது.

[பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு]

21. யஶோதா₃ஸ்தநந்த₄யமத்யந்தம் விமுக்₃த₄ம்

[மிகவும் அழகியதான யசோதையின் கைக்குழந்தை] என்கிறபடியே சிறுகுழந்தைவடிவை உடையவனாய், எல்லா உலகங்களையும் வயிற்றிலேவைத்து. [ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்] ''ஆலின்மேல் ஓரிளந்தளிரில் கண் வளர்ந்த ஈசன்'' [பெரிய திரு 2—10—1] என்கிறபடியே அப்போதே அலர்கின்ற ஆலந்தளிரிலே, உன்னைப் பரிவுடன் மடியில் த₄ரிக்கைக்குத் தாயன்புடைய யசோதை போன்ற ஒருவரும் இல்லாதிருக்க, நீ சயனித்துக்கொண்டிருந்ததை ''உண்மையானது'' என்று உள்ளதை உள்ளபடி சொல்லும் ரிஷிகள் இதிஹாஸ புராணங்களிலே எழுதுகிறார்கள்.

ருஷிகள் எழுதாநின்றார்கள். (22) "कथं त्वयं शिशुश्शेते लोके नाशमुपागते । शाखायां वटवृक्षस्य पल्लवे तु शुचिस्मितः ॥" (கதம் த்வயம் ஶிஶுஶ்ஶேதே லோகே நாஶமுபாகதே। ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவே து ஶுசிஸ்மித:॥) என்றுயிற்று அவர்களெழுதுகிற பாசுரம். [ஆலன்று வேலை நீருள்ளதோ] அவ்வால்தான் அன்று மண்ணைக் கரைத்துப் பொகட்ட ஜலத்திலேயுள்ளதோ? நிராலம்பநமான ஆகாசத்திலேயுள்ளதோ? அன்றிக்கே, கார்யாகாரங்குலைந்து கரந்துகிடக்கிற மண்ணிலேயுள்ளதோ? [சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு] பருவம் நிரம்புவதற்கு முன்னே ஏழுபிராயத்திலே ஒருபடிப்பட மலையை தரித்துக்கொண்டு நின்ற நீ சொல்லு; இதுவுமோராஶ்சர்யமிறே; இதுவுஞ் சொல்லவேணும், அதுவுஞ் சொல்லவேணும்; இவை மூன்றும்

---

22. கதம் த்வயம் ஶிஶு: ஶேதே லோகே நாஶமுபாகதே।
ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவே து ஶுசிஸ்மித:॥
[பார-ஆர 188-94]

[உலகமெல்லாம் நாஶமடைந்த பிறகும், ஆலமரக்கிளையிலுள்ள இளந்தளிரில், இனிய புன்முறுவலுடன் கூடிய இக்குழந்தை எப்படிப்படுத்துக்கொண்டிருக்கிறது?] என்பதல்லவோ அவர்கள் அனுபவித்தெழுதியபாசுரம். [ஆலன்றுவேலைநீருள்ளதோ?] அந்த ஆலிலை தான் அன்று மண்ணைக்கரைத்து மூழ்கடித்த ஜலத்திலே உள்ளதோ? [விண்ணதோ?] ஆதாரமற்ற ஆகாஶத்திலே இருக்கிறதோ? [மண்ணதோ?] அல்லது காரியநிலை குலைந்து காரணத்திலே மறைந்து நிற்கும் மண்ணிலே உள்ளதோ? [சோலைசூழ்குன்றெடுத்தாய் சொல்லு] பாலப்பருவம் நிறைவதற்கு முன் ஏழுவயதிலே பலநாட்கள் ஒரே ரீதியில் கையாலே கோவர்த்தன மலையைத் தரித்துக் கொண்டு நின்ற நீயே சொல்லவேண்டும். சிறிய வடிவிலே ஏழுலகுண்டதுபோலே இதுவும் ஓர் ஆச்சர்யமன்றோ. இதுவும் சொல்லவேணும், அதுவும் சொல்லவேணும். சிறு குழந்தை வடிவிலே ஏழுலகையும் உண்டதும், ஆதாரமற்ற ஓர் ஆலிலையில் பள்ளிகொண்ட

விஸ்மயமாயிருப்பன சில அகடிதங்களாயிருந்தன. "அவன் பின்னை இவர்களுக்குச் சொன்ன உத்தரமேது?" என்று படட்டரைக்கேட்க. "அவன்றானும் 'ஆழ்வார் வந்தால் கேட்கக்கடவோம்' என்று நினைத்திருந்தான் காணும்" என்ன. பின்னையும் "நீ ஸர்வாதார பூதனுமித்தனை போக்கி உன்னை யொழியப் புறம்பேயொன்றுக்கொன்று ஆதாரமாக வல்லதொன்றுண்டோ? அன்று அவன் ஸர்வாதாரபூதனா யிருக்கிறபடியைக்கண்டு இதோராச்சர்யமே! என்று விஸ்மிதரானார்" என்றருளிச்செய்தார். இப்படிப்பட்ட ஆஸ்சர்ய யோகத்தைச் சொல்லுகிறது—(பெருமாமாயன்) என்று. அவனையொழியப் புறம்பே கால்காணித் தெய்வமுடை

துவம், சிறுவனாய் இருக்கும்போது பல நாட்கள் ஓர் மலையைக் கையால் தரித்ததும் ஆகிய இம்மூன்றும் உலகில் மற்ற எவராலும் செய்ய முடியாத வியக்கத்தக்க செயல்களாய் இருந்தன. இவற்றை எப்படி உன்னால் செய்ய முடிந்தது என்பதை நீயே சொல்லவேண்டும் என்று கருத்து. "அவன் இவ்வாழ்வாருக்குச் சொன்ன பதில் என்ன?" என்று பட்டரைக் கேட்க, "ஆழ்வார் இதற்குப் பதிலை நன்கு தெரிந்துகொண்டே கேட்கிறாராகையாலே எம்பெருமானும் "ஆழ்வார் நிர்ப்பந்தித்துக் கேட்க வந்தால் அவரையே இதற்கு பதிலை கேட்கக்கடவோம்' என்று நினைத்திருந்தான் காணும்" என்றும், அதற்கு மேல் —"நீ எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமாய் இருப்பவனே யொழிய உன்னைத்தவிர மற்றவை ஒன்றுக்கொன்று ஆதாரமாகக் கூடியது உண்டோ? அந்தப்பிரளய காலத்திலும் தான் உண்ட எல்லாப்பொருள்களுக்கும் தான் படுத்திருக்கும் ஆலிலைக்கும் அவனே ஆதாரபூதனாயிருக்கிறபடியைக்கண்டு இப்படியும் ஓர் ஆச்சர்யமா? என்று வியப்படைகிறார்" என்றும் பட்டர் அருளிச்செய்தார் என்பர் பெரியவாச்சான் பிள்ளை. இப்படிப்பட்ட ஆச்சர்யத்தை உடையவனாய் இருக்கையைச் சொல்லுகிறார்—(பெருமா மாயன்)என்று. (பெருமா மாயனை அல்லது ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே) அவனைத் தவிர உலகில் ஒரு சிறுபகுதிக்குத் தலைவரான மற்ற தெய்வங்களைத் தெய்வங்களாகக் கொண்டவர்களோ நாம்? அந்த தெய்

யோமோ நாய்? "முந்துற ரக்ஷகனாகிறேன்" என்று பச்சை இடுவித்துக்கொண்டு. சிலநாள்கழிந்தவாறே வடிவைக் காட்டி "நானுமுன்னைப்போலே ஸாதகன்காண்" என்று சொல்ல, அவனை விட்டாற்போலே, எடுத்துக் கழிக்கைக்குத் தான் ஒரு தேவதையுண்டோ நமக்கு? மார்க்கண்டேயனை "ரக்ஷிக்கிறேன்" என்று சொல்லிப் பச்சையிடுவித்துக் கொண்டு அநந்தரம் ஜடையைக்காட்டி "நானு முன்னைப் போலே ஸாதகன், ஒருதலையைப்பற்றிக் காணிருப்பது; என்னையாஶ்ரயியுங்கோள் என்று பிறர்சொல்லும் வார்த்தையை 'மெய்' என்று விஶ்வஸித்திருக்கும்படி ப்ரமித்தாயாகாதே; பொறு; உனக்கு ஆஶ்ரயணீய ஸ்த்தலங்காண்" என்று கொடுபோய் ஸர்வேஶ்வரனைக் காட்டிக்கொடுத்தானிறே.

வங்கள் தங்களுடைய பக்தர்களுக்குத் தாங்கள் ரக்ஷகர்களாவதாகச் சொல்லி அவர்களுடைய காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, சிலநாள் சென்றவுடன் தங்களுடைய வடிவைக்காட்டி "நானும் உன்னைப்போலே ஒருவனைக்குறித்துத் தவம் புரிபவனே" என்று சொல்ல, அவர்களை விட்டு விலகும்படி இருக்கும். ஆகையால் எடுத்துக் கழிப்பதற்கும் தமக்கு ஒரு தெய்வம் இல்லை. அந்த தெய்வங்களுடைய தன்மை மார்க்கண்டேயருடைய வரலாற்றிலே காணலாம்படியிருக்கிறது. சிவபக்தரான மார்க்கண்டேயரை "உனக்கு ரக்ஷகனாயிருக்கிறேன்" என்று கூறி அவருடைய காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டிருந்து அவர் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புற்று மோக்ஷம் வேண்டுமென்று கேட்டபோது சடைமுடியோடு கூடிய தன் வடிவைக்காட்டி "நானும் உன்னைப்போலே நாராயணனைக்குறித்துத் தவம் செய்பவன்; நானும் ஒரு தலைவனைப்பற்றி இருப்பவனே; என்னையே பரதெய்வமென்று மயங்கிச் சிலர் என்னை அடையச் சொன்னதை உண்மையென்று நம்பி மயங்கிவிட்டாய் போலிருக்கிறது. ஆனால் சற்றுப் பொறு. நீ அடைய வேண்டிய இடத்தைக் காட்டுகிறேன்" என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு சென்று ஸர்வேஶ்வரனான நாராயணனைக் காட்டிக் கொடுத்தானன்றோ உருத்திரன். "கண்டும் தெளிந்தும் கற்றார்" [திருவாய் 7—5—7] என்னும் பாட்டில் இவ்வாழ்வாரே இவ்வரலாற்றைத் தெளிவாகக் காட்டினார்.

(23) "ब्रह्माणं ‡ नीलकण्ठं च याश्चान्या देवताः स्मृताः । प्रतिबुद्धा न सेवन्ते यस्मात् परिमितं फलम् ॥" (ப்3ரஹ்மாணம் ‡ நீலகண்ட2ஞ்ச யாஶ்சாந்யா தே3வதாஸ் ஸ்ம்ருதா:। ப்ரதிபு3த்3தா4 ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப2லம்||) ப்3ரஹ்மாவையும் ருத்3ரனையும் அல்லாத தே3வதைகளையும் அறிவுடையராயிருப்பார் ஆஶ்ரயியார்கள்; அதுக்கடியென்னென்னில், பரமபுருஷார்த்த2லக்ஷணமோக்ஷத்திலே இவனுக்கு அபேக்ஷையுண்டானால் அவர்கள் அது கொடுக்கமாட்டார்களே, அவர்களுக்குமோக்ஷப்ரத3த்வமில்லாமையாலே; இனி இவ்வருகேசிலவற்றையிறே கொடுப்பது; அவை அல்பமிறே; அவை அவன் இவனுக்குக்கொடுக்கவுமாய், இவனவனுக்குக்

---

23 ப்3ரஹ்மாணம் நீல [ஶிதி] கண்ட2ம் ச யாஶ்சாந்யா
தே3வதா: ஸ்ம்ருதா: ||
ப்ரதிபு3த்3தா4 ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப2லம்||
[பார—சாந்தி 350-36]

[பிரமனையும் உருத்திரனையும் மற்றும் தேவதைகளாகச் சொல்லப்படும் யாவரையும் ஞானிகள் ஸேவிக்கமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் அளிக்கும் ப2லன் அளவுள்ளது] என்று மஹாபா4ரதத்தில் மற்ற தெய்வங்கள் அறிவாளிகளால் ஆஶ்ரயிக்கத் தக்கவர்கள் அல்லர் என்னும் விஷயம் சொல்லப்பட்டது. இதன் கருத்தாவது :—பிரமனையும் உருத்திரனையும் மற்ற தெய்வங்களையும் அறிவுள்ளவர்கள் ஆஶ்ரயிக்கமாட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், தலைசிறந்த புருஷார்த்த2மான மோக்ஷத்தை இவன் விரும்பினால் அவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கும் வல்லமை இல்லாமையாலே அவர்கள் அதைக் கொடுக்கமாட்டார்கள். இவ்வுலகிலுள்ள ப்ராக்ருதமான ப2லன்களையே அவர்கள் கொடுக்க முடியும். அப்பலன்கள் மிகத்தாழ்ந்தவையாகவும் நிலைநில்லாதவையாகவும் இருக்கும். அத்தகைய ப2லன்கள் அந்தத்தெய்வம் இவர்களுக்குக் கொடுப்பதுபோலே இவர்களும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியவையாய் உள்ளன.

---

‡ (பா) शितिकण्ठं (ஶிதிகண்ட2ம்)

கொடுக்கவுமாயிறே இருப்பது. (24) "स्कन्दरुद्रमहेन्द्राद्याः प्रतिषिद्धास्तु पूजने" (ஸ்கந்த ருத்₃ரமஹேந்த்₃ராத்₃யா: ப்ரதிஷித்₃த₄ாஸ்து பூஜநே) "திருவடிதன்நாமம் மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்னக்கடவதிறே. ப₄ர்த்தாவின்பக்கல் ஆநுகூல்யமற்றிருக்க, ப₄ர்த்ரந்தரபரிக்₃ரஹம் பண்ணுதொழிகையிறே இவள் அவனுக்காகையாகிறது; ப₄க₃வத்ப்ராவண்யம் க்ரமத்திலே பிறக்கவுமாம், இவனுக்கு முந்துற வேண்டுவது-தே₃வதாந்தர ஸ்பர்ஶம் அறுகையிறே; இதுண்டானல் யோக்₃யதை கிடக்குமிறே. 7.

— ஆழ்வார் திருவடிகளே சரணம் —
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்,
திருவாசிரிய வ்யாக்யானம் முற்றிற்று.

---

24 ஸ்கந்த₃ருத்₃ரமஹேந்த்₃ராத்₃யா: ப்ரதிஷித்₃த₄ாஸ்து பூஜநே ।
ஜ்ஞாத்வைவம் ப₄க்திஸாங்கர்யம் ந குர்யாதே₃வமேவ ஹி॥
[ஸ்கந்த₃ன், ருத்₃ரன், இந்திரன் முதலான தே₃வதைகள் பூஜை செய்யும் விஷயத்தில் (ஞானிகளால்) விலக்கப்பட்டிருக்கிருர்கள். இப்படி அறிந்து, இம்மாதிரியாகவே ப₄க்திக் கலப்பைச் செய்யாமலிருக்கக் கடவன்.] என்று அதனுலேயே இவர்களை ஆஶ்ரயிக்கக்கூடாது என்று ஶாஸ்த்ரங்கள் தடுத்தன. திருமழிசையாழ்வாரும் நான்முகன் திருவந்தாதியில் [68] "திருவடி தன் நாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்றல்லவோ வைஷ்ணவ லக்ஷணத்தை அருளினர். ஒரு மனைவிக்குக் கணவனோடு மனஸ்தாபம் உண்டாயிருந்தாலும் மற்ருெரு மனிதனைக் கணவனாக அவள் பற்ருதவரையில் அவனுடைய மனைவி என்னும் ஸ்தானம் நிலைத்திருக்குமன்ருே. அதுபோலே ஒரு ஜீவனுக்கு எம்பெருமானிடம் ஈடுபாடு காலக்ரமத்தில் பிறந்தாலும் பரவாயில்லை. அவனுக்கு முதலில் அவசியம் வேண்டியது மற்ருெரு தெய்வத்தின் தொடர்பு இல்லாமலிருக்கையே ஆகும். இந்தப் புறந்தொழாமை இருந்தால் எம்பெருமானை மறந்திருப்பவனுக்கும் மறுபடியும் அவனுக்கு அடியவனுகத் தகுதி உண்டன்ருே; அதை வலியுறுத்தவே "ஒருமாதெய்வம் மற்றுடையமோயாமே" என்று இந்த தி₃வ்ய ப்ரப₃ந்த₄த்தைத் தலைக்கட்டுகிருர் நம்மாழ்வார்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி தாஸன் இயற்றிய
திருவாசிரிய வ்யாக்யான விவரணம் நிறைவுற்றது.
ஆழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

2592